சிவமயம்.

# விபூதிருத்திராக்ஷதாரண நிரூபணம்

ஸ்ரீமத். அப்பயதீக்ஷிதரவர்கள் வம்சாத்தினமாகிய
இராஜ மன்னார்குடியில் வசிக்கும்
பிரம்மஸ்ரீ மஹா மஹோபாத்தியாயர்
ஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதரவர்களால்
வடமொழியிலியற்றப்பட்ட துர்ஜ்ஜநோக்திநிராசம்
என்ற கிரந்தத்தின் மொழிபெயர்ப்பு.

---

எட்டயபுரம்
கவிகேசரி ஸ்வாமி தீக்ஷிதரவர்கள் சகோதரராகிய
வியாகரண வித்வான் பிர்ம ஸ்ரீ
வெங்கடாசல தீக்ஷிதரவர்களால்
மொழிபெயர்க்கப்பெற்ற
இஃது
விருதுபட்டி சிவாலயத்திருப்பணி
ஸ்ரீ ஸ்ரீ
வி. சிவஞானயோகிகளால்
இயற்றப்பட்ட கருத்துரையுடன்.

---

மகா - ராஜ - ராஜஸ்ரீ சிங்கம்பட்டி ஜமீன்தார்
பொதிகாசலபதியாகிய
T. N. சிவசுப்பிரமணியதீர்த்தபதியவர்களால்
சென்னை:
கலாரத்நாகரம் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.
1901.

Copy Right Rigistered.

ஶ்ரீ கணேஶாய நம:

பிர்ம ஸ்ரீ முன்னீர்ப்பள்ளம்.

# இராமஸ்வாமி கனபாடிகளால்

இயற்றப்பட்டது.

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible] - (2) ॥

எட்டயபுரம். வியாகரணவித்வான்

## பிர்மஸ்ரீ சங்கரநாராயணசாஸ்திரிகள்

அவர்களாலியற்றப்பட்டது.

---

[illegible]
[illegible] ।
[illegible] ।
[illegible] ।
[illegible] - (1)

[illegible] - (2)

எட்டயபுரம். வித்வான் பிரம்மஸ்ரீ
சற்குருநாத சாஸ்திரிகள்
அவர்களாலியற்றப்பட்டது.

---

[illegible] - (2)

---

# விபூதிருத்திராக்ஷதாரண நிரூபணத்தில்

## உதகரிக்கப்பட்ட நூல்கள்.

| எண். | நூலின் பெயர். |
|---|---|
| | 1 |
| 1 | யஜுர்வேதம் |
| 2 | ருத்திராத்தியாயம் (யஜுர் வேதம்) |
| | 2 |
| 3 | அதர்வசிரோபநிஷத் (அதர்வணம்) |
| 4 | தைத்திரீயோபநிஷத் (யஜு[சு |
| 5 | ஜாபாலோபநிஷத் (சு. ய. வாஜஸநேயஸம்ஹிதை) |
| 6 | வாசுதேவோபநிஷத் (ஸாம |
| 7 | காலாக்நி ருத்திரோபநிஷத் (யஜுஸ்) |
| 8 | பிரஹத்ஜாபாலோபநிஷத் (அதர்வ) |
| | 3 |
| 9 | வாமன புராணம் |
| 10 | சூதசங்கிதை (ஸ்காந்தம்) |
| 11 | வாயுசங்கிதை (சிவபுராணம்) |
| 12 | காருடபுராணம் |
| 13 | பாத்மபுராணம் |
| 14 | நாரதீயபுராணம் |
| 15 | ஸ்காந்த புராணம் |
| | 4 |
| 16 | மானவ புராணம் |
| 17 | பராசர புராணம் |
| 18 | வாசிஷ்டலைங்கம் |
| | 5 |
| 19 | மஹாபாரதம் |
| 20 | பகவத்கீதை (பாரதம்) |
| 21 | உத்தரராமாயணம் |
| 22 | ஹரிவம்சம் |
| 23 | பிரமோத்தர கண்டம் |
| | 6 |
| 24 | சிரௌதம் |
| 25 | ஆபஸ்தம்ப சூத்திரம் |

| எண். | நூலின் பெயர். | எண். | நூலின் பெயர். |
|---|---|---|---|
| | 7 | 41 | சாதாதபஸ்மிருதி |
| | | 42 | மிதாக்ஷரை |
| 26 | கௌதம சூத்திரம் | 43 | ஆங்நிகதிருதலோகாக்ஷி |
| 27 | பூர்வதந்திரம் | 44 | புருஷார்த்தப் பிரபோதம் |
| 28 | ஜயமுனி சூத்திரம் | | |
| 29 | வாமனாசாரியர் காரிகை | | 8 |
| 30 | வியாசஸ்மிருதி | | |
| 31 | கௌதமஸ்மிருதி | 45 | பிர்மசூத்திரம் |
| 32 | ஆரீதஸ்மிருதி | 46 | நியாயசாஸ்திரம் |
| 33 | மாதவீயஸ்மிருதி | 47 | சித்தாந்தகௌமதி |
| 34 | காருஷ்ணாஜிநிஸ்மிருதி | 48 | முக்தாவளி |
| 35 | பிரஜாபதிஸ்மிருதி | 49 | சித்தாந்தபிந்து |
| 36 | வசிஷ்டஸ்மிருதி | 50 | மீமாம்சாசாஸ்திரம் |
| 37 | யாக்யவல்கியஸ்மிருதி | | |
| 38 | ஸ்மிருதிமுக்தாபலம் | | 9 |
| 39 | மநுஸ்மிருதி | 51 | சிவபுஜங்கம் |
| 40 | நாரதஸ்மிருதி | 52 | சாம்பபுஜங்கம் |


பிரமாணவாக்கியங்கள் 64-சுலோகங்கள்-205.

## இதன் விலை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நேர்த்தியான காலிகோபைண்டு | பிரதி 1-க்கு | ... | 1 | 0 | 0 |
| சாதாரணபைண்டு | பிரதி 1-க்கு | ... | 0 | 14 | 0 |
| கீதாமிர்த மஞ்சரி | பிரதி 1-க்கு | ... | 0 | 6 | 0 |

அடியிற் கையொப்பமிட்டவர்க்கு எழுதி வி. பி. மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.


விருதை. சிவஞானயோகி.
விருதுபட்டி.
திருநெல்வேலி ஜில்லா.

ஓம்.

சிவாயநமஃ

# விபூதி ருத்திராக்ஷ தாரண நிரூபணம்.

## விபூதிதாரண மகிமை யுரைத்த அத்தியாயம்.

காப்பு.

வேண்பா - மூலம்.

புகழ்சர்வமங்களமும்பூர்த்தியுறற்காக
மகிழன்பால்வந்திப்பன்வாழ்புங்கவரீசன்
காருணியமுங்நீர்கணிசர்வமங்களைய
ஞரமுதச்சங்கரனையான். (க)

மூலம்.

சுருதி ஸ்மிருதிகளாலும், சத்துக்களின் ஆசாரங்களாலும், பஸ்ம தாரணமானது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதில் அவநம்பிக்கையை யுண்டுபண்ணுகிற துர்ஜ்ஜன வசனத்தைக் கண்டிக்கிறேன். (உ)

மூலம்.

வேத பாகியர்களால் (வேதத்தை நம்பாதவர்களால்) செய்யப்பட்ட வேத நிந்தனையினல் வேதவி

திப்படி நடக்கிறஜனங்கள் இல்லை. அது அவர்களுக்குச் சுபாவமென்று (அவர்கள் செய்யும்) மிகப்பெரிய பஸ்ம நிந்தனையிலும் வித்வான்கள் அசட்டையாயிருக்கிறார்கள். (க)

உரை.

"கல்வியில் கர்த்தாவைப் பற்றுகிறது" ("கமௌகதர்விவுதெ") என்ற நியாயத்தால் நிந்தனை செய்பவனுக்கு நிர்தையே பலம். "இவனிடத்திலிருந்து பலமுண்டாவதால்" ("ஹஒகதஉவவதெ:") என்ற சாத்திரத்தை யநுசரித்து பரமசிவனாலேயே உதாசீனஞ் செய்யப்படுகிறது * அதாவது அவர்களைக் கண்டிப்பதினால் நமக்கென்ன என்று (அறிவுடைய மகான்கள்) உபேக்ஷிக்கிறார்கள் என்பது கருத்து.

அவதாரிகை.

ஆயினும் "கிணற்றருகிற் சென்ற குழந்தை நியாயத்தினால்" ("கூவஸீவமதவாவகஞாயெந") மந்த அறிவுடையவர்களும், பாலர்களுக்குச் சமான மானவர்களும், இதர னிடத்தில் வைத்த நம்பிக்கை யொன்றினாலேயே நடத்தப்பட்ட புத்தியுடைவர்களும், வஞ்சகனான கிழமகனால் வஞ்சிக்கப் பட்டவர்களும், தங்கள் தகப்பன் பாட்டன் முதலியவர்களால் அநுட்டிக்கப் பட்டிருந்தபோதிலும் அவ்வாசாரத்தை விட்டுவிட எண்ணங் கொண்டவர்

---

கருத்து.

* (கருமஞ் செய்பவனை அப்பலன் பற்றுகின்றது என்பதால் தூஷணஞ் செய்பவனை அப்பாவம் பற்றுகிறது அவனை நாமேன் கண்டிக்க வேண்டும் என்று பரமசிவன் வித்வான்களை அசட்டையா யிருக்கச் செய்விக்கின்றான்.)

களும், கிடங்கில் விழவிருப்ப முடையவர்களும் ஆயிருக்கிற ஜனங்களுக்கு அதில் தாழாதபடி அதிலிருந்து மேற்கொண்டு வரவேண்டுமென்கிற எண்ணத்தால் பஸ்ம மகத்துவத்தை யுபதேசிக்கின்றார்.

## மூலம்.

தௌர்ப்பிராமண்யமும் அக்கினிகோத்திர மில்லாமையும் உபபாதகமென்று வேதம் இதிகாசம் ஸ்மிருதி இவைகளில் அநேகப் பிரகாரமாகச் சொல்லப்பட் டிருக்கின்றன. வித்வான்கள் இதை (உபபாதகத்தை) விசேட முயற்சி செய்தாவது தள்ளவேண்டும். அக்கினி ஆதானம் அதன்பின் அக்கினி கோத்திரம் இது போன்ற சகல யாகங்களை இவ் வுலகத்தில் செய்கிற வேதமறிந்தவர்கள் விபூதி மகத்துவத்தை நிர்ணயஞ் செய்வார்கள் (நிச்சயமா யறிவார்கள்) மற்றவர்களால் முடியாது.

## உரை.

தௌர்ப்பிராமண்யம் - துர்ப்பிராமணனாயிருத்தல். அது மூன்று தலைமுறை சோமபானத்தை விடுதல்.

“ய்ஸ்த்ரூதீயாஸவநஷாஸொமந்நவி
வைஸ்ரீந்நாவா ணதவ்யொமவீய॥”

“மூன்று தலை முறைவரை சோம பானத்தைச் செய்யாமலிருக்கிறவன் அல்லது சோமயாகத்தை விட்டிருக்கிறவன்” இது முதலிய தைத்திரிய (யஜுர்) வேதத்தால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"யஸ்யவேதஸ்ச வேதீச விச்சித்யேதே த்ரிபூருஷம்,
ஸவை துர்ப்ராஹ்மணோ நாம"

"எவனுக்கு வேதமும் வேதியும் (மூன்று அக்கினி இருக்குமிடம்) மூன்று தலைமுறை விட்டுப்போகிறதோ அவன் பிரசித்த துர்ப்பிராமணன்" இது முதலியவைமிருதி சித்தமாயிருக்கின்றன.

அக்கினி கோத்திர மில்லாமை—அக்கினி கோத்திரமுடைத் தாகாதிருத்தல் (தௌர்ப் பிராமண்யஸ்) இந்த இரண்டும் வேதத்திலும் மகா பாரதமாகிய இதி காசத்திலும் மிருதியிலும் அநேகமாய் அநேகப் பிரகாரத்தினல் தோஷமாகவும் பொதுவாய்ப் பிராயச் சித்தத்தினல் தள்ளத் தகுந்ததென்றும் பலவிடங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. அவ் விரண்டுகளுக்குள் தௌர்ப் பிராமண்யத்வம் (துர்ப்பிராமணனயிருத்தல்) தோஷம் என்று சொல்லியாய்விட்டது. அது பிராயச் சித்தத்தாலே தள்ளத்தகுந்தது என்பதோ? மூன்று தலைமுறை சோமபானத்தை விட்டதற்கு ஐந்திராக்கிநி பசுவும், தௌர்ப் பிராமண்ய (சோம யாகத்தைவிட்ட) தோஷத்துக்கு ஆசுவிக பசுவும், பிராயச் சித்தங்களாகத் தைத்திரீய (யஜுர்) வேதத்தில் விதிக்கப் பட்டிருக்கின்றன வென்றறிக.

அநாகிதாக்கி நித்துவதோடம்—அக்கினி ஆதானமில்லாம லிருப்பதா லுண்டாகும் தோஷம். "வசந்த இருதுவில் பிராமணன் அக்கினிகளை ஆரம்பிக்கி

ருன்" ("வஸம்தெஹ்ராஹணோஉதீநாஜயீதெ")
இது முதலிய சுருதிகளால் விதிக்கப்பட்ட அவசிய
மான அக்கினி ஆரம்பத்தைச் செய்யாமையால் உண்
டாகிறது.

"நமேஸ்தெநாஜநவமெ
நகஜெர்யா நமெஜ்வவ꞉
நாநாஹிதாக்நிநசாவிஜாநு
நமெஸ்வரீஸ்வரிணீகுத꞉॥"

"என்னுடைய பட்டணத்தில் திருடன் இல்லை, கிருபணன் இல்லை, குடிகாரன் இல்லை, அக்கினி கோத்திரஞ் செய்யாதவன் இல்லை, அவித்துவான் இல்லை, தன் போக்காய்த் திரிகிறவன் (அடங்காதவன்) இல்லை, விபசாரிஏது"

என்று சாங்தோக்கியத்தில் ஐந்தாவது பிரபாடகத்தில் வைசுவானரவித்தையைக் கிரகிப்பதற்காகத் தன் சமீபத்தையடைந்த பிராசீனசாலர் முதலிய ஆறுமகரிஷிகளைப்பார்த்து சகல வைசுவானர உபாசகரான கேகயமகாராஜா தன்னுடைய தனமானது பிராமணப் பிரதிக்கிரகத்துக்கு யோக்கியமாக இருக்கிறதென்று வெளிப் படுத்துவதற்காகத்தன் தேசத்தில் அக்கினி கோத்திரஞ் செய்யாதவன் இருத்தலை ஒழிக்குங்குறிப்பாலும்.

இவ்விதம் மகாபாரதம் சபாபர்வத்தில் தர்ம புத்திரரைக்குறித்து.

“ 𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑌫𑌲𑌾𑌵𑍇𑌦𑌾𑌃
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑌫𑌲𑌂𑌧𑌨𑌮𑍍।
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑌫𑌲𑌾𑌦𑌾𑌰𑌾𑌃
𑌕𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑍇 𑌸𑌫𑌲𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍॥”

உமக்குவேதம் பிரயோசனத்தோடுகூடி யிருக்கிறதா ?
உமக்குத்தனம் பிரயோசனத்தோடுகூடி யிருக்கிறதா ?
உமக்குஸ்திரீசள் பிரயோசனத்தோடுகூடி யிருக்கிறார்களா ?
உமக்குச்சாத்திரம் பிரயோசனத்தோடுகூடி யிருக்கிறதா ?

என்று நாரதர் கேட்டகாலத்தில் வேதமுதலியவைகளினுடைய பிரயோசனம் இவ்விதமென்று அறியாத அவர் (தர்மபுத்திரர்) “வேதங்கள் எவ்விதமாகப் பிரயோசனத்தோடு கூடுகின்றன” என்பது முதலிய வினாக்களைக் கேட்க அதற்கு நாரதரால்.

“ 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌫𑌲𑌾𑌵𑍇𑌦𑌾
𑌦𑌤𑍍𑌤𑌭𑍁𑌕𑍍𑌤𑌫𑌲𑌂𑌧𑌨𑌮𑍍।
𑌰𑌤𑌿𑌪𑍁𑌤𑍍𑌰𑌫𑌲𑌾𑌦𑌾𑌰𑌾
𑌶𑍀𑌲𑌵𑍃𑌤𑍍𑌤𑌫𑌲𑌂𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑍍॥”

“வேதம் அக்கினிஹோத்திரத்தைப் பிரயோசனமாக வுடையது, தனம் கொடுத்தல் அநுபவித்தல்களைப் பிரயோசனமாக வுடையது, தாரம் அநுபவம் புத்திரன் இவைகளைப் பிரயோசனமாக வுடையவள், சாத்திரம் நற்குணம் நன்னடைகளைப்பிரயோசனமாக வுடையது.

என்று அக்கினிஹோத்திர பலமானது வேதங்களுக்கு வர்ணிக்கப்பட்டது.

அக்கினி ஆரம்பம் இல்லாமல் அக்கினிகோத்திரம் உண்டாகாது, ஆதலால் (முதலில் அக்கினியாரம்பஞ் செய்துக்கொண்டு பின்னர் அக்கினி கோத்திரஞ்செய்ய வேண்டும் என்பது கருத்து.) அக்கினி ஆதானமில்லாம லிருப்பது தோடம் என்று அருத்தாபத்தியென்கிற பிரமாணத்தால் கிடைக்கிறது.

அப்படியே ஆநுசாசநிகபருவத்தில் சப்தரிஷி ராஜரிஷி. பிர்மரிஷி முதலியவர்களுடன்கூடத் தேவேந்திரன் ஒரு காலத்தில் தீர்த்தயாத்திரை யாகத்திரிந்துக்கொண்டு சகல புண்ணிய தீர்த்தங்களிலேயும் ஸ்நானஞ்செய்து பிரபாச தீர்த்தத்துக்குச்சென்றான். அவ்விடத்தில் அகத்திய மகரிஷி புஷ்கரம் என்ற பெயருடைய சிறந்ததாமரைப் புஷ்பத்தைச் சலத்தி லிருந்தெடுத்துக் கரையில்வைத்தார். அதுகாரண மின்றி மறைந்துவிட்டது. அதனால் நான்குபுறமும் நன்றாய்ப்பார்த்துச் சந்தேகப்படும் அகத்தியரை நோக்கி அவ்விடத்திலிருக்கிற சகலரும் சபதஞ் செய்தார்கள். (உறுதிசொன்னார்கள்) என்று கசாக-வது அத்தியாயத்தில் சொல்லப்படுகிறது அதை விவரிக் கிறேன். "அவ்விடத்தில் அகஸ்தியர் இருடி சிரேட்டர்களான அவர்க்ள் யாவரையும் பார்த்து மேன்மையான என்னுடைய புஷ்கரத்தை எடுத்ததுயார்? உங்களைச்சந்தேகிக்கிறேன், புஷ்கரத்தையெனக்குக் கொடுங்கள் நீங்கள் பதுமத்தைத் திருடுவது யோக்கியமல்ல என்றுசொன்னார்" இவ்விதமான அகஸ்தியருடைய சந்தேகத்துக்கு "வருத்தமடைந்த இருடிகள் மகரிஷியே

நாங்கள் உம்முடைய புஷ்கரத்தைத் திருடவில்லை, பொய்யான அபவாதத்தைச்செய்யவேண்டாம், கொடுமையான பிரமாணங்களைச் செய்வோம்" என்று அவருக்குப்பதில் சொன்னார்கள், இவ்விதமாகச்சொல்லியபின்னர் அந்த இருடிகளின் சபதஞ்சொல்லப்படுகிறது. "உமதுபுஷ்கரத்தைத் திருடினவன் கோபித்தலறுவான், அடிபட்டுத்திருப்பி யடிப்பான், பிருட்டமாமிசங்களைக் கடிப்பான்" இதுமுதலிய சுலோகங்களால் பிருகுமுதலிய இருடிகளின் சபதப்பிரகாரங்களை வர்ணித்து".

"ஊநாஹிதாக்ரிர்மியதா
யஜ்ஞவி஘்நங்கரோதுவ।
தவஸ்விபிர்விருத்யேத
யஸ்தேஹரதிபுஷ்கரம்॥"

"உம்முடைய புஷ்கரத்தைத்திருடினவன் அக்கினியாதானமில்லாம லிறப்பான் யாகத்துக்கு விக்கினஞ் செய்வான் தவசிகளுடன் விரோதஞ் செய்வான்".

என்ற சிபிரிஷிசபதவசனத்தில் ஜன்மமத்தியில் அக்கினியாதான மில்லாமலே இறக்கிற கிருகத்தனுக்குத் தோடஞ் சொல்லி யிருப்பதாலும்.

"அக்நிஹோத்ரமநாத்ருத்ய
ஸுகம்ஸ்வபிதுயஸ்ஸதிஜ:।

வஸிஷ்டாதீ காவேஷ்தாஉஷு
யஸ்யஹர திவஷ்ஷரம்॥"

"உம்முடைய புஷ்கரத்தைத்திருடின பிராமணன் அக்கினி கோத்திரத்தை அநாதரவு செய்து சுகமாய்த்தூங்குவானாக, சந்நியாசத்தை யடைந்து இச்சாவிருத்தி யுடையவனாக".

இது முதலியவைகள் கேட்கப்படுகையாலும், அனாகிதாக்கினித்வம் (ஆதான மில்லாம லிருப்பது) தோடம் என்று ஸ்பஷ்ட மாகிறது.

இவ்விதம் மிருதிகளிலும் அந்தத்தோடம் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவருமாறு.

வியாசமிருதி.

"வஸந்தே ப்ராஹ்மணஸ்யஸ்யாச்
ஆதேயோ அக்நிர் யதாவிதி।
க்ஷத்ரியஸ்ய க்ரீஷ்மே து
க்ரீஷ்மேவ விதீயதே"

"பிராமணன் வசந்த இருதுவில் (இளவேனில்—சித்திரை வைகாசி) விதிப்படி அக்கினியை யாரம்பிக்கவேண்டும், க்ஷத்திரியன் முதிர்வேனில் (ஆனி ஆடி) பருவத்தில் அக்கினியை ஆரம்பிக்க வேண்டும் என்று விதிக்கப்படுகிறது"

கௌதமமிருதி.

"அஜாதீநாமயஸ்ய நிஜாதாநம்
ப்ராஹ்மணஸ்யாயிசாவ்ய வவநயாஜந
ப்ரதிக்ரஹாவ திவெஷநியமঃ"

"துவிஜர்களுக்கு (பிராமணன், க்ஷத்திரியன், வைசியன்) அத்தியயநம், யாகம் செய்தல் தாநங்கொடுத்தல், மூந்திய்வர் களுக்குள் பிராமணனுக்கு அத்தியயநம்செய்வித்தல், யாகஞ் செய்வித்தல், தாநம்வாங்குதல், இவைகள் அதிகங்கள் என்று நியமம். ஷூவெஷஃ நியமஃ என்றதால் முதலில் சொன்ன அத்தியயனம் யாகம் தானம் என்கிற இம் மூன்றுகளும் அவ சியம் செய்யத்தக்கன இதுவிநா இதர மூன்றுகளும் அர்த்தா பேக்ஷ இருந்தால் செய்யலாம் என்பது பொருள்.

அப்படியே யஜுர்வேதம்.

"யஜ்ஜேந தெவா ஸுவர்கம் லோகமாயந்"

"தேவர்கள் யாகத்தினல் சுவர்க்கத்தை யடைந் தார்கள்"

இதுமுதலிய வேதங்களைக் காரணமாக உடையதாகப் பகவா னாலே கீதையில் சொல்லப்படுகிறது.

"ஸஹயஜ்ஞாஃ ப்ரஜாஸ்ருஷ்டா
புரோவாச ப்ரஜாபதிஃ"

"முன்காலத்தில் பிரமதேவர் யாகங்களோடு பிரஜைகளைச் சிருட்டித்துச் சொன்னர்"

இது முதலியன மிருதி உதாரணம்போல இதிகாச உதார ணமும் ஆகிறது. அப்படியே வியாச மிருதியும் உதாரணமாக ஆகின்றது.

ஆரீதமிருதி.

(க) "யஜ்ஜேந தெவா விஜயாவிஹாஷி
யஜ்ஜேந தெவாகல்ப தகாம்பூவந்॥

யஜ்ஞேந பாபைர்பஹுபிர்விமுக்த:
ப்ராப்நோதி லோகாந்பரமஸ்ய விஷ்ணோ:"

(உ) "நாஸ்த்யயஜ்ஞஸ்ய லோகோ வை
நாயஜ்ஞோ விந்ததே ஶுபம்।
அநிஷ்டயஜ்ஞோ பூதாத்மா
நஶ்யதி ச்சிந்நபர்ணவத்"

(க) "யாகத்தால் தேவர்கள் நிர்மலர்களாகப் பிரகாசிக்கிறார்கள் யாகத்தால் தேவர்கள் மோக்ஷத்தையடைந்தார்கள் யாகத்தால் அநேக பாவங்களினின்றும் விடுபட்டுப் பரமபுருடனை விஷ்ணுவின் லோகங்களை யடைகிறார்.

(உ) "யாக மில்லாதவனுக்கு லோகமில்லை யாகமில்லாதவன் மங்களத்தை யடைகிறதில்லை யாகஞ்செய்யாதவன் அசுத்தமான ஆத்மாவை யுடையவனாகிச் சேதிக்கப்பட்ட இலைபோல் கீழே விழுகிறான்.

## மாதவீயஸ்மிருதி.

(க) "நாஸ்திக்யாதத²வாலஸ்யாத்
யோ(அ)க்³நீந்நாதா⁴துமிச்ச²தி।
யஜேத வா ந யஜ்ஞேந
ஸ யாதி நரகாந்பஹூந்॥"

(உ) "தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந
ப்ராஹ்மணோ ஹி விஶேஷத:।
ஆதா⁴யாக்³நீந்விஶுத்³தா⁴த்மா
யஜேத பரமேஶ்வரம்"

(க) "எவன் நாஸ்திகத்தினுலாவது அல்லது சோம்பலினுலாவது, அக்கினிகளை யாரம்பிக்க விரும்பாமலிருக்கிருனே; அல்லது யாகஞ்செய்யாம லிருக்கிருனே, அவன் அநேக நரகங்களை யடைகிருன்."

(உ) "ஆசையால் விசேடமாக சுத்தாத்மாவா யிருக்கிற பிராமணன் எப்படியாவது அக்கினியை யாரம்பித்து பரமேசுரனைக் குறித்து யாகஞ்செய்ய வேண்டும்."

### காருஷ்ணஜிநிஸ்மிருதி.

"𑌪𑍁𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌪𑌾𑌦𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌮𑍇𑌤𑌤𑍍।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌮𑌮𑍇𑌵 𑌤𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌃।
𑌯𑌥𑌾𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑌾𑌧𑍇𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌃"

"துவிஜன் புத்திரனை உண்டுபண்ணி யாகத்தைச் சேர்ந்த இந்தக் கருமத்தைச் செய்யவேண்டும், எப்படியாவது அக்கினி ஆரம்பத்தைச் செய்யவேண்டும்."

### பிராஜாபதிஸ்மிருதி.

"𑌧𑌨𑌵𑌾𑌨𑍍 𑌹𑍋𑌤𑍍𑌰𑍀𑌯𑌿𑌕𑌾𑌰𑍀 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌆𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑌿।
𑌆𑌧𑍇𑌯𑍋𑌽𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑍇𑌽𑌪𑌿
𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑌾𑌪𑌭𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌜𑌃"

"தனமுள்ளவன் அக்கினி கோத்திரியாகவானுல் (அவிர்யக்கிய சோமயாகாதிகளுக்கு) அதிகாரியாக ஆகிருன், துவிஜன் தரித்திரனு யிருந்தாலும் எப்பவும் பாவபயத்தால் அக்கினியை ஆரம்பிக்க வேண்டும்."

வசிட்டர்.

"ஸவஸ்ஸ்ஸாஹ்ஜனாஉக்ஷீநாதயீலெத"

"பிராமணன் கட்டாயமாய் அக்கினிகளை யாரம்பிக்கிறான்."

இப்படிக் கௌதமர். உ-ம்.

கர்ப்பாதானம் முதல் (கக) சமஸ்காரங்களைக் காண்பிவித்துப்பின் ஔபாச னுக்கினியாற் செய்யத்தகுந்த (எ) பாகயக்யங்களை (ஸ்தாலீபாகங்களை) உபதேசித்து, அக்கினி ஆரம்பம் அக்கினி கோத்திரம் தர்ச பூர்ணமாசம் இது முதலியவைகளால் (எ) அவிர் எக்கியங்களையும் அக்கினிட்டோமம் முதலிய (எ) சோமயாகங்களையும் சொல்லி இவ்விதமான (சo) சமஸ்க்காரங்கள் அந்தக்கரணசுத்திக்குக் காரணங்கள் என்று வியாக்கியானஞ் செய்திருக்கிறார்.

ஆபஸ்தம்ப சூத்திரம்.

"நாநாஹிதாக்ஷிரியெத"

"ஆகிதாக்கினி யல்லாமற் சாகவேண்டாம்." ஆனதால் மிருதிகளிலும் ஆதானமில்லாமலிருப்பது தோடம் என்று தீர்மானிக்கப்பட் டிருக்கிறது.

இன்னும் பிராயச்சித்த காண்டங்களிலும் அநாகிதாக்கினித்வம் உபபாதகம் ஆகக்கணக்கிடப் பட்டிருக்கிறது.

அதை (உபபாதகத்தை) விவரிக்கிறோம்

யாக்கியவல்க்கியமிருதியில்.

"மொவயொவ்ராக்ஷ்தாஷெயம
ஊணாநாஷாநவக்ஷியா।

ஃநாஹி தாஹீதா உவணஂ

விஃயஂவஸிவெடிநோ॥"

"கோசத்தி விராத்தியனுக விருத்தல் திருட்டு கடனைத் தீராதிருத்தல் ஆகிதாக்கிநியல்லாதிருத்தல் விற்கக்கூடாததை விற்றல் தமையனுக்கு முர்தி விவாகஞ் செய்துக்கொள்ளல்." என்று இது முதலியன சொல்லப்படுகின்றன.

தோஷம் ஆகக்கணக்கிடப் பட்டதைத் தள்ளவேண்டியது அவசியம் ஆகையால் இதை (இந்த அநாகிதாக்கிநித்துவ தோடமாகிய (உபபாதகத்தை) வித்வான்கள் தாங்கள் தனமில்லாதவர்களா யிருந்தபோதிலும் தனசம்பாத்திய ரூபமான பிரயத்தனத்தால் யாசகம் முதலியவைகளைச் செய்தாவது நிவிர்த்திக்க வேண்டும். இல்லாவிடில் அநாதிபவசஞ்சித துரித ரூபமான மலத்தை நிவிர்த்திக்காமையால் மலின (மங்கின) சத்வகுணத்தை யுடையவனுக்கு அந்த மலத்தைச் சோதிக்கத்தக்க சமஸ்காரம் இல்லாமையாலும், நிர்மலமான வேதார்த்தக்கியான முண்டாகாமையினாலும் புருடார்த்த சித்தியானது உண்டாகாது.

சொல்லப்பட்ட தோட நிவிர்த்தியா லுண்டாகும் பயன் சொல்லப்பட்டது.

அதன்பின் = அதன்பின் உண்டாகத்தகுந்த இதுபோன்ற தர்ச பூர்ணமாசம் ஆக்ரயணம் முதலிய.

சகல=அக்கினிஷ்டோமம் முதலிய சௌமிகம் என்ற யாகத்தையும் சேர்க்கப்பட்டது.

சுருக்கம் (சO) சமஸ்க் காரங்களால் சமஸ்காரஞ்செய்யப்பட்டவனும், மிகவும் நிர்மலமான அந்தக்கரணத்தை யுடையவனும் புருட சிரேட்டனுமான யாரேனுமொருவன் தான் விபூதியின் மகத்துவத்தை இவ்வளவென்று மதிக்க வல்லமை யுடையவனுவன். தௌர்ப்பிராமண்யம் (அநாகிதாக்கினித்வம்) முதலிய தோடங்களுடன் சேர்ந்த மற்றவர்களால் முடியாது.

வேதமறிந்தவர்கள்=குருமுகமாய் வேதாத்தி யயனத்தையும் அவைகளின் அருத்த ஞானத்தையு மடைந்தவர்கள்.

பஸ்மத்துக்த (யஜுர்) வேதத்தில்.

"சுஶ்ரூஹஸ்வாஹி"

"ஹஸ்நாஹிவாஹயதி"

இது முதலிய மந்திரப் பிராமணங்களில் நேரே சொல்லப்பட்ட மகிமை வெளிப்படுகிறது.

இன்னும் (யஜுர்).

"ஹஸ்நாவஊஉவிவவதிஶாஷு"

என்றதனுல் காருகபத்தியத்துக்கும் ஆகவனீயத்துக்கும் மத்தியில் நாய் தாண்டிப்போனுல் அந்தத்தோட சாந்திக்காக அது தாண்டின இடத்திலே பஸ்மத்தின் தெளித்தல் விதிக்கப்பட்டிருக்கிறது.

அதனுலும் அந்தத் தோடத்தை நிவிர்த்திபண்ணுகிற மகிமையானது வெளிப்படுகிறது. (உ

## அவதாரிகை.

வேத மறிந்தவர்களால் என்ற இதற்கு அதர்வசிரசுருதியை அறிந்தவர்கள் என்றபொருளைக்கொண்டு வேறுசுலோகத்தினுல் விபூதி மகிமையைச் சொல்கிறுர்.

## மூலம். ரு.

கௌதம முனிவரால் செய்யப்பட்ட சூத்திரத்தில் பாவத்தைப் போக்குவதற்குக் காரணமான முக்கியமாய் (ஜெபிக்கத்தக்க) மந்திரங்களுக்குள் அதர்வசிரசானது கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் பாசுபத விரதமானது சொல்லப்பட்டிருக்கிறது.

## உரை.

அதைவிவரிக்கிறோம் கௌதம தர்மசூத்திரம் ரு-வது அத்தியாயத்தில்.

"அயம் புருஷோ யாப்யேந
கர்மணா லிப்யதே"

"இந்தமனிதன்இழிவானதொழிலால்வியாபிக்கப்படுகிருன்" என்று ஆரம்பிவித்துப் பாவகர்மநிவிர்த்தியின் பொருட்டுப்பிராயச்சித்தஞ் செய்யவேண்டும் என்று விசாரபூர்வமாய்த் தீர்மானஞ்செய்து, அதை நிவிர்த்தி செய்பவைகள் ஜபம் தவசு ஓமம் உபவாசம் தானம் என ஐந்து விதமான பிராயச்சித்தங்கள் என்று சொல்லி,

"உபநிஷதோ வேதாந்தாஸ் ஸர்வச்சந்தஸ்ஸு ஸம்
ஹிதா மதூந்யகமர்ஷணமதர்வசிரோ ருத்ராஃ
புருஷஸூக்தம் ராஜநரௌஹிணே ஸாமநீ ப்ருஹ
த்ரதந்தரே॥"

"உபநிடதங்கள் வேதாந்தங்கள் சகல வேதங்களி லிருக்கிற சங்கிதைகள் மதுக்கள் அகமருஷணம் அதர்வசிரசு உருத்திரங்கள் புருடசூக்தம் ராஜந ரௌகிணங்கள் பிரகத் ரதந்தரம் என்ற சாமங்கள்" இதுமுதலியவைகள், சாவித்திரி பாவநாசி என்ற அர்த்தத்தை யுடையதனால் பரிசுத்தங்களாகவும் செபிக்கத் தகுந்தவைகளாகவும் இருக்கிற மந்திரங்கள் என்ற இவைகளை எண்ணும் அவசரத்தில் ஸ்ரீ உருத்திரபுருட சூக்தங்களுக்கு முன்னமே அதர்வசிர சுருதி கணக்கிடப்பட் டிருக்கிறது.

"தஸ்யைவா ஹம்வெஷ்ஹ-ஹஂஜொசுஜெஹஜெநு"

இது முதலிய உபநிஷத்தா யிருக்கிற அதர்வ சிரசு என்று மிதாக்ஷரா என்ற (வியாக்கியாநத்தில்) வியாக்கியாநஞ் செய்யப்பட்டிருக்கிறது. அந்த அதர்வசிரசில்.

"வ்ரதமெதச்வாஶு-பதம்
அக்நிரிதிஹஸ்மவாயுரிதிஹஸ்ம
ஜலமிதிஹஸ்மஸ்தலமிதிஹஸ்ம
வ்யோமேதிஹஸ்ம"

இதுமுதலானதினால் பிர்மம்போல் சகலசொரூபமாக இருக்கும்தன்மையை முதலிற்சொல்லி அக்கினி (அக்நிரி) முதலான மந்திரத்தினால் பற்பத்தைக்கிரகித்து செபித்து அங்கங்களிற் பூசவேண்டும் ஆனதால் இந்தவிரதத்துக்கு—

"வாஶுபதம் வஶுவாஶவிமோக்ஷாயா"

"பசுபாசத்தை நீக்குவதால்பாசுபதம்" என்றுபேர். பஸ்மோத்தூளநம் திரிபுண்டரம் முதலியவைகளுக்கு ஜீவர்களின் அஞ்ஞானபாசத்தைநீக்கி ஞானார்த்தத்தைக் கொடுப்பதால் பாசுபதவிரதம் என்று கூறப்பட்டது.

பஸ்மோத்தூளநம் முதலியவைகள் முதலாவது பரமசிவனால் அநுட்டிக்கப்பட்டது, பின்பு பரமசிவனுபதேசத்தால் குபேரனால் அநுட்டிக்கப்பட்டது. அதனால்தான் பரமசிவனுக்குக் குபேரன் இஷ்டன் என்று ஸ்ரீமத் உத்திரராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது அதையே இவிடத்தில் உபப்பிருமணமாகப் பார்க்கத் தகுந்தது. அது எதுவெனில்.

(க)

"𑌮𑌯𑍈𑌵 𑌤𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌂 𑌚𑍀𑌰𑍍𑌣𑌂 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।
𑌤𑍃𑌤𑍀𑌯𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌯𑌶𑍍𑌚𑌰𑍇𑌦𑍍𑌵𑍍𑌰𑌤𑌮𑍀𑌦𑍃𑌶𑌂"

(உ)

"𑌵𑍍𑌰𑌤𑌂 𑌸𑍁𑌦𑍁𑌶𑍍𑌚𑌰𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌨𑍍𑌮𑌯𑍈𑌵𑍋𑌤𑍍𑌪𑌾𑌦𑌿𑌤𑌂 𑌪𑍁-
𑌰𑌾 । 𑌸𑌖𑌿𑌤𑍍𑌵𑌂 𑌮𑌯𑌿 𑌸𑍌𑌮𑍍𑌯𑍇𑌹 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌸𑍍𑌵 𑌨𑌰𑍇𑌶𑍍𑌵𑌰"

(க) "நராதிபனே இந்தவிரதமானது என்னாலும் உன்னாலும் அநுட்டிக்கப்பட்டது, மூன்றாவதுபுருடன் இல்லை இவ்விதமான விரதத்தை எவன் ஆசரிக்கப்போகிறான்"

(உ) "அநுசரிப்பதற்கு அருமையான இந்த விரதத்தை முன் காலத்தில் நானே உண்டுபண்ணினேன் ஆனதால் ஏ? சுமுகனை நரேசுரா என்னுடன் இட்டனாக இரு" என்று படிக்கப் பட்டிருக்கிறது. (ரு)

அவதாரிகை.

வெகுவாய்ச் சொல்வதினாலென்ன.

மூலம் - சு.

தருமம் நன்மை இவைகள்போல விபூதியினின்று
நீ நீங்காதே என்றுசீடர்களுக்கு விதிக்குமிடத்தில்

மிகப்பிரசித்தமான தைத்திரீய உபநிஷத்தில் இது (பாசுபதவிரதம்) பிரகாசமாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீமான் (வேதவித்வத்வமுடைய) போதாயனமகரிஷி பூதியென்றசொல்லை பசித (நீறு) பரமாகவிவரித்திருக்கிறார். இந்தப்பற்பமகத்துவ விஷயத்தில் இவ்வுலகத்தில்வேறு எந்த ஆதாரத்தைத் தேடவேண்டும்.

உரை.

இவ்விடத்தில் ஸ்ரீமான் என்றது "ஸாஹிஸ்ரீ ரம்ருதாஸதாம்" "சத்துக்களுக்கடையாய்வரும் ஸ்ரீ ஆனது அமிருதம்* அல்லவா?" என்ற சுருதியையடைந்த வேதவித்வம் ஆசாரியருக்கேற்றப்பட்டது (ஆசாரியர்கள் வேதமறிந்திருக்குந் தன்மை வேதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது).

வால்மீகரிஷி வசநத்தால் உபப்பிருமணஞ் செய்யப்பட்ட அதர்வசிரசுருதிபோல போதாயனரால் உபப்பிருமணஞ் செய்யப்பட்ட தைத்திரீயசுருதியும் விபூதி மகிமையில் ஆதாரம்.

சொல்லப்பட்ட சுருதியின் உபப்பிருமணம் வாமனபுராணத்திலும் காணப்படுகிறது.

(க)

"[illegible]

[illegible]"

(உ)

"[illegible]

[illegible]"

---

* அமிருதம்=வேதம் இங்கு வேதசாரஞானத்தைக் குறித்து நின்றது.

(௩)

"ஸ்வாத்யாயப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்"

(௧) "சத்தியத்திலிருந்து விலகாதே தருமத்திலிருந்து விலகாதே நன்மையினின்று விலகாதே அக்கினியி லிருந்துண்டான விபூதியிலிருந்து விலகாதே அதனுல் தேகாவகுண்டாஞ் செய்வதிலிருந்து விலகாதே"

(௨) "நெற்றி மார்பு இரண்டுகைகள் இவைகளில் திரிபுண்டரதாரணத்திலிருந்து ஒரு காலத்திலும் பிரமையினுலாவது விலகவேசெய்யாதே"

(௩) "நித்யம் வேதத்தை அத்தியயநஞ் செய் அவ்விதமே வேறொருவனுக்குங் கற்பி"

இவ்விஷயத்தில் மிருதி முத்தாபலம் என்ற மிருதியில் பாடியகாரரால் உண்டான வியாக்கியாந விரோதத்தைப் பற்றிச்சந்தேகித்துச் சமாதானஞ் செய்யட்பட்டிருக்கிறது. அதை விவரிக்கிறேன்.

"பாடிய காரரால் † பூதி சப்தமானது ஐசுவரிய பரமாக வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆகிலும் போதாயனரால் "பூத்யை ந ப்ரமதிதவ்யம்" பூதியின் பொருட்டுத் தவறத்தகுந்ததல்ல" என்ற இந்தச்சுருதிபற்பம் திரிபுண்டரம் இவைகளுக்குஆதாரமாக உதகரிக்கப்பட் டிருப்பதாலும் அந்தச் சுருதியின் உபப்பிருமணமான புராண வாக்கியங்களுமிருப்பதாலும் பூதியேன்ற சொல்லுக்கு 'பற்பவிஷயமாக அருத்தம் பண்ணுவதுதான் நியாயம்" என்றும்

† பாடியகாரர்=ஸ்ரீ சங்கராசாரியர்.

"பூதியென்ற சொல் அநேக அருத்தங்களை உடைய தாகையால் ஐசுவரியபரமாக வியாக்கியானஞ் செய்யும் பக்ஷத்திலும் இவ்விடத்தில் ஒரு விரோதமும் இல்லை" என்றுந்தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. (ச)

அவதாரிகை.

"𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌂 𑌸𑌮𑍁𑌪𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍"

"வேதத்தை இதிகாச புராணங்கள் உபப்பிருமணஞ்செய்யும் (எடுத்துச் சொல்லும்)" என்ற மநுவியாசர் முதலிய வசனங்களை யநுசரித்துச் சொல்லப்பட்ட வாமன புராண வசனங்கள்போல காந்தம் முதலிய புராணங்களிலும் சொல்லப்பட்ட சுருதியின் உபப்பிருமண வசனங்கள் அநேக ஆயிரம் இருக்கின்றன என்று சொல்கிறார்.

மூலம் - ரு.

வேதத்தின் உபப்பிருமணமாக இருக்கிற புராண வசநங்களால் இந்தச்சுருதியின் அருத்தம் இது என்று சந்தேகமில்லாமல் நிச்சயஞ் செய்கிறோம். காந்தத்தில் பஸ்மம் திரிபுண்டரம் இவைகளின் மகிமைகளைச் சொல்கிற வசநங்கள் அநேக ஆயிரங்கள் இருக்கின்றன.

உரை.

இவ்விடத்தில் காந்தம் என்று சொன்னது சிவபுராணம் முதலியவைகளுக்கும் அருத்தம்.

சூதசங்கிதையில்

(க)

"[illegible]"

(௨)

"தேவபித்ருகார்யாப்யாம் மாதாபித்ராதி பூஜநாச்ச । ததோந்ய ஸ்மார்தகர்ம ஶ்ரௌதகர்ம ஶ்ரௌதமேவ ச"

(௩)

"ஸ்மார்தேப்யஶ்சைதேப்யோ முமுக்ஷுஶ்ச ஸதா ந ப்ரமாத்யேத ஸர்வதா"

(க) "சத்தியம் தருமம் நன்மை பஸ்மோத்தூளநம் (விபூதிப் பூச்சு) திரிபுண்டர தாரணம் வேதம் படித்தல்.

(௨) "தேவகாரியம் பிதுர்காரியம் மாதா பிதா முதலியவர்கள் பூஜை மற்றகருமங்கள் சிரௌத கருமங்கள்.

(௩) "ஸ்மார்த்த கருமங்கள் இவைகளிலிருந்து முமுக்ஷுவாயிருப்பானாலும் எப்போழுதும் தவறக்கூடாது.

இந்த வசனங்கள் சொல்லப்பட்ட சுருதியின் உபப்பிருமணமாக மாதவாசாரியர்களாலும் வியாக்கியாநஞ் செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது.

தைத்திரீய சுருதியில்,

"ஸத்யாந்ந ப்ரமதிதவ்யம்
தர்மாந்ந ப்ரமதிதவ்யம்।
குஶலாந்ந ப்ரமதிதவ்யம்
பூத்யை ந ப்ரமதிதவ்யம்"

"சத்தியம் தருமம்நன்மை பூதிஇவைகளிலிருந்து தவறுதே" என்ற இது முதலியவைகளால் எந்தச் சத்தியம் முதலியவைகள் எப்பொழுதும் முமுக்ஷுக் களால் சேவிக்கத்தகுந்ததென்று சொல்லப்பட்டிருக்கின்றன

வோ அவைகளை சத்தியம் (ஸத்ய்ாசு) முதலிய சுலோகங்களால் காண்பிக்கிறார் என்று (மாதவாசாரியரால்) வியாக்கியாநஞ் செய்யப் பட்டிருக்கிறது.

அரிவம்சத்தில்.

"ஹாஸ்த்ரிவபெண்ட்ராஹஸிமெதஸிதஸ்ஸநு
ஊளநீஜடீவக்ஷுவாநுசேகூநூ ௦ீ।
நிஙஙஞஙஙவெதஸிவநூவஞஙவிவிஞயநு
வஜுஜஜாவவணஹூநு"

"பிரகாசிக்கின்ற திர்புண்டரத்தை உடையவரும் விபூதியினால் வெளுத்தவரும் மௌந முடையவரும் ஜடையை யுடையவரும் மரவுரியை யுடையவரும் ஆனமுகுந்தரானவர் இடைவிடாமல் மனதில் சந்திரசூடனுகிய பரமசிவனைத் தியானஞ் செய்துக்கொண்டு பஞ்சாக்ஷரங்களை ஜ்ஜபித்தார்".

என்ற இந்த வசனத்தையும் முன் சொல்லப்பட்ட அருத்தவிஷயத்தில் ஆதாரமாக அறியவேண்டியது.

இன்னும் மகாபாரதம் ஆநுசாசநீக பருவம் உமா மகேசுரசம் வாதத்தில்.

"ரக்ஷாயமங்கலாயஞ
வவித்ராயஞஹாஸிநி।
ஞாஞநாயஞஹக்தாநாம்
ஹஸ்மதஜயாவஙா"

"உமையே? இரக்ஷணத்துக்காகவும் மங்களத்துக்காகவும் சுத்தத்துக்காகவும் அடையாளத்துக் காகவும் பக்தர்களுக்கு நான் பஸ்மத்தை முன்காலத்திற் கொடுத்தேன்" என்றிருக்கிறது.

இவ்விதம் முன் உதகரிக்கப்பட்ட சூதசங்கிதை வசனத்தில் முமுக்ஷுவானவன் பஸ்மோத்தூளநம் திரிபுண்டர தாரணம் முதலியவைகளி லிருந்து விலகக் கூடாதென்று சொல்வதால் ஞானவழியாய் மோக்ஷத்துக்குச் சாதனமாயிருக்குந் தன்மையானது அறியப்பட்டது. எது அறியப்பட்டதோ அது பஸ்மசப்தத்தின் அருத்தத்தாலேயே கிடைக்கிறது. அதாவது.

𑌭𑌸 𑌭𑌰𑍍𑌤𑍍𑌸𑌨𑌦𑍀𑌪𑍍𑌤𑍍𑌯𑍋𑌃

பஸ் (𑌭𑌸𑍍) என்றபகுதி வறுத்தல் பிரகாசம் என்ற அருத்தங்களை யுடையது.

பஸ் என்றபகுதி (சித்தாந்த கௌமதியில்) ௩-வது விகரணத்தில் படிக்கப்பட்டிருக்கிறது.

"𑌅𑌨𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑍋𑌽𑌪𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇" என்ற (பாணினி மகரிஷியின் வியாகரண) சூத்திரப்படிசெய்வினை (கர்த்தரி) யில் இந்தத்தாதுவுக்குமனின் (𑌮𑌨𑌿𑌨𑍍) என்ற விகுதியானது விதிக்கப்படுகிறது. இந்தச் சூத்திரத்தில் திருஸ் (𑌦𑍃𑌶𑍍) என்றபகுதி கிரகிக்கப்பட்டிருப்பதால் வேதத்தைச் சேர்ந்ததாயிருக்கிற தாதுவுக்கும் லோகத்தில் பிரயோகமுண்டென்று தாதுவிருத்தி என்ற கிரந்தத்தில் இருக்கிறது.

𑌭𑌸𑍍 + 𑌮𑌨𑌿𑌨𑍍 = 𑌭𑌸𑍍𑌮𑌨𑌿𑌨𑍍 — 𑌇𑌨𑍍 = 𑌭𑌸𑍍𑌮𑌨𑍍 — 𑌨𑍍 = 𑌭𑌸𑍍𑌮

பஸ் + மநிந் = பஸ்மநிந் — இந் = பஸ்மந் — ந் = பஸ்ம

"𑌪𑌾𑌪𑌾𑌨𑌾𑌂𑌰𑍋𑌮𑌾𑌣𑌾𑌂 𑌶𑌯𑌾𑌵𑌾𑌸𑌸𑍍𑌯𑌵𑌹 𑌤𑌨𑌾𑌶 𑌸𑌹𑍂"

"பாவம் ரோகம் மாயாபாசம் இவைகளை வறுப்பதால் (நாசஞ்செய்வதால்) பஸ்மம்என்று பேர்",

அவைகளில் பாவத்தை நிவிர்த்திக்குந் தன்மை ஜாபால சுருதியிற் பிரசித்தம். அஃது.

"பாப நாஶயதே க்ருத்ஸ்நம்
ஜந்ம நஶ தார்ஜிதம்"

"அநேக ஜன்மங்களாற் சம்பாதிக்கப்பட்ட சகலபாவத்தையும் நாசஞ்செய்கிறது".

ரோகம் கிரகபீடை முதலியவைகளை நிவிருத்திக்குந் தன்மை முன் உதகரித்த பாரதவசனத்தில் "இரக்ஷணத்துக்காகவும்" ("ரக்ஷாயை") என்று சொல்வதாற் காண்பிக்கப்பட்டது.

பாசத்தை நிவிர்த்திசெய்யுந் தன்மையோ பிரமோத்தரகாண்டத்திற் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

"உத்தூளநம் த்ரிபுண்ட்ரம்
மாயாபாஶநிவ்ருத்தயே।
குர்வந்தி முநிஶ்ரேஷ்டா
அதர்வஶிரஸி ஶ்ருதம்"

"முனிசிரேட்டர்கள் அதர்வசிரசுருதியிற் சொல்லிய உத்தூளந திரிபுண்டரங்களை மாயாபாச நிவிருத்தியின் பொருட்டுச் செய்கிறார்கள்".

மாயாபாசத்தை நிவிருத்திசெய்யுந் தன்மையைச் சொன்னதால் ஞானஜநகத்வம் (ஞானத்தை உண்டுபண்ணுந்தன்மை) கிடைத்தது. அது (=மாயாபாசநிவி

ருத்தி) இல்லாமல் அது (=ஞானஜநகத்வம்) உண்டாகாமையால்.

பஸ்மம் என்ற சொல்லின் சக்தியால் அது (அந்த அருத்தம்) கிடைக்கவில்லையென்று சொல்வாயானால் ஞானார்த்தத்தை யுடையதாயும் உள்ளடங்கிய ணிச் (ணிஃ) விகுதியின் அருத்தத்தை (அதாவது செய்வித்தல் என்னும் அருத்தத்தை) உடையதாயும் இருக்கிற இதேதாதுவின்பேரில் முன்போல் மநின் (மநிந்) என்ற விகுதியைப்புணர்த்தினால் பஸ்ம (பஸ்ம) என்றாகிறது. இதற்கு ஞாநஜநகம் (ஞானத்தை உண்டு பண்ணுவது) என்று அருத்தம். அதைக் கூறுகிறோம்.

மாதவாசாரியரால் செய்யப்பட்ட மிருதிரத்நம் என்ற கிரந்தத்தில் நாரதமகரிஷியின் வசனம் உதகரிக்கப்பட்டிருக்கிறது.

"பாஸநாத்பஸிதம் ப்ரோக்தம்
பஸ்ம கல்மஷபக்ஷணாத்।
பூதிர்பூதிகரீ பும்ஸாம்
ரக்ஷா ரக்ஷாகரீ பரம்"

"பிரகாசிப்பிக்குந் தன்மையால் பசிதம் என்றும் பாவத்தைப் போக்குவதால் பஸ்மம் என்றும் மனிதர்களுக்குச் சம்பத்தைக் கொடுப்பதால் பூதியென்றும், இரக்ஷிப்பதால் ரக்ஷை என்றும் சொல்லப்பட்டது".

அதிகஞ் சொல்லப்பட்டிருப்பதால் போதும்.

"சந்தேகமில்லாமல் நிச்சயஞ் செய்கிறேம்" என்றது களங்கம் இல்லாத சுருதி யருத்தத்தைச் சொல்வதால்,

வியாசர்.

(க)

"𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑍋 𑌮𑌾𑌮𑌯𑌂𑌪𑍍𑌰𑌤𑌰𑌿
𑌷𑍍𑌯𑌤𑌿 । 𑌇𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌮𑍁𑌪
𑌬𑍃𑌂𑌹𑌯𑍇𑌤𑍍"

(உ)

"𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌂𑌶𑌯𑍇𑌽𑌪𑌿।
𑌋𑌷𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌕𑌾𑌶𑌙𑍍𑌕𑌾𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍"

(க) "இவன் சொற்பக் கேள்வியால் என்னை வஞ்சிப்பான் என்று வேதம் பயப்படுகிறது. அது இதிகாச புராணங்களால் வேதார்த்தத்தை (தன்கருத்தை) உபப்பிருமணஞ் செய்யும்" *

(உ) "தன்னாலறியப்பட்ட வேதார்த்தத்தில் அஞ்ஞானம் (சந்தேகம்) உண்டானாலும் இருடிகளால் தீர்மானிக்கப்பட் டிருக்கிற அந்த அருத்தத்தில் மகாத்மாக்களுக்கு ஒரு சந்தேகமுமுண்டாகாது".

என்ற வியாசவசனமானது பற்பமகிமை விஷயத்தில் காரணமாக விளக்கப்பட்டது.

இவ்விதம் அநேக ரிஷிவசநங்களால் உபப்பிருமணஞ் செய்யப்பட்ட தைத்திரீய உபநிஷத்துப் போலவும் சிரேட்டமான அதர்வசிரசுருதிபோலவும் ஜாபாலோபநிஷத்தும் நான்கு ஐந்து ஆவது பிராமணங்களிலே விசேடமாய் பற்பமகிமையைச்சொல்கிறது. அப்

---

* வெளிப்படுத்தும் = எடுத்துச் சொல்லும்.

படியே காலாக்கிநி நுத்ரோபநிஷத்திலும் பகவானுன காலாக்கினிருத்திரர் சீடனுயிருக்கிற சனற் குமாரருக்கு பூரணமான பற்பதாரண விதியையும் அதன் மகிமையையும் சொல்லியிருக்கிறுர். இன்னும் ஸ்ரீபகவத்பாதாசாரியர் (ஸ்ரீசங்கராச்சாரியர்).

“𑌶𑌿𑌰𑍋𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌹𑍃𑌦𑍍𑌰𑍋𑌗𑌶𑍂𑌲𑌪𑍍𑌰𑌮𑍇𑌹
𑌜𑍍𑌵𑌰𑌾𑌰𑍍𑌶𑍋𑌜𑌰𑌾𑌯𑌕𑍍𑌷𑍍𑌮𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌵𑌿𑌷𑌾𑌰𑍍𑌤𑌾𑌨𑍍।
𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑍍𑌯𑍋𑌭𑌿𑌷𑌗𑍍𑌭𑍇𑌷𑌜𑌂𑌭𑌸𑍍𑌮𑌶𑌂𑌭𑍋
𑌤𑍍𑌵𑌮𑍁𑌲𑍍𑌲𑌾𑌘𑌯𑌾𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌵𑌪𑍁𑌰𑍍𑌲𑌾𑌘𑌵𑌾𑌯”

“ஏ? சம்புவே நீர் முந்தினவைத்தியர் பஸ்மம் மருந்தாகியது ஆனதால் சிரோதிருட்டி மார்புநோய் சூலை பிரமேகம் ஜுரம் மூலம் ஜரை க்ஷயம் விக்கல் விஷம் இவைகளாற் பீடிக்கப்பட்ட எங்களைச் சரீரசுகத்தின் பொருட்டு நோயில்லாதவர்களாகச் செய்யும்”.

என்று சிவபுஜங்கத்திற் சர்வரோக நிவிர்த்தி செய்வதாக விபூதியை உபதேசித்தார்.

அப்படிச் சாம்பபுஜங்கத்திலும்,

“𑌗𑌤𑌦𑍋𑌷𑍈𑌰𑍍𑌲𑌸𑌦𑍍𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌭𑍂𑌷𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍈-
𑌰𑌸𑌙𑍍𑌗𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌲𑌂𑌕𑌾𑌰𑌶𑍋𑌭𑍈𑌃।
𑌶𑌿𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌲𑌗𑍍𑌨𑌸𑌂𑌗𑌸𑌾𑌙𑍍𑌗𑌸𑌂𑌘𑍈-
𑌸𑍁𑌖𑌾𑌯𑍈𑌵𑌦𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌯𑍈𑌃”

“குற்றமில்லாத அழகான உருத்திராக்ஷாபரண விசேடத்தை உடையவர்களும் பற்றற்றவர்களும் விபூதிப்பூச்சினுல் பிரகாசமான அங்கத்தை உடையவர்களும் சிவத்தியாநத்தில் கட்

டப்பட்டதாயும் அதினல் சுத்தமாயும் இருக்கிற மனத்தை யுடையவர்களும் மகாசைவ பஞ்சாக்ஷர மந்திர சித்தியை யுடையவர்களும் ஆனவர்களால்".

இது முதலியவைகளால் பற்பமானது பத்தர்களுக்கு அடையாளம் (பக்தசின்னம்) என்று பிரகாசஞ் செய்தனர்.

அப்படியே ருத்திரபாஷியஞ்செய்த அபிநவ சங்கராச்சாரியர்களாலும்,

"பஸிதோத்தூளிதாநாம்
பத்தருத்ராக்ஷமாலிநாம்"

"பஸ்மோத்தூளநம் செய்தவர்களும் கட்டப்பட்ட உருத்திராக்ஷ மாலையை யுடையவர்களும்".

என்று ஸ்ரீ உருத்திரத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்கு அடை கொடுத்திருப்பதால் அவைகளின் மகிமை வெளியிடப்பட் டிருக்கிறது.

சாதாதபமிருதி.

"ஸுராம் பீத்வா குருதாராம்ஶ்ச கத்வா
ஸ்தேயம் க்ருத்வா ப்ரஹ்மஹத்யாம் க்ருத்வா।
பஸ்மச்சந்நோ பஸ்மஶய்யாஶயாநோ
ருத்ராத்யாயீ முச்யதே ஸர்வபாபை:"

"கள்ளைக்குடித்தல் குருபத்தினியைச் சேர்தல் திருடல் பிரமகத்தியைச் செய்தல் இவைகளைச் செய்தவன் பற்பத்தை நிறையப் பூசிக்கொண்டு பற்பப் படுக்கையிற் படுத்துக்கொண்டு ஸ்ரீ உருத்திரத்தைச் செபித்தால் சகலபாவங்களினின்றும் விடுபடுகிறான்".

ஸ்ரீ ருத்திரஜபத்துக்குப் பிர்மஹத்தி முதலிய சகல பாவ நிவிருத்தி செய்யுந்தன்மையைச் சொல்லுகிற சாதாதபஸ்மிருதியில் அந்தச்செபத்துக் கதிகாரியாக இருப்பவன் பஸ்மத்தால் மறைக்கப்பட்டவனும் (சர்வோத்தூளநம்) பஸ்மப் படுக்கையில் சயனித் துக் கொள்பவனுமாக இருக்கவேண்டும் என்று அடை கொடுத்திருப்பதனுல் வேறு காரணங்களால் உண்டாகும் மகாபாவ நிவிர்த்தியைச்செய்யும் தன்மையான மகிமையும் பஸ்மோத்தூளநம் முதலியவை களுக்கு நிச்சயிக்கப்பட்டது.

இன்னும்.

(௧)

"ரக்ஷாப³ந்த⁴ஸ்ய யதா²வத்³விதி⁴ருச்யதே।
[illegible]॥

(௨)

[illegible]।
[illegible]॥

(௩)

[illegible]॥"

"காப்புக்கட்டும் முறைவழக்கப்படி சொல்லப்படுகிறது. மெழுகிய (சுத்தியான) பூமியில் அரிசியால் நிரப்பப்பட்ட பாத்திரத்தை வைத்து, அதன்மேல் (அந்தப் பாத்திரத்தின்மேல்) பாக்கு வெற்றிலைகளைவைத்து அந்த வெற்றிலைகளில் பஸ்மத்தைவைத்து, அந்தப் பஸ்மத்தின் மேல் ஒற்றையாயிருக்கிற நூலையுடைய சூத்திரத்தை *வைத்து" என்று ஆரம்பித்து.

* சூத்திரத்தை—கயிற்றை.

“ உபவிஶ்ய தத꞉பஶ்சாச்ச
பாஶ்சாத்யைர்ப்ராஹ்மணைஸ்ஸஹ”

“ உட்கார்ந்து அதன் பின்பக்கத்திலிருக்கும் பிராம்மணர்களோடு” இது முதலானவைகளை (ச்சொல்லி).

“ ஆபோஹிஷ்ட” (ஆபோ ஹிஷ்ட) இது முதலிய மந்திரங்களால் அந்தச் சூத்திரத்துச்குத் தருப்பை நுனிச்சலத்தால் புரோக்ஷணஞ் செய்து, “ தரத்ஸமந்தீ” (தரத்ஸமந்தீ) “யப்பாவநீ” (யஃபாவநீ) “சுத்தவதி” (ஶுத்தவதீ) முதலிய ருக்குகளையும், அப்படியே சிலசாமங்களையும் செபித்து.

(௧)

“ உக்ஷ்ராதிராத்ராவித்யாதி விபேதந்த்யுக்ஷாவஸாநி।
தத்வ்ராஹ்மணஶுசிர்வாய ஸ்வைநாகளக்ஷம்.தத꞉॥

(௨)

த்ர்யம்பகே நவஸம்ஸ்ருஜ்ய ப்ரஹ்மஸ்தாநேத்ய வாவநு
ரூபஸ்ய களக்ஷம் ஹோத்ர ஜக்ஷிணே ஹஸ்வபாந்யே ந॥

(௩)

விஶ்வே த்வதீநியாயாநே ஹாயேஷ்ய தேஜிஸாவே।
பாணாவாபயவாதேக்ஷ்ரீணாம் ஹஸாயபாநமே॥

(௪)

ரூபம் மஹேஷ்வர்யோ ப்ராயோதூர்வ்யத நம்ஸக்ஷணாம்॥”

“அதிராத்திரௌ (அதிராத்ரௌ) இது முதலியவைகளைச் சொல்லி பிபா (பிப) என்ற இரண்டு சாமங்களைச் சொல்லி

அதற்குப் பிராமண மந்திரத்தையுஞ்சொல்லி, அதன்பின். திரியப்பக (த்ர்யம்பக) என்ற மந்திரத்தால் பஸ்மத்தினுல் பூசி பிரகத்சாமம் (ப்ருஹத் ஸாம) என்ற ருக்கைச் சொல்லிக்கொண்டு வலதுகையில் காப்பைக்கட்டி முடிச்சில் பஸ்மத்தை விஸ்வேத்த (விஶ்வத) என்ற மந்திரத்தால் போட்டுக்கடாசியில் யத்வா (யத்வா) என்ற சாமத்தைச் சொல்லவேண்டும் ஸ்திரீகளுக்கு இடது கையிற்கட்டி முடிச்சில் பஸ்மத்தைப் போடவேண்டும். இது மங்களகாரியங்களை ஆரம்பிக்கும் பொழுது செய்யத்தகுந்தது."

என்று விவாகமுதலிய சகல சுபகருமங்களின் ஆரம்பத்தில் ரக்ஷாபந்தநம்† செய்யத்தகுந்தது என்று வாமனு சாரியர் தமது காரிகையில் விதித்திருப்பதால் ரக்ஷைக்காகவும் மங்களத்துக்காகவும் என்று முன் உதகரிக்கப்பட்ட பாரதவசநத்தை யநுசரித்து விபூதியானது மங்களத்தின் பொருட்டாக இருக்குந்தன்மையுடையது என்று பிரகாசஞ்செய்யப்பட்டது. (ரு)

அவதாரிகை.

இன்னும் பஸ்மத்துக்குஸ்நாந யோக்கியத்துவமும் இருக்கிற தென்பதைச் சொல்கிறுர்.

மூலம்.

பிராமண குலத்துக்கு அக்கினி தெய்வ மென்று யஜுர்வேதஞ் சொல்கிறது. மிருதிகர்த்தாக் களும் பற்பத்தாற் செய்யப்பட்டஸ்நாநம் ஆக்கிநேயமென்று சொல்லுகிறுர்கள். இருடிகள் விஷ்ணுத் தியாநத்தைக் கௌணஸ்நாநமென்று சொன்னுர்கள். ஓரிடத்தி

† ரக்ஷாபந்தநம்=காப்புக்கட்டு.

லும் கோபீ சந்தநதாரணத்தை அந்தக் கௌணத்தி லுங் கணக்கிட வில்லை.

உரை.

“ஆக்நேயோ வை ப்ராஹ்மண:” எஜுர் வேதத்தில் “பிராமணர்களுக்கு அக்கினி தேவதை” என்று தெளிவாய்ச் சொல்லப்படுகிறது.

ஆக்நேய ஸ்நாநம்=ஆக்நேயம் பஸ்மஸ்நாநம் பஸ்மத்தாற் செய்யப்படும் ஸ்நாநம் ஆக்நேயம்=சிரௌதம்.† ஸ்மார்த்தம்‡ இதுமுதலிய அக்கினியிடத்தி லுண்டான பற்பத்தாற் செய்யப்பட்ட உத்தூளநம் முதலிய ரூபமான ஸ்நாநம்.

விஷ்ணுத்தியாநம் யௌகிகஸ்நாநம் என்றதனால் விஷ்ணுத் தியாநத்துக்கு கௌண¶ ஸ்நாநமா யிருக் குந் தன்மையுஞ் சொல்லப்பட் டிருக்கிறது.

இவ்விதம் கோபீசந்தன தாரணத்துக்கு ஸ்நாநரூபமாயிருக்குகை ஓரிடத்திலுஞ் சொல்லப்பட வில்லை. ஆனதால் பஸ்மஸ்நாநம்போல் கோபீசந்தநத்துக்கு கௌணஸ்நாநத்திலும் உள்ளடங்கி யிருக்குந்தன்மை (சேர்க்கப் பட்டிருக்குந்தன்மை) யானது இல்லையென்பது கருத்து.

ஆனால் ஆக்நேயம் (அக்கினி) வாருணம் (ஜலம்) இது முதலிய தக்ஷனுற் கணக்கிடப்பட்ட ஒன்பது விதஸ்நாநங்களுக்குள் ஆக்நேயஸ்நாநம் போல் “ஆ

† சுருதிசம்பந்தம். ‡ ஸ்மிருதிசம்பந்தம். ¶ இரண்டாம்பக்ஷம்.

ஶ்ராஜைவத்ஸ-வாஸ்திவ" "மண்பூச்சானது பார்த்திவம்" என்று மிருத்திகாஸ்நாநமும் * கணக்கிடப்பட்டிருப்பதால் கோபீசந்தநரூபமான மிருத்திகாஸ்நாநத்துக்கும் ஸ்நாநமாயிருக்குந்தன்மை விசேஷிக்கப்பட்டிருக்கிறது; என்று சொல்லுவாயானால் இல்லை. துளசி வில்வம் முதலியவைகளுக்கு ஆதாரமாயிருக்கிற சுத்தமான இடத்திலிருந் தெடுக்கப்பட்ட மண்ணால் சரீரத்தைப்பூசுகிற ஸ்நாநத்துக்குத்தான் பார்த்திவஸ்நாநம் என்று விதிக்கப்பட்டிருப்பதால் கோபீசந்தந தாரணத்துக்கு ஒன்பதுவித ஸ்நாநத்துக்குள் அடங்கி யிருக்குந் தன்மையானது இல்லை. அதிகமாய்ச் சொல்வானேன். (௬)

அவதாரிகை.

ஆனால் "கோபீ சந்தனதாரணத்துக்கும் பஸ்மதாரணம் போல் சுருதியை யடைந்திருக்குந் தன்மை விசேடிக்கப்பட்டிருக்கிறது, வாசுதேவோப நிஷத்தில் அதைவிதித்திருப்பதால்" என்றதனால் அதைக்காட்டிலும் விசேடத்தைச் சொல்கிறார்.

மூலம்.

வாசுதேவோபநிஷத்திற் சொல்லப்பட்டதாயும் அப்படியே முனிகளால் நினைக்கப்படுகிறதாயும் இருக்கும் கோபீகந்தோர்த்வ புண்டரமானது வேதத்தை அறிந்த அநேக மகான்களால் தரிக்கப்பட்டிருந்தும் பஸ்மோத்தூளநம் திரிபுண்டரம் இவைகளைக் காட்டிலும் தணிவாக எப்படிச் சொல்கிறீர்? நிஜந்

* மண்குளிப்பு—சரீரத்தில் மண்ணைப்பூசுதல்.

தான், இவ்விதமான மிகவும் அதிகபிரமாண மிருப்பதால் இவ்விடத்தில் விபூதியில் மேன்மையா யிருக்குந் தன்மையை வைக்கிறோம்.

உரை.

அதிகப்பிரமாண மிருப்பதால் — வாசுதேவோபநிஷத்தைத் தவிரத் தாமே ஆதாரமாக விருப்பதால் வேறொரு ஆதாரத்தை யபேக்ஷியாமல் இருக்கும் சுருதிகளுக்குள் பற்பத்துக்குப் போல கோபீசந்தனத்தின் மகிமையையாவது அதைத் தரிக்கும் விதியின் கேள்வியையாவது ஓரிடத்திலும் அடையாமலிருக்கிறோம். விபூதிதாரண மகிமையோ வென்றால் பாரதம் வாமனபுராணம் முதலிய உபப் பிருமணத்தோடுகூடிய தைத்திரீயம் அதர்வசிரசு காலாக்கிநிருத்திரம் ஜாபாலம் இவ் வுபநிஷத்துக்களால் கோஷிக்கப்பட்டும் சகல வித்துவச் சிரேட்டர்கள் மிக ஆஸ்திகர்கள் ஆன பெரியோர்களால் புகழப்பட்டும் மகான்களால் கிரகிக்கப்பட்டதாக அநுமானஞ் செய்யப்பட்டும் இருக்கிறது என்று முன்னமே நாம் அறிவித்திருக்கிறோமாதலால்.

இன்னும் வாசுதேவோப நிஷத்தில்,

“𑌸𑌾𑌯𑌂𑌪𑍍𑌰𑌾𑌤𑌰𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌭𑌸𑍍𑌮𑌨
𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌾𑌸𑌿𑌇𑌦𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁
𑌤𑍍𑌰𑍀𑌣𑌿𑌪𑌦𑍇𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁
𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌣𑌵𑍇𑌨𑍋𑌦𑍍𑌧𑍂𑌲𑌨𑌂
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌿𑌨𑌾 𑌗𑍋𑌪𑍀
𑌚𑌨𑍍𑌦𑌨𑌂𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍.”

“பின் இராத்திரியில் அக்கிநிகோத்திர பஸ்மத்தினால் அக்நேர்பஸ்மாசி (𑌅𑌗𑍍𑌨𑍇𑌰𑍍𑌭𑌸𑍍𑌮𑌾𑌸𑌿) இதம் விஷ்ணுஃ (𑌇𑌦𑌂𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃)

திரீணிபதா (த்ரீணி'வதா) என்ற மந்திரங்களாலும் விட்டுனு காயத்திரியாலும் பிரணவத்தினுலும் உத்தூளநத்தைச் செய்ய வேண்டும் இந்த விதியினுல் கோபீசந்தநத்தைத் தரிக்க வேண்டும்."

என்று கேட்கப்படுவதினுல் கோபிசந்தன தாரணத்தை விதிக்கும் சுருதிக்கும் பஸ்மோத்தூளநஞ் செய்வதில் தான் கருத்தென்பது வஜ்ரப்பூச்சாகிறது. எதிரிகையிற் கொடுக்கப்பட்ட ஜயத்தீர்ப்பு நியாயத்தினுலே சகல வேததாற்பரிய விசிராந்தி ஸ்தலம் § புண்டரங்களுக்குள் திரிபுண்டரம் (திரிபுண்டரமே சிறந்தது) என்று கண்டாகோஷமாகத்தெளிவாகிறது.

சொல்லப்பட்ட உபநிஷத்தில் இராத்திரியில் அக்கினிகோத்திர பஸ்மத்தால் என்னுமிடத்தில் இராத்திரியில் என்னுஞ்சொல் அக்கினிகோத்திரத்தைத்தழுவுகிறது. இராத்திரியில் உண்டாகிற அக்கினி கோத்திரமே முதலாவதென்று பிரசித்தமா யிருக்கிறது. (அக்கினி கோத்திரம் இராத்திரி முதல்தான் ஆரம்பிக்கப்படுகிறது) அந்தப் பற்பத்துக்கே காலையில் கோபிசந்தனத்தைத் தரித்தபின் உத்தூளநம் சம்பவிக்கிறது. †

ஆக இப்படி இந்த உபநிஷத்து விழித்துக்கொண்டிருக்கும் பொழுது திருவிசை நல்லூரில் வசிக்கும்

---

§ இளைப்பாறுமிடம் அதாவது முடிவானகருத்து.

† (அந்தப் பஸ்மமே காலையில் கோபீசந்தனம் தரித்தபின் உத்தூளநம் செய்யப்படுகிறது.)

ஒருவர் எதனால் இதை உபேக்ஷித்து விட்டார் இவ் விதமென்று அறியோம். ஆனால் பஸ்மோத்தூளநம் கோபீசந்தநத்தின்பேரில் தரிக்கத்தகுந்ததாகச் சொல்வதால் பஸ்மோத்தூளநத்தில் துவேஷம் (விரோதம்) உள்ள அவருக்கு அதிலும் * விரோதாதிக்கமிருப்பதால் உபேக்ஷித்து விட்டார் என்று அநுமானிக்கிறோம்.

ஆனால் அவரால் கோபீசந்தன ஊர்த்தவ புண்டரதாரணம் சர்வபாவத்தையும் போக்கும் நித்தியமாயுமிருப்பது இதனால் சகலரும் கட்டாயமாகக் கோபீசந்தனத்தைத் தரிக்கவேண்டும் என்றுறுதியாய்ச் சொல்லி அதற்குக் காரணமாக கௌதம ரிஷியாற் செய்யப்பட்ட ஆசார சூத்திரத்திலிருக்கிற அ-வது கண்ட வசநம் பிரமாணம் என்று உபந்நியாசஞ்செய்யப் பட்டிருக்கிறது. அப்படியே கங்காதீரத்திலுண்டான மிருத்திகையைத் தரித்தவனைப்பார்த்து பிர்மஹத்தி செய்தவன் அதிலிருந்து விடுபடுகிறான் என்று பாவ நிவிர்த்திசெய்யுந் தன்மையைக் கங்காநதியின் கரையிலிருக்கிற மண்ணுக்கு உறுதிப்படுத்தி அந்த மண்ணைத் தரிப்பதிலும் அதையே (அச்சூத்திரவசநத்தையே) காரணமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படிச் சொல்வது சித்தியாததினால் இன்றும்; கௌதமராற் செய்யப்பட்ட தருமசாஸ்திரம் இல்லையல்லவா?

---

* (கோபீசந்தனத்தின்மீது பஸ்மோத்தூளநம் செய்யவேண்டுமென்கிற வாசுதேவோப நிஷத்து வாக்கியத்திலும்.)

"𑌵𑍇𑌦𑍋𑌽𑌖𑌿𑌲𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌾𑌂𑌚 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍀𑌲𑍇"

"தருமத்துக்குக் காரணமானது வேதம் அதை உணர்ந்தவர்களுடைய ஸ்மிருதி யாசாரத்திலும்." *

இது முதலியவை சகல வைதிகமகா ஜனங்களால் கிரகிக்கப்பட்டு எப்படிப் பிரசித்தமா யிருக்கிறதோ: அப்படி அவரால் (கௌதமரால்) செய்யப்பட்ட ஆசார சூத்திரமானது பெரியோர்களால் கிரகிக்கப் படவில்லை. இன்னும் சகல பாவத்தையும் நிவிர்த்தி செய்யுந்தன்மை நித்தியமாயிருக்குகை இவைகளால் சகலராலுங் கட்டாயமாகத் தரிக்கத்தகுந்தது என்று சொன்னால் (என்று நீர் சொல்கிறீர் அப்படிச் சொல்வீரானால்) சகலராலும் (ஸர்வை:) என்ற இதனால் எது விசேஷிக்கப்படுகிறது? மூன்று வருணங்களால் என்றால் அவர்களுடைய லாபமெப்படி (சகலராலும் என்ற விசேஷணத்தால் அம்மூன்று வருணத்தார் எப்படிக் குறிக்கப்பட்டார்கள்) உசிதமாயிருப்பதால் (அவர்கள் தகுதியுடையவர்களா யிருப்பதால்) என்றால். அப்படியில்லை. மூன்று வருணத்தாருக்கு (உம்மால்) சொல்லப்பட்ட ஊர்த்தவ புண்டரத்தில் அதிகாரம் இருக்கும்பொழுது முன் உதகரிக்கப்பட்ட தைத்திரீய உபநிஷத்து அதர்வ சிரசு காலாக்கிநிருத்திரம் ஜாபாலோபநிஷத்து முதலியவைகளாற் சொல்லப்பட்ட பஸ்மம் திரிபுண்டரம் இவைக

---

* கருத்து. (வேதத்திற் சொல்லப்பட்டு ஸ்மிருதியால் உபப்பிருமணஞ் செய்யப்பட்ட தருமமே ஆசரிக்கத்தக்கது.

ளில் அதிகாரம் அந்தத்திரை (மூன்று) வர்ணிகளுக்குச் சேராதல்லவா?

இன்னும் உம்மால் உதகரிக்கப்பட்ட கௌதமதரும சாஸ்திரம் ஸ்மிருதியாயிருப்பதால் மூலசுருதியை யபேக்ஷித்தே பிரமாணம் (ஆதாரம்) ஆகும். மூல சுருதியை யபேக்ஷியாமலிருக்கிற புருஷவசநங்களுக்குத்தானே பிரமாணமாயிருக்குந் தன்மையை—(மூல சுருதியைத் தழுவாதமிருதியை) ஒரு மீமாம்சகனும் ஒப்புக்கொள்ளாமலிருக்கிருனல்லவா? அப்படியல்லாவிடில்—(மூலசுருதியைத் தழுவாமல் ஸ்மிருதிக்குப் பிரமாணத்வ மங்கீகரிக்கும் பக்ஷத்தில்).

"ஔது³ம்ப³ரீம்ஸ்ப்ருஷ்ட்வோத்³கா³யேத்"

"அத்தித்தண்டத்தைப் பிடித்துக்கொண்டு உத்காதா (உத்³கா³தா) என்ற ரித்தியுக் வேதத்தைப் படிக்கவேண்டும்"

என்ற பிரத்தியக்ஷ சுருதிக்கு விரோதமான,

"ஔது³ம்ப³ரீஸர்வாவேஷ்டயிதவ்யா"

"சகல அத்திகளும் சுற்றத்தகுந்தது" என்றமிருதியும் பிரமாணமாகும். அநுட்டிக்கத் தக்கதாகவும் ஆகும். ஆனதால் ஆசார சூத்திரமென்றும் கௌதமராற் செய்யப்பட்டதென்றும் நாம் மதிக்கவில்லை. பின்னேயோ அநேக சுருதிகளுக்கு விரோதமா யிருப்பதாலும் வேதத்தை மூலமாக உடைத்தாகாமலிருப்பதாலும் எவனே ஒருவனுற் கற்பிக்கப்பட்டதா யிருக்குமென்று அறிகிறோம். உமக்கிஷ்டமான வாசுதேவோ

பநிஷத்தை ஆதரவாக வைத்துக்கொண் டிருந்தால் உமக்கு இஷ்டமில்லாத பஸ்மோத் தூளநத்தையும் நீர் ஒத்துக்கொள்ள வேண்டியதாகவாம், ஆகையால் உமக்குச் சம்மதமான இந்த கோபீசந்தந முதலிய ஊர்த்தவ புண்டரதாரணமானது மிருதியை மாத்திரஞ் சார்ந்ததென்று சித்திக்கிறது. இதனாலேயே ஆஸ்திக சிரேட்டர்களும் ஊர்த்தவ புண்டரதாரிகளும் ஆன உன்னுடைய பிதா பிதாமகர் முதலியவர்களும் கோபீசந்தநத்தின்பேரில் பஸ்மோத்தூளநத்தையும், மாத்தியாநிகஸ்நாநஞ்செய்தபொழுதும் அமாவாசை முதலியவைகளிலும் பஸ்மத்திரி புண்டரதாரணத்தையும் செய்வதை நான்பார்த்தேன். கேட்டுமிருக்கின்றேன். இன்னும்,

(க) "யெ நாஸ்ய விதரொயாதாஃ யெநயாதாஃவிதாஹாஃ । தெ நயாயாஸ்ய தாமிஸ்ரம் தெ நமஸ்ய நிஷ்ப்ருதி॥

(உ) யத்ரஸாஸ்த்ர மதிஹிம்நா ஸவக்ஷஸ்யஸம்ஹாரத । உதிதெ தஉ நமதிதெ தவெவ ஹொஷெஹஜாய யாஹவெக॥

(ரு) தஸிநக்ஷ்ருஜாயாதம் க்ஷுஹாஸாவரெத்வயஃ। ஸமரீயாநுஹாஸாஹா ஸவஸ்ராஹேஸ்ர ப்ரிதாஉஸ ''

(௧) இவனுடைய பிதா எந்தவழியாய்ப் போனானோ இவனுடைய பிதாமகன் எந்தவழியாய்ப் போனானோ அந்தவழியாகச் சன்மார்க்கத்தை யடையவேண்டும் அந்தவழியாய்ப் போகிறவன் தாண்டுவான்,

(௨) தர்மபுத்திரரே? உதயமான பின்பும் உதயத்துக்கு முன்னும் ஓமபேத மானது உண்டாவதுபோல் சகல கர்மவிஷயங்களிலும் எந்தஇடத்தில் சாஸ்திரசுதியானது பேதப்பட்டிருக்கிறதோ.

(௩) அந்த இடத்தில் சகல சாஸ்திரங்களால் சொல்லப்பட்டபோதிலும் ஞானயிருக்கிற தருமபுத்திரரே? எவன் குலக்கிரமமாய்வந்த ஆசாரத்தை அநுட்டிக்கிறானோ அவன் பெரியவன்.

இதுமுதலிய மிருதிகள் விழித்துக்கொண்டிருக்கையில் அவைகட்கு விரோதமான பஸ்மோத்தூளநம் திரிபுண்டரம் இவைகளில் துவேஷம் (வைப்பது) உமக்குச் சரியல்ல,

இன்னும் நான்கு ஆச்சிரமங்களில் சிவன் ஒருவனிடத்திலேயே பக்திவைத்தவர்கள் நான்கு பெயர் முதலாவது ஆச்சிரமத்தில் ததீசி கிருகத்தாச்சிரமத்தில் கௌதமர் வானப்பிரத்தாச்சிரமத்தில் அகஸ்தியர் துரியாச்சிரமத்தில்* துருவாசர் என்று சைவபுராணங்களில் கோஷிக்கக் காண்பதால் கௌதமர் ஊர்த்தவபுண்டரம் ஒன்றிலேயே அபிமானமாக ஆசாரசூத்திரத்தைக் கற்பித்தார் என்பது அவருடைய சுபாவத்துக்கு விரோதமானது,

---

* சந்நியாசம்.

இன்னும் பிராயச்சித்தப் பிரகரணத்தில் அதர்வ சிரசுருதியை முக்கியமாய்க் கிரகித்த பகவானுன கௌதமர் அதர்வசிரசுருதியால் பிரதிபாதிக்கப்பட்ட பாசுபதவிரத மென்ற பெயரையுடைய பஸ்மதாரணம் அவசியம் செய்யத்தகுந்ததாக நிரூபித்திருக்கிறர். அதைவிட்டுவிட்டு ஆசார சூத்திரத்தில் கோபீசந்தனோர்த்தவபுண்டரம் அல்லது வேறு எதாவது தரிக்கத்தகுந்ததாக அவரால் உபதேசிக்கப்பட்டது என்ற அந்தச் சூத்திரத்தை எப்படி நம்புவோம். ஆகவே ஆசார சூத்திரத்தில் சொல்லப்பட்ட (தாக நீர் சொல்லும்) புண்டர தாரணமானது அவைதிகந்தான் (வைதிகமல்ல) என்று அங்கீகாரஞ் செய்யத்தகுந்தது.

ஆனுல் கௌதம தருமசாஸ்திரத்தில் கூ-வது அத்தியாயத்திலிருக்கிற,

"நஹஸ்மகேஶ துஷகபாலா
மேத்யாந்யதிஷ்டேத்"

"பற்பம் மயிர் உமி வராட்டி ஓடு அமேத்யம் (அசுத்தம்) (இவைகளின்) மேலிராதே"

என்றவசனப்பிரமாணத்தினுலே பஸ்மம்மயிர்போல் அசுத்தந்தான் என்று (உம்மால்) துர்வாதஞ்செய்யப்பட்டிருக்கிறது. அதுபிசகு அதைவிவகரிக்கின்ருேம்.

*பஸ்பம்என்ற சொல்லின் பொதுத்தன்மையானது அசுத்தத் தன்மையைச் சாதிப்பதற்குக் காரணமாகு

---

* கருத்து. பஸ்மத்வத்தின் பொதுத்தன்மையால் அசுசித்வத்தைச் சாதிப்பதில் சித்தித்த ஹேதுவானது பஸ்மத்வத்தின்

மாஞல் அது சுத்தத்தன்மையின் கிரகணத்தை உண்டு பண்ணுவதிலும் விரோதம் இல்லை. *

முதல் நாள் பாகத்துக்குச் சாதனமான அக்கினியிலிருந் துண்டான பஸ்மம் முதலியவை மறுநாட் சமையற் காரர்களாற் குப்பைக்கிடங்கிற் போடப் பட்டதனுல் அசுத்தத்வம் அடைவதால் அசுசியாயிருக்குந் தன்மை சாதிக்கப்படுகிறது (அது) பஸ்மமாயிருக்குந் தன்மையோடு கூடியிருப்பதால் பாதகமா? (பாதகமில்லை.) †

"ஸுஹ்ருஸ்ரிதஹ்ராஷிநாஸஸூஹ்யஹீகூா
நிஶுஜஹ்ா:மாநிவஸவூஹ்யலூஸு॥"

---

பொதுத்தன்மையால் சுசித்வத்தைக் கிரகிக்சச் சம்பவிப்பதிலும் விரோதமில்லை அதாவது அசுசியாயிருக்குந் தன்மையை உறுதிப்படுத்துவதில் சித்தமான சாதனம்§ பஸ்மம் என்றசொல்லின் பொதுத்தன்மையால் உண்டாகிறதென்ருல் (அந்த) பஸ்மம்என்ற சொல்லின் பொதுத்தன்மையால் சுசியாயிருக்குந் தன்மையின் கிரகணம் உண்டாவதிலும் ஒருவிரோதமில்லை

§ சித்தமான சாதனம்=உபயோகப்படுங்கரணம்.

† கருத்து. (முதனுட் சமைத்த அக்கினிச் சாம்பல் குப்பைக் கிடங்கிற் போடப்பட்டு அசுத்தத்வம் அடைந்ததால் அசுசியென்னப்பட்டது அப்படி அது சொல்லப்படுவதால் அங்ஙனம் அசுத்தமடையாத அக்கினி கோத்திர பஸ்மம் முதலிய பரிசுத்தமான பஸ்மங்களுக்கும் நீற்றும் செயலால் பஸ்மம் (நீறு) என்னப்படும் பெயர்ப் பொதுமை யொன்றினுலேயே அபரிசுத்தம்வந்து விடுமா? (வாராது.)

"அக்கிநிரிதி (அக்நிரிதி) என்பதை யாதியாகவுடைய மந்தி ரங்களால் பஸ்மத்தைக் கிரகித்து ஜபித்து அங்கங்களில் உத் தூளநஞ் செய்யவேண்டும்."

என்று அதர்வசிரசில் தரிக்கத்தகுந்ததாய் விதிக் கப்பட்ட அக்கினிகோத்திரபஸ்மம் முதலியவைகள் மற்றவைகளுக்குச் சுத்தத்தன்மையைக் கொடுப்பதா லும் கங்காஜலம்போல் (பாவத்தினின்று) சுத்திபண் ணுவதாலும், பஸ்மமானது மிகச்சுத்தியாயிருக்குந் தன்மை யுடையது. (இதனால் உம்மாற் செய்யப் பட்ட பூர்வபக்ஷம்பிசகு) முன் உதகரிக்கப்பட்ட சுருதிகளால் அது (சுத்தத்வம்) சித்திப்பதால் சொரூ பாசித்தி யுண்டாகவில்லை. (சுத்தத்வம் எடுபட்டுப் போகவில்லை.)

இன்னும் (உம்மால்) சாதிக்கத் தகுந்ததா யிருக் கிற அமேத்யத்வம் ஆனது பரிசிக்கத் தகாத ரூபமான அசுத்தத்வம் உடையது என்று சொல்லத் தகுந்ததா யிருக்கிறது. *

"ஊர்த்4வம் மேத்4யம் புருஷஸ்ய நாபே4ர்

மேத்4யம் அதோ4 அமேத்4யம்"

"புருஷனுடைய நாபிக்கு மேற்பாகம் மேத்தியம் கீழ்ப்பா கம் அமேத்யம் (அசுத்தம்.)"

---

* கருத்து. (உம்மால் (பற்பம் முதலியவைகளுக்கு) ச் சாதி க்கத் தகுந்த அசுத்தத்வம் தொடுதற்கு அயோக்கியமான அசுத் தம் என்று சொல்லத்தக்கது.)

என்ற (யஜுர்) வேதத்தில் மேத்யம் அமேத்யம் எனப்படும் சொற்கள் முறையே சுத்தம் அசுத்தம் என்ற அருத்தத்தை யுடையன என்று காண்பதால் அதில் (பஸ்மம் அமேத்யம் என்று சொல்லும் விஷயத்தில்) நபஸ்ம (நஹஸூ) இதை யாதியாகவுடைய சூத்திரமானது காரணமா யிருப்பதாக எப்படி அந்வயிக்கப்படுகிறது. †

பஸ்மத்தை ஆதாரமாகவுடைய அதிட்டானத்தையே (அமேத்யத்வத்தையே) அந்தச் சூத்திரமானது நிஷேதிப்பதினால் அது (பஸ்மம்) தொடத்தகா திருக்குந்தன்மையுடையது என்றுபோதிப்பதாகஆகாது. ‡

(சூத்திரத்திலிருக்கும்) நாபிக்ஷேசு என்பதற்கு (நாசுராமேசு) மேலிருக்கவேண்டாம் என்று அந்தச் சூத்திரத்தின் வியாக்கியாநத்தில் பொருள் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

(நஹஸூ...அமேத்யாநி = பஸ்மம் ... அமேத்தியங்களை என்று இரண்டாம் வேற்றுமையிற்சொல்லப்பட்டிருப்பதால் அதற்கு இரண்டாம் வேற்றுமைப் பொருளையே கூறலாம் எனில் கூடாது)

---

† கருத்து. பஸ்மம் ஆனது அசுத்தம் என்று சொல்ல நபஸ்ம (நஹஸூ) என்ற சூத்திரம் எவ்விதம் பொருள் கொள்ளப்படுகிறது.

‡ கருத்து. (பஸ்மத்தைச் சார்ந்த அசுத்தத்தை அதாவது அசுத்தமான பஸ்மத்தை நிஷேதிப்பதால் (பொதுவில் எல்லா) பஸ்மமுந் தொடத் தகுந்ததல்லவென்று போதிப்பதாக ஆகாது)

"அயிஶீஙீ ஸ்தாஸாம் கர்ம"

என்ற பாணிநீய சூத்திரத்தால் அதி (அபி) என்ற உபசர்க்கத்தை முன்வைத்துக் கொண்டிருக்கிற ஸ்தா என்றபகுதியின் சேர்க்கையில் ஏழாம்வேற்றுமை அர்த்தத்தில் இரண்டாம் வேற்றுமை விதிக்கப்பட்டிருப்பதால். (அயிஶேதெ தஷ்வம்=பூமியைத் தூங்குகிருன்=பூமியில்தூங்குகிருன். அயிஷ்டிதி மடம்=மடத்தை இருக்கிருன்=மடத்தி லிருக்கிருன் முதலியனபோல) அந்தச் சூத்திரத்தால் பஸ்மஸ்பரிசமானது நிஷேதிக்கப் பட்டிருக்குமானல் பஸ்மம் கேசம் முதலியவைகளைத் தொடவேண்டாம் என்றே சூத்திரஞ்செய்யப் பட்டிருக்கும். அப்படி அவர் சூத்திரஞ் செய்யவில்லை ஆனதால் பஸ்மம் முதலியவைகளின் மேல் இருக்க வேண்டாமென்றே நிஷேதவாக்கியத்தின் பொருள். அபி என்ற உபசர்க்கம் உபரி=மேல் என்ற அருத்தத்தை யுடையதாகையால்.

"யெ ருத்ராஅயிஹூமௌ கா ததிக்ஷவகாஅபி"

"எந்த உருத்திரர்கள் பூமியின்மேலோ எவர்கள் ஆகாசத்தின் மேலுண்டானவர்களோ"

என்ற (ருத்திராத்தியாயம்) முதலிய சுருதிகளில் (அந்த அபி சப்தத்துக்கு) அந்த (மேல்என்ற) அருத்தத்தை உடைத்தாயிருக்குந்தன்மை இருக்கிறது. கேசபதத்தோடு கலந்திருப்பதால் கேசம்போல அமேத்யம் என்று (சொல்வாயோ அங்ஙனம்) சொல்லாதே.

நன்று தீது, (குற்றமில்லாதது குற்றமுள்ளது) நன்மொழிதீமொழி, புண்யபாவம், ராமராவணர்யுத்தம், இதுமுதலிய இடங்களில் வெகுவாய் உம்மைத்தொகை காணுமிடத்து சேர்க்கையானது சேர்ந்த தன் தன்மையை அறிவிக்காமையால். அப்படி யல்லாவிடில் * மேற் சொல்லப்போகிற விடங்களிலும் அந்தத் தோற்றம்வரும். ஸ்மிருதி கிரந்தங்களில்.

"த்ரியாமாயாஸ் த்ருதீயாம்ஶே
யஸ்ஜந்மம்ருத்யுதவம்"

"இராத்திரியில் ௩-வது அம்சத்தில் உற்பத்தி ஸ்திரீ இருது மிருத்யு (மரணம்).

இது முதலியவிடங்களில் மங்களம் அமங்களம் ஆன பதங்களின் இரண்டு அருத்தங்களையும் சமானமாகவே கிரகிப்பதைக் காணுவதாலும்.

சொல்லப்பட்ட சூத்திரத்தில்

ஹஸ்மகேஶதுஷகபீஷகவாலாநி (வதாநி)
கபெயாநி

பஸ்மம் மயிர் உமிவராட்டி ஓடு) களாயிருக்கின்ற அந்த) அசுத்தங்கள். என்றது.

பண்புத்தொகை: உம்மைத் தொகையல்ல. உம்மைத் தொகையா யிருந்தால் "ஹெதெஃஶம்ஃஶ:" "பேதந்தோன்றினல் உம்மைத்தொகை" என்று பாணிநி

* (சேர்க்கையினுல் சேர்ந்த பதத்தின்குற்றம் குற்றமல்லாத மற்றபதத்துக்கும் வருமெனில்.

சொன்னவழியால் கேசம் முதலியவைகளுக்கு அமே
த்யத்தைக் காட்டிலும் வேருயிருக்குந் தன்மை அவ
சிய மாகையால் அவைகளுக்குத் தாமே சுத்தமா யிரு
க்குந் தன்மை யுண்டாவதால் பண்புத் தொகைதான்
என்று (நீர் சொன்னீர் அங்ஙனம்) சொல்வதும் சார
மில்லை. "ப்ரமாணப்ரமேய" "பிரமாணப் பிரமே
யம்" இது முதலிய நியாய சூத்திரத்தில் உம்மைத்
தொகை காணுவதால்.

பதங்கள் அருத்தத்தால் அளக்கப் பட்டிருப்பதால்
(அதாவது பேதமாயிருந்தாலும் வெவ்வேறு அருத்
தத்தை ஒவ்வொரு பதமும் உடைத்தா யிருப்பதால்)
பேதமா யிருந்தாலும் நீலகடம் நீலம் என்ற குணம்
கடத்தில் பிரிக்கக்கூடாதபடி அந்வயிப்பதால் அபே
தம் ஆதலால் நீலகடம் என்பது பண்புத்தொகை.
கேசத்வத்தை ஆதியாக உடையதும் அமேத்யத்வத்
தை அந்தமாக உடையதும் ஆன தர்மங்களுக்குப்பே
தத்தைக் கிரகித்துத் தொடர் (உம்மைத் தொகை)
உண்டாவதாலும் பிரமாணத்வம் பிரமேயத்வம் இது
முதலிய இடங்களிலே பேதங்களைக் கிரகித்தே சொல்
லப்பட்ட நியாய சூத்திரத்தில் உம்மைத் தொகை
பிரதிபாதிக்கப் பட்டிருப்பதாலும், சொல்லப்பட்ட
சூத்திரத்தில் உம்மைத் தொகை உண்டாகாதென்று
சொல்வது சரியல்ல. "பேதந்தோன்றினுல் உம்மைத்
தொகை" என்று பாணினி சொன்னரீதியால் என்று
(உம்மாற்) சொல்லப் பட்டிருக்கிறது. இதைக்கேட்டு
வையாகரணிகள் கைகொட்டிச் சிரிப்பார்கள் "வா

ரேதஉஸ:” “உம் என்ற அருந்நத்தில் உம்மைத்தொகை வரும்” என்றல்லவா பாணிநி சூத்திரஞ்செய்திருக்கிறார் “பேதந்தோன்றினல் உம்மைத்தொகை” என்று அல்ல.

“ஸமுச்சயாந்வாசயேதரேதர
யோகஸமாஹாராச்ச்வார்த்தா:”

உம் (வ) என்பதற்கு சமுச்சயம் அந்வாசயம் இதரேதரயோகம் சமாஹாரம் என்று நான்குபொருள். *

இந்த நான்கில் இதரேதரயோகம் சமாஹாரம்.

என்ற இரண்டு பொருள்களிலேயே உம்மைத் தொகைவருகிறது. அபேக்ஷையிருப்பதினாலே (ஒன்றுக்கொன்று சம்பந்தத்தை விரும்புவதால்) என்றதனால் அவைகளுக்கு (அவ்விருவகை உம்மைத் தொகைகளுக்கு) அவசியம் பேதமுண்டாவதால். “ஹேதுஉஸ:” “பேதந் தோன்றுமிடத்தில் உம்மைத்தொகை” என்று முக்தாவளி முதலிய கிரந்தங்களில் எழுதப்பட்டிருக்கிறது. †

---

* (சமுச்சயம் = ஒன்றை யொன்று அபேக்ஷியாமலிருக்கிற அநேகங்களுக்கு ஓரிடத்தில் அந்வயம், அந்வாசயம்=இரண்டுகளுக்குள் ஏதேனுமொன்றுக்கு அபேக்ஷையிருத்தல். இதரேதரயோகம் = சேர்ந்த அநேகங்களுக்கு அந்வயம். சமாஹாரம்=கூட்டம்.)

† கருத்து. (தொடரில் ஒன்றுக்கொன்று சம்பதந்தத்தை விரும்புகையாலே ஒவ்வொரு பதமும் வெவ்வேறு யிருப்பதால் பேதமான்து கட்டாயமாய் உண்டாகிறது ஆதலால் பேதந்தோன்றுமிடத்து (முக்தாவளி முதலிய கிரந்தங்களில்) உம்மைத்தொகை என்றது.)

எப்படியாவது பாணினி சொன்னார் என்பது பிசகுதான்.

உம்மைத் தொகையில் மயிர் முதலியவை அமேத்ய சப்தத்துக்கு வேறாயிருப்பதால் அவைகள்தாமே சுத்தங்களா யிருக்கின்றனவென்று சந்தேகிக்கக்கூடாது. கேசத்வம் (மயிரா யிருக்குந்தன்மை) முதலியன அமேத்தியத்துவத்துக்கு (அமேத்தியமா யிருக்குந் தன்மைக்கு) வேறாயிருக்கின்றன என்றல்லவா என் பக்ஷஞ்சித்திக்கிறது. கேசம் முதலியன அமேத்யத்வத்தை யுடையதைக் காட்டிலும் வேறு என்று அல்ல. †

ஆனதால் இவ்விடத்தில் உம்மைத் தொகையே பொருத்தம், உம்மாற் சொல்லப்பட்ட பண்புத்தொகைத்தொடர் அல்ல. அப்படி இருக்தும் பக்ஷத்தில் அமேத்ய சப்தமானது பஸ்மம் கேசம் முதலியவைகளுக்கு விசேடணம் (அடை) ஆவதால்

"വിശേഷണം വിശേഷ്യേണ ബഹുലം"

"விசேடம் விசேடியத்தோடு சேரும்."

என்ற பாணினீயசூத்திரத்தால் அமேத்யசப்தமானது முன்னிருக்குந் தன்மையை அடையும். இன்னும் அமேத்ய சப்தத்துக்கு விசேடணம் (பண்பு) ஆயிருக்குந் தன்மை உண்டாகும் பொழுது மேத்திய

† கருத்து. (கேசம் முதலியன மேத்யத்வம். (சுத்தத்வம்) உடையது என்று அல்ல. கேசத்வம் முதலியன அமேத்வத்துக்கு வேறாயிருக்கின்றன. அதாவது கேசத்வம் வேறு அமேத்யத்வம் வேறு.)

மரணபஸ்மம் முதலியவைகளை நீக்குந் தன்மையை அவசியம் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாவிடில் விலக்கப்படுவது இல்லாமையால் விலக்குந் தன்மையை யுடைய விசேடணம் (அமேத்யம் என்ற அடை) பொருந்தாது. *

ஆகவே பஸ்மப்பொதுவுக்கு அமேத்யத்வத்தைச் சொல்வது வீண்துர்வாதம் என்றுகிறது.

இன்னும் ஆபஸ்தம்பராற் செய்யப்பட்ட தர்மசாஸ்திரத்தில் “ஹஸ்தக்ஷாயிஷ்டாநம், வஹாவாஹஸ்ரக்ஷாஉநம்”

என்ற இரண்டு சூத்திரங்களால்

“ சூத்ரெதஜஸாம்ஹொஜநம்வஜூயெசு”

என்ற சூத்திரத்திலிருந்து “வஜூயெசு” என்ற விஷயின் அநுவிர்த்தியை (ஓட்டுதலை) உடைய ஹஸ்தக்ஷாயிஷ்டாநம் வஹாவாஹஸ்ரக்ஷாஉநம், என்ற இரண்டு சூத்திரங்களுக்கு

காலினற் காலை யலம்புவதையும் அதிஷ்டானத்தையும் தள்ளு. ஒரு காலினல் வேறொரு காலை யலம்புவதையும் (அதிஷ்டாநத்தையும்) பஸ்மம் உமிமேல் இருத்தலையும் செய்யாதே.

---

* கருத்து. (அமேத்ய சப்தம் விசேடணமா யிருந்தால் மேத்தியமான பஸ்மம் முதலியவைகளை விலக்கி அமேத்தியமான பஸ்மம் முதலியவைகளைக் குறிக்கிறதென்று அவசியம் கொள்ளவேண்டும்; மேத்ய பஸ்மம் அமேத்ய பஸ்மம் என்றிருவகைப் பஸ்மம் இருந்தாலொழிய பஸ்மத்துக்குக் கொடுத்த அமேத்யம் என்ற விசேடணம் பிரயோசநப் படமாட்டாது.)

இப்படி வியாக்கியானஞ் செய்தவர்களால் பஸ்மம் உமி இவைகள் மேலிருத்தல், ஒரு பாதத்தினால் மற்றொரு பாதத்தை யலம்புதல், பிரேத போஜனஞ் செய்தல், முதலியவைகள் கூடாதென்று நிஷேதிக்கப் பட்டவைகளையும், கௌதமரால் நிஷேதம் (தள்ளுபடி) செய்யப்பட்ட காலால் காலைத்தேய்த்தலையும், (சரியல்லவென்று)

தள்ளுகிற (இரண்டு வியாக்கியாதாக்கள்) வர்கள் (சூத்திரங்களில்) தானாய்த் தோன்றுகிற அருத்தத்தைத் தள்ளிவிட்டு, காலினாலே பஸ்மத்தின் மேலிருப்பதுண்டானால் (காலினாற் பஸ்மத்தை மிதித்தால்) பாதப் பிரக்ஷாளநம் என்று வாக்கியார்த்தத்தைக் கிரகித்துக்கொண்டு, காலை பஸ்மத்தின் மேல் வைத்தால் பாதத்தை அலம்ப வேண்டுமென்று (அவர்கள்) சொல்லுவதால் (பஸ்மம் அமேத்யம்) என்று நீர் சொல்லுகின்றீர்.

அப்படிச் சொல்வது உஜ்வலர் முதலானவர்களுடைய வியாக்கியானங்களை பாராததினால் என்று வித்வான்களுக்குத் தெளிவாய்த் தெரியலாம்.

நஹஸூகெளஶ-த-ஷ-என்ற சூத்திரத்தில் பண்புத்தொகையை ஒத்துக்கொள்ளாமல் உம்மைத் தொகையை ஒத்துக்கொள்ளும் பக்ஷத்தில் அமேத்யம். என்ற சொல்லினால் எது கிரகிக்கப் படுகிறது என்று சொல்லாதீர்

“ நவாய்வக்நிவிப்ராதித்யாபோதேவதாகாஸ்ச
ப்ரதிபஸ்யந்நா மூத்ரபுரீஷாமேத்யா
ந்யுதஸ்யேத்”

“வாயு அக்கினி பிராமணன் சூரியன் ஜலம் தேவதை பசு இவைகளுக்கு எதிராக மூத்திரம் மலம் அமேத்தியம் (அசுத்தம்) இவைகளைத் தள்ளாதே.” ‡

என்ற கௌதமதர்மம் கூ-வது அத்தியாயத்திலேயே மூத்திரம் மலங்களுக்கு வேருய் சிலேட்டுமம்§ முதலியவைகளுக்கு அமேத்யம் என்றபதம் காணப் படுவதால் இவ்விடத்திலும் அந்த அருத்தமே கொள் ளக் கிடந்தமை காண்க.

(உம்மாற்) செய்யப்பட்ட பஸ்மம் அமேத்யம் உடையது என்ற அநுமான மானபூர்வ பக்ஷமானது, சாஸ்திரத்தில் தரிக்கும்படி விதிக்கப்பட் டிருப்ப தாலும் சுத்தத்துக்குக் காரணமாயிருக்குந்தன்மை விதிக்கப்பட் டிருப்பதாலும் பஸ்மமானது சுத்த மாயுள்ளது என்றதனுற்ருனே சங்கிக்கப்படுகிறது, இதை (பூர்வபக்ஷத்தை) மாற்றப் பிர்மதேவராலும் முடியாது. ✳

---

‡ கழிக்காதே. § கபம்.

✳ கருத்து. சாஸ்திரங்கள் பஸ்மம் சுத்திக்குச்காரணமானது தரிக்கத்தக்கது என்று விதித்திருப்பதால் பஸ்மம் அமேத்யத்வம் உடையது என்ற உமது பூர்வபக்ஷம் மாற்றக்கூடாத குற்றத்தோடு கூடியது = உமதுவாதம் வழுவிற்ருய்க் கண்டிக்கப் பட்டது.

அதிலேயே அநுகூலங்களான அநேகதர்க் கங்களிருப்பதால். அஃதெங்ஙன மெனில்:பஸ்மம் மேத்யமா யிராவிட்டால் அதனுடையதாரணமானது வேதத்தால் விதிக்கப்படமாட்டாது. =பஸ்மமானது சுத்தமல்லாவிட்டால் சுத்திக்குக் காரணமாக வேதத்தால் விதிக்கப்படமாட்டாது. பிரத்தியக்ஷமான அநேக சுருதிகளால் விதிக்கப்பட்டிருக்கிறது. எங்ஙனமெனில்.

"ஹூ[illegible] நவ[illegible] தவ்யம்"

"பூதியினின்று தவிராதே"

என்ற தைத்திரீய சுருதியானது பகவானுனபோதாயன மகரிஷியினுலே உபப்பிருமணஞ் செய்யப்பட்டும், ஸ்மிருதி முக்தாபலம் என்ற ஸ்மிருதியைச்செய்தவரால் வாமந புராணவசந உபப்பிருமண மூலமாய் உதகரிக்கப்பட்டு மிருக்கின்றது.

இவ்விதம் (வாமனபுராணம்.)

"[illegible]

[illegible]

[illegible]"

"பஸ்மத்தினுல் திரிபுண்டரத்தைத் தரிக்கும் வித்வான்களான பிரமசாரீ கிருகத்தன் வானப்பிரத்தன் சந்நியாசி இவர்கள் சகலமான மகாபாதக உபபாதகங்களிலிருந்து பரிசுத்தர்களாக ஆகிறுர்கள்"

காலாக்கிநி ருத்திரோப நிஷத்தில் பஸ்மமானது தரிக்கத்தகுந் தன்மையுடையது சுத்தத்துக் கேதுவாயிருப்

பது என்ற விதிகள் காணப்படுகின்றன. இவ்விதம் அதர்வசிரசுருதிவாக்கியமும் உதகரிக்கத் தக்கது. ஜாபாலோநிஷத்தும் இரண்டு பிராமணத்தால் (அதிகாரம்) பஸ்மத்துக்கு அப்படி யிருக்குந்தன்மை (தரிக்கத் தகுந்தன்மையும் சுத்தஹேதுத்தன்மையும்) சொல்லுகின்றது. இவ்விதம் பஸ்மம் சுத்தமா யிராவிட்டால் பகவத் பாதாசாரியார் முதலிய மஹா புருஷர்களால் தரிக்கப்படமாட்டாது. கும்பகோணமடத்துக் கதிபதிகளும் சந்திரமௌளீசுரரின் சரணதாமரைக்கு வண்டுபோன்ற மனத்தாமரையுடையவர்களும், வெகுகாலமுதல் இதுவரை பரம்பரையாக அடையப்பட்ட பஸ்ம ருத்திராக்ஷதாரணத்தால் அழகான அவயவங்களை யுடையவர்களும் ஆனபரமஹம்ச சந்நியாச ஆசிரமத்தையுடைய ஆசாரியர்களாலும் தரிக்கப்படுகிறது. மூலபுருஷர்களுக்கும் அந்தத்தாரணமானது வழக்கம்விடாமல் இருந்ததென்பது ஊகிக்கத்தக்கதாயிருக்கிறது. அவர்களால் (மூலபுருஷர்களால்) சாம்பபுஜங்கத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.

“ஸுதோஷைஸ்ஸ ருத்ராக்ஷபூஷாவிசேஷை

ரஸங்கைர் விபூத்யங்க பாஸ்வத் ததங்கை:”

“குற்றமில்லாத அழகான ருத்திராக்ஷ ஆபரண விசேடத்தையுடைய வர்களும், பற்றற்றவர்களும், விபூதிப்பூச்சினுற் பிரகாசிக்கின்ற அங்கத்தை யுடையவர்களும்”

என்று மகாயோகிகளின் கூட்டத்துக்கு விசேடணங் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ்விதமே ரிஷிய

சிருங்க (பருவத) த்துக்கு வேறான பெயராயுடைய சிங்கேரி என்ற மடத்திலிருக்கும் மகாயோகிகளாயும் மகாவித்துவான்களாயும் இருக்கிற ஆசாரியர்கள் பஸ்மம் உருத்திராக்ஷங்களைத் தரிப்பதால், மூலபுருஷர்களான ஆசாரியர்களுக்கும் விபூதி ருத்திராக்ஷ தாரணத்தை அநுமானத்திற் சிறந்தவர்கள் அநுமானிக்கின்றார்கள். அதிகமென்னத்துக்கு, நம்முடைய பிர்ம வித்யாகுருக்களுக்கும் அவர்களுடையஆசார்யர்களுக்கும் அந்தத் தாரணமானது இருக்க நாம் நேரிற்பார்த்திருக்கிறோம். அவர்களுடைய சம்பிரதாய பரம்பரையில் சகலர்களுக்குமே அந்தத் தாரணமானது நம்முடைய பிரம்மவித்தியா குருவினாலேயே கேட்டிருக்கிறோம். அப்படியே மாதவாசாரியரும் சூதசம்கிதையின் தீபிகையென்ற வியாக்கியானத்தில் பஸ்மருத்திராக்ஷ தாரணமானது தமக்குஞ் சம்மதமென்று காண்பி வித்திருக்கிறார். இப்படியே நம்முடைய குலகூடஸ்த ஆசாரிய தீக்ஷிதர்களான ஸ்ரீரங்கராஜ தீக்ஷிதர் ஸ்ரீமத் அப்பதீக்ஷிதர் முதலியவித்வான்களான முந்திய பெரியோர்களால் பஸ்மருத்திராக்ஷதாரணம் அநுட்டானஞ் செய்யப்பட்டிருக்கிறது. அந்த வம்சத்தில் உண்டானவர்கள் அநுசரித்துவருவது இந்தவுலகத்தில் சிறந்ததே; (பிரசித்தமானதுதான்) குல தருமம் அவசியம் அநுட்டானஞ் செய்யத்தகுந்ததாயிருப்பதால்.

உம்முடைய வம்சத்திலுண்டான முன்னோர்கள் யாகம்ஹோமம் இதுமுதலிய அநுட்டான பரர்கள், சிறந்த வித்வான்கள்

என்பது எப்படியறியலாம் என்று சந்தேகப்படவேண்டிய தில்லை. அத்வைத சித்தி அத்வைத வியாக்கியாநசந்திரிகை இவைகளைச்செய்த அவர்களுடைய கவிகளினாலேயே அவர்கள் மஹா பண்டிதர்களாகவும், மஹா புத்திமான்களாகவும் மஹாநுபாவர்களாகவும் இருந்தார்கள் என்று அறியப்பட்ட தென்று அறிவீர்.

மதுசூதநாநந்த சரசுபதியென்ற ஆசாரியர் களால் செய்யப்பட்ட சித்தாந்த பிந்து என்னுங் கிரந்தத்தின் மங்களசுலோகத்தில்,

"வேதாந்தஶாஸ்த்ரஶ்ரவணாலஸாநாம்"

என்னு மிடத்தில் வேதாந்தசாஸ்திரம் என்ற சப்தத்தின் பொருளானது ரத்நாவளியில் † வியாக்கியானஞ் செய்யப்பட்டிருக்கிறது. † சாரீரகமீமாம்சம் ஆன சதுரத்யாயீ அதன் பாடியம் அதன் சம்பந்த டீகாவாசஸ்பத்யம் அதைச் சேர்ந்த டீகா கல்பதரு அதன் சம்மந்தமான டீகாபரிமளம் என்ற ஐந்து கிரந்தங்களில் என்று அருத்தம். அப்படியே சூத்திர பாஷியம் பாமதி கல்பதரு இவைகளின் அருத்தமானது அவர்களாற் செய்யப்பட்ட பரிமளம் என்ற கிரந்தத்தில் சந்தேகமில்லாமல் நன்றால் அறியப்படுகிறது. அவர்களின் வித்வத் தன்மையானது சித்திசந்திரிகை (சித்தி=அத்வைத்சித்தி) சந்திரிகை=அதின் வியாக்கியானம்) பிரமாநந்தீயம் இவைகளைச் செய்தவர்களான இரண்டு ஆசாரியர்களால் ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஸ்ரீமத் சுயம் பிரகாச சரஸ்வதிகளால் ஸ்ரீமத் அகவத்த நாராயண சாஸ்திரிகளின் சமீபத்தில் அவர்கள் பாமதிஎன்ற கிரந்தத்தைப்படிக்கும் பொழுது.

"ஸாயம்ஹோமவிரஹிதா
ஸத்ரம்ஹோமவிநாஶிநி"

"சாயங்காலத்தில் ஜலம் சேராத விபூதி பாவத்தை நாசம் பண்ணத் தகுந்தது"

என்ற ஸ்மிருதியை அநுசரித்து சாயங் காலத்தில் உத்தூளநஞ் செய்யத்தகுந்ததா? காலாக்கிநிருத்திரோப நிஷத்தை அநுசரித்து திரிபுண்டரம் தரிக்கத்தகுந்த தாஎன்று சிலர்களுக்குச்சந்தேகமுண்டானபொழுது, உத்தூளநந்தான் சிஷ்டாசாரத்தால் தீர்மானமாயிருக் கிறது என்று ஆசாரியர்கள் பதிற் சொன்னார்கள். சுருதிக்கும் ஸ்மிருதிக்கும் விரோத முண்டானால் சுருதிதான் பலமுடையது என்ற நியாயத்தினால் சந்தேக முண் டாயிருக்கும் பொழுது அது (திரிபுண்டரம்) அ சாஸ்திரீய மென்று நான் சொல்லமாட்டேனென்று சாஸ்திரிகள் சொன்னார்கள் என்று (ஆசாரியர்கள்) (ஸ்ரீமத் சுயம்பிரகாசசரஸ்வதிசுவாமிகள்) என்னிடஞ் சொன்னார்கள்.

மானவசம்ஹிதையில்.

"[illegible]
[illegible]
[illegible]"

"காலை மத்தியாநம் சாயங்காலம் இவைகளில் வெளுப்பான பஸ்மத்தால் திரிபுண்டரம் தரிப்பவன் ருத்திரன் இதில் சம்சய மில்லை"

என்ற உபநிஷத்தைக் காரணமாக வுண்டாயு வசந மிருப்பதால் சாயங்காலத்திலும் திரிபுண்டரதாரணம் ஆசரிக்கிறார்கள் என்று அறிய வேண்டியது. ஆன

தால் சொல்லப்பட்ட பூர்வபக்ஷ ரூபமான பெரிதான அநுமாநத்தால் பஸ்மம் மேத்தியமில்லையென்ற அநுமானமானது பாதிக்கப்பட்டதே. மனிதர் மண்டையோடு சுத்தம் என்ற அநுமானமானது ஸ்மிருதி ரூபமாயிருக்கிற ஆதாரத்தாற் பாதிக்கப்பட்டது என்றிருக்கும்பொழுது*உபநிஷத்தாற்பாதிக்கப்பட்ட அநுமானமானது எப்படி நிலைபெறும்.*

ஆனதால் பஸ்மத்தின் மேத்யத்வ அநுமானமே அநேக சுருதிகளைச் சகாயமா யுடையதால் உம்மாற் சொல்லப்பட்ட அநுமானத்துக்கு ஆதாரமில்லை யென்பதைக் கிரகிக்கும்படி செய்வித்துக்கொண்டு மேன்மையாய்ப் பிரகாசிக்கிறது என்று சித்தித்தது.

சொல்லப்பட்ட பூர்வபக்ஷரூபமான அநுமானமுண்டானல்—(பஸ்மம்மேத்யம் என்று அநுமிக்கில்) பிர்மஹத்தியின் பிராயச்சித்தத்துக்கு அங்கமான கபாலதாரணத்தை விதித்தபலத்தினல் பிர்மஹத்தி செய்தவனல் தரிக்கத்தகுந்த அசுத்தமான அப்பேர்ப்பட்ட கபாலத்தில், தரிக்கத்தகுந்ததாக விதிக்கப்படுந் தன்மையும், சுத்திக்குக்காரணமாக விதிக்கப்படுந் தன்மையும், இருப்பதால் மேத்யத்வத்தின் ‡அதிவியாப்தியும், இப்படியே சுராபானத்தா லுண்டாகும் அசுத்தியை நிவிர்த்திசெய்வதால் சுத்திக்குக்காரணமாக விதிக்கப்பட்ட காய்ச்சியகட்குடிப்பதில் (தப்தசுராபானத்தில்) மேத்யத்வத்தின் அதிவியாப்தியும்,

---

* கருத்து. பஸ்மத்தில் அமேத்யத்வ ரூபமான அநுமானம் சாராது. ‡ அதிவியாப்தி=வியபிசாரம்.

உண்டாகிறது. (என்கிறீர் அப்படிச் சொல்வீரானல்) அதுவிசாரத்துக்கு யோக்கியமில்லை.

"ப்ராயஸ்சித்தகௌவலநிரிஷ்வகுஹ்ஹவஃ"

"பிர்மஹத்தி செய்தவனுக்கு அக்கினியிற்சுடுதல் பிராயச் சித்தம்."

என்று பிரமஹத்தி செய்தவனைப்பற்றிச் சொல்லி யல்லவாதரிக்கத் தகுந்ததாகவும் சுத்திக்குக்காரண மாகவும் கபாலம் விதிக்கப்பட்டிருக்கிறது.

"த்ரிவர்ண ஃஹஸுநாகரொதியொவிஹாநு"

இது முதலியவிடங்களில் நான்கு ஆசிரமங்களுக்கும் பொது வாகக்குறித்துப் பஸ்மமானது தரிக்கத்தகுந்ததாகவும் சுத்திக் குக் காரணமாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது. எவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்குத் தரிக்கத்தகுந்தன் மை சுத்திக்குக்காரணமாயிருக்குந்தன்மை இல்லாவிடில் (சொ ல்லப்படாத பக்ஷத்தில்) இந்தவசனம் பிரயோசனமில்லாததா கும். ஆனதால் அந்த வாக்கியம் பிரயோசனப்படும்பொரு ட்டு வைதீகர் பஸ்மத்துக்கு மேத்யத்வத்தை அவசியம் அங்கி காரஞ் செய்யவேண்டும். ஆனல் முதலில்

"வட்வாஂமகவாஉவாணிவ்ரா ஊாஃஶவஂவ ஹாநு"

"மழுகபாலம் இவைகளைக் கையில் வைத்துக்கொண்டு (கஉ) வருஷங்களை"

என்ற இதுமுதலியவைகளால் பிர்மசரியம், பிக்ஷை க்காகக் கிராமப் பிரவேசம், அந்தக்காலத்தி லுண்டா ன தன்னுடைய காரியத்தை வெளியிடல், மூன்று வருணத்திலு மிருக்கிற பெரியோர்களைப் பார்த்தால்

(சண்டாளன்போல) மார்க்கத்தைவிட்டு ஒதுங்கி விடுதல் *ஸ்தாநம் †ஆசநங்களினின்றுநீங்கல் மூன்றுகால ஸ்நாநம் என்ற இவைகளெல்லாம் சேர்ந்து பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக அவைகள் எல்லாஞ் சேர்ந்தே சுத்திக்குக் காரணம் அந்தக் கபாலதாரணமாத்திரத்துக்கே சுத்திக்குக்காரணமாகுந்தன்மை இல்லை. இதனால் அந்தக் கபாலதாரணத்துக்குச் சுத்திக்குக் காரணமாகுந் தன்மை இருக்கிறதென்று மயக்கத்தால் அதில் மேத்யத்துவ அதிவியாப்தியானது சொல்லப்பட்டதென்பது ஸ்பஷ்டமாகிறது. (=வெளியாகிறது).

இவ்விதமே இரண்டாவதில் சுராபானஞ் செய்த பிராம்மணனுக்கு,

"உஷ்ணாஂரோவஸிம்வெய-ஹூ-ஸாரோஸெஹ்ரூதஸ்லு-ஸெஹ்சு"

"வாயில் உஷ்ணமான கள்ளைவிடுவார்கள் மரணமடைந்து சுத்தியை யடைவான்"

என்று சுராபானத்தின லுண்டான அசுசியை நிவிருத்தி செய்வதற்கும் சுத்திக்குக் காரண மாகவும் விதிக்கப்பட்ட தப்த சுராபானத்தில் (காச்சினகள்ளைக் குடிப்பதில்) மேத்யத்வத்தின் அதிவியாப்தியைச் சொல்கிறதும் சம்பவிக்கக் கூடாத வார்த்தைதான். அதில் தப்த சுராபான மானது பிராயச்சித்தமாக விதிக்கப்படவில்லை, பின்னையோ? மரணத்தைக்

---

* ஸ்தாநத்தினீங்கல்=பகன்முழுதுநிற்றல்.

† ஆசநத்தினீங்கல்=இரவெல்லா முட்கார்ந்திருத்தல்.

கடாசியாக வைத்துக்கொண்டிருக்கிற பிராயச்சித்த மா யிருப்பதால் சுராபானம் செய்தவனுடைய விரிக் கப்பட்டவாயில் அவனுடைய பாவநிவிருத்தி ரூபமா ன சுத்தியை விரும்புகிற இஷ்டர்கள் எப்படி அவன் சாவானென அப்படிக் காச்சினகள்ளை விடுவார்கள். என்று அவனுடைய இஷ்டர்களுடைய தொழில்தான் அவிடத்திற் சொல்லப்பட்டது. அவிடத்தில் தப்த சுராபான மானது சொல்லப்படவில்லை. *

"கர்துரீப்ஸிததமங்கர்ம"

"கர்த்தாவுக்கு முக்கியப் பிரியமுள்ளது செயப்படு பொரு ளாகும்"

என்று விதிக்கப்பட்ட செயப்படுபொருளா யிருக் குந்தன்மை காச்சிய கள்ளில் உண்டாகாது அதனாற் றான் மரணமடைந்து சுத்தியடைகிறானென்று சொல் லப்பட்டிருக்கிறது, மரணத்துக்குத்தான் சுத்திக்குக் காரணமாகுந் தன்மை என்று ஸ்மிருதியிற் கூறப்பட் டிருப்பதால். மரணத்துக்குக் காரணமாகிய தொழி லும் இஷ்டர்களால் செய்யப்பட்ட காச்சிய கள்ளின் வார்த்தலும் மரணஹேதுவா யிருப்பதால் குயவன் தகப்பன் போல் வேறுவழியாய்ச் சித்தித்திருப்பதால் வேறுவிதமாய்ச் சித்தியாத நிச்சயமான முன்னிருக் குந்தன்மையையுடைய காரணத்தன்மையானது காச் சியகள்ளை வார்த்தாலும் உண்டாகாது. §

---

* தானே குடிக்கும்படியான காய்ச்சினகள் பிராயச்சித்த மாகச் சொல்லப்படவில்லை.

§ கருத்து. (தானே சித்தித்து எப்போது மிருக்கிற சுத்தி ஹேதுத்வம் பஸ்மத்திலிருப்பது போல காச்சின கள்ளைவார்த் தாலும் அவ்வார்த்தலில் உண்டாகாது).

உம்மாற் சொல்லப்பட்ட காச்சியகள்ளை (தானே)க் குடித்தல் எப்படியாவது (வருத்தத்தின்பேரில்) உண்டானபோதிலும் அதில் சுத்திக்குக் காரணமாயிருக்குந் தன்மை (சுத்திஹேதுத்வம்)உண்டாகமாட்டாது. (தப்தசுரா பானத்தாலுண்டாகு மரணந்தான் சுத்திக்குக் காரணமாயிருப்பதால்) தப்த சுராபானத்துக்கு மேத்யத்வம் நியாயசாஸ்திரந்தெரிந்தவர்கள் சொல்லமாட்டார்கள்,

காரணத்தன்மை (ஹேதுத்வம்) என்பது நிச்சயமாய் முன்னிருக்குந்தன்மை (நியதபூர்வ விருத்தித்வம்) மாத்திரம் என்று எண்ணி அந்தவசனம்(உஷாணா.........சு) (நியதபூர்வவிருத்தித்வ மிருப்பதால் தப்த சுராபாநத்திலும் சுத்தஹேதுத்வம் இருக்கிறது) என்று சொல்லாதீர். * தானே சித்தித்தல் என்னும் விசேடணத்துக்கு (பாவ) காரணத் தன்மையையுடைய சரீரத்தில் வேறொருவரால் விடப்படுவதால் என்னசெய்வோம் என்று நீரேன் ஆலோசிக்கவில்லை.

ஆனதால் இவ்வித அநுசிதமான அநுமானத்தில் பிரவிருத்தித்த உமக்கு அசந்தர்ப்ப வசனப்பிரவர்த்

---

* கருத்து. வேறுவழியாய்ச் சித்தித்ததாகும் தானே சித்தித்தல் இல்லாமற்போம் அப்பொழுது வேறொருவனால் வார்க்கப்பட்ட தப்தசுராபானத்தில் நியதபூர்வவிருத்தித்வம் இருப்பதாய் நீர்கூறினும் தானே சித்திக்குந்தன்மை யில்லாமற்போவதால் சுத்தஹேதுத்வம் சித்தியாமற்போகின்றதல்லவா அதற்கு நாம் என்னசெய்வோம் என்று நீர் ஏன் ஆலோசிக்கவில்லை

தனத்தினுல் பகவானுல் சிக்ஷையே செய்யப்பட்டதென்றெண்ணு கின்ரேம்.

மரணம் சுத்திக்குக் காரணமாயிருப்பதால் சம்பூரணமான பிரவாகத்தையுடைய நதி முதலியவைகளில் விழுவதாலும் அது சம்பவிப்பதால் "ஸுராபஸ்ய" "சுராபானஞ்செய்தவனுக்கு" இதை முதலாக வுடைய சூத்திரம் பிரயோசன மில்லாததாக ஆம் என்று சொல்லாதீர். (ஏன்எனில்) அந்தந்தப் புருடர்களாற் செய்யப்பட்ட பாவங்களுக்காகப் பூர்வகாலத்தில் இச்சிக்கப்பட்ட விஷயவஸ்துக்களையே அவ்வவர் பாவத்துக்கேற்றபடி மரணத்துக்குக் காரணமாகச் சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தால் அந்த நியமவிதி விதிக்கப்பட்டது.

அப்படி யிருப்பதினுல்தான் சுராபானஞ் செய்தவனுக்குப்போலக் குருபத்நிகமனஞ் செய்தவனுக்கும் மரணத்தை அந்தமாக வுடைய பிராயச்சித்த மானது அபேதமாய் விதிக்கப்பட்டிருந்த போதிலும் "ஸுர்மீம் ஜ்வலந்தீம் ஸ்லிஷ்யேத்" "எரிந்துக் கொண்டிருக்கும் இருப்புப் பிரதிமையைக் கட்டிக்கொள்ள வேண்டும்" என்று அக்கினி நிறமான இருப்பு ஸ்திரீப்பிரதிமையின் ஆலிங்கனம் ஆனது மரணத்துக்குக் காரணமாக நியமனஞ் செய்யப்பட்டது. ஆகையால் மகாபாதக விஷயத்தில் மரணத்துக்குத்தான் சுத்திஹேதுத்வம்என்ற இந்த விஷயத்தில் கொஞ்சமும் விவாதமில்லை. என்ற இதனுல் முன்னுற் சொல்லப்பட்ட இரண்டுவிதமான அதிவியாப்திகளும் பிசகேதான்.

இன்னும் பஸ்மம் ஆனது பரிசுத்தம் அது ஆகாரஞ் செய்யத்தகாததில் தான் சம்பந்தப்படுவதால் (தன்னைப்போடுவதால்) ஆகாரஞ் செய்யத்தகுந்ததாய் ஆக்குகின்றது. மிருத்தைப்போல: அதாவது வாமனபுராணம் கச-வது அத்தியாயத்தில் மயிர்புழுமுதலியவைகளால் தோடத்தையடைந்த அன்னம்சுத்தியாவதற்கு விபூதியைப்போடுதல் சொல்லப்பட் டிருக்கிறது.

அஃதெப்படியெனில்.

"கெஶகீடாவபநெ நெ ஜொவ்ராபதைகூதி காங்கெத| ரூஜஂபை ஹஸ்ஷாராணி வ்ர கெூஷவ்யாநி ஶங்ஜய"

"மயிர், புழு, இவைகளை அடைந்த அன்னத்திலும் பசுவினால் முகரப்பட்டும் ஈயோடுகூடியும் இருக்கிற அன்னத்திலும் மண் ஜலம் விபூதி உப்பு இவைகளைச் சுத்திக்காகப் போடவேண்டும்"

மிதாக்ஷரையென்றஸ்மிருதியில்

"நிதூஷைமொஜ்யஂகெஶகீடாவபநஂ"

"மயிர், புழு அடைந்த அன்னம் ஒருபோதுஞ் சாப்பிடத் தகுந்ததல்ல."

என்ற சூத்திரத்துக்கு வியாக்கியாநம் செய்யும் அவசரத்தில் இந்தவிஷயத்தில் வசிஷ்டர்

"கெஶகீடாநுஸ்ருஜ்யாஹூ:
வெூாக்ஷுஹூநாவாவகீய
வாவாவ்ரஶஸ்ஷீவயஂஜீத"

“மயிர் புழு இவைகளைத்தள்ளி ஜலத்தாற் புரோக்ஷித்து பஸ்மத்தைக்கலந்து வாக்கிலுல் சுத்தமாய்விட்டது என்று சொல்லவேண்டும்.”

என்று வசிஷ்டராற் கூறப்பட்ட பஸ்மத்தைப் போடுதல் சொல்லப்பட்ட அன்னத்தின் சுத்திக்குக் காரணமாக அநுவாதமுஞ் செய்யப்பட் டிருக்கிறது.

ஆனல் நஹ்ருஸ்ஸேகூ இதுமுதலிய ஆதாரங்களால் பஸ்மத்திலிருக்கும் மேத்யத்வாநுமான மானது பாதிக்கப் பட்டதென்று நீர் சொன்னது, நஹ்ரூ என்ற சூத்திர மானது வேறுவிதமான அருத்தத்தைக் கிரகிப்பதற் குக்காரணமா யிருப்பதால் கர்ப்பசிராவம் ஆகத்தள் ளப்பட்டது. (அடியோடுபோய்விட்டது) பஸ்மத்தின் மேத்யத்வத்தைச் சொல்லும்வாக்கியம் சுருதிஸ்மிரு திகளில் இல்லையென்று எதுசொல்லப் பட்டதோ அது வும் சுருதிஸ்மிருதி உதாரணங்களாலே தள்ளப்பட் டது.

ஆறு மதத்தையு மறிந் திருப்பதாகத் தன்னைப்புகழ் தல் வெட்கமில்லாத சுபாவத்தை யுடைத்தா யிருப்ப தால் உண்டானதுதான்: வாஸ்தவத்தில் இல்லை யென் று சகலரு மறிகிறுர்கள். நம்முடைய தீக்ஷிதர்களாற் செய்யப்பட்ட நயமயூகமாலிகை முதலிய கிரந்தம் போல் அந்தந்தக் கிரந்தமானது உமக்கு எவனலா வது கிடைத்ததாக இல்லையல்லவா? பலங் இல்லாத வரை இம்சித்தது போதும். (எ)

ஆனதால்.

மூலம்.

“வேதா: ப்ரமாணம் ஸ்ம்ருதய: ப்ரமாணம்
தர்மார்த்தயுக்தம் வசனம் ப்ரமாணம்
யஸ்ய ப்ரமாணம் ந பவேத் ப்ரமாணம்
கஸ்தஸ்ய குர்யாத் வசனம் ப்ரமாணம்” (அ)

“வேதங்கள் பிரமாணம் ஸ்மிருதிகள் பிரமாணம் தர்மார்த்தங்களோடு கூடியவாக்கியங்கள்பிரமாணம் எதற்குப் பிரமாணமானது இல்லையோ அது பிரமாணமாகாது அதன் வசனத்தை எவன் பிரமாணமாகச் செய்கின்றான்”

“தர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதாஶ்ச”

தர்மந் தெரிந்தவர்களுடைய சித்தாந்தமும் வேதங்களும்பிரமாணம்”

“வேதோ தர்மமூலம் தத்விதாம் ச ஸ்ம்ருதிஶீலே”

“வேதோऽகிலோ தர்மமூலம்
ஸ்ம்ருதிஶீலே ச தத்விதாம்
ஆசாரஶ்சைவ ஸாதூனாம்
ஆத்மனஸ்துஷ்டிரேவ ச”

“சகலவேதமும் தர்மத்துக்குக் காரணம் அதை அறிந்தவர்களாற் செய்யப்பட்ட ஸ்மிருதிகளிற் சொல்லப்பட்ட நன்னடத்தையில் ஆசாரமும், சாதுக்களுடைய ஆத்மாவின் சந்தோஷமும்” *

---

* கருத்து. (தர்மத்துக்குக் காரணம் வேதங்கள் அதையறிந்தவர்களாற் செய்யப்பட்ட ஸ்மிருதியிற் சொல்லப் பட்டதும் சாதுக்களால் அங்கீகாரஞ் செய்யப்பட்டதும் ஆன நன்னடையே ஆசாரம்.)

இது முதலிய ஹாரீதர் ஆபஸ்தம்பர் கௌதமர் மஹாநுபாவரான மநுமுதலியவர்களுடைய வசனங்களுக்கு விரோதமாகப் பிரமாணத்தை அப்பிரமாணமாகச்செய்வது ஆஸ்திகனுக்கு அநுகூலத்தைத்தராது என்று உமக்கு இஷ்டபாவத்தினாலே ஏதோகொஞ்சமெழுதினேன்.

மூலம்.

பூருவத்தில் நீலகண்டர் என்பவர் எனக்குப் பிரதிவாதியாகவிருக்குங்காலத்தில் நியாயத்தின் உண்மையை யறிந்தவர்களான உம்முடைய ஆசாரியர்போன்ற சாக்ஷிகள் இருந்தார்கள், இப்பொழுது உமக்கும் எமக்கும் விவாத முண்டான விஷயத்தில் அத்தகையர் இருப்பார்களானால் சாக்ஷிகளாக ஆவார்கள். (௯)

மூலம்.

அநேக சாஸ்திரங்களில் சமர்த்தர்களாகவும் நன்று யிருக்கிற யுக்தியினாலே பூரணமாயிருக்கிற வாக்குப் பிரசங்கங்களை யுடையவர்களும் ஆன வித்வான்களால்வியர்பிக்கப்பட்ட இராஜசபையில் எங்கேனும் ஓரிடத்தில் இருந்து உம்மால் பேசுவதற்கு வல்லமையிருந்தால் என்னத்தால் காணப்படாமல் இருக்கின்றீர்? விருப்ப மில்லாததால் என்றால் பூமியில் தனவான்களுக்குங் கூட எஜசுவிரும் பத்தகுந்ததுதான். (௧0)

மூலம்.

சில சிறுவர்கள் பிழைப்புக்காகச் சமையல் செய்கிறார்கள். பணத்தை விரும்பிச் சிலர் ஊழியவேலை செய்கிறார்கள். அவர்கள், நெற்றியில் திரிபுண்டரத்தை யுடையவர்களும் பிரியமுள்ளவர்களுமான அவர்களுடைய பிதாமுதலியவர்களால் தடுக்கப் பட்டும்

ஊர்த்தவ புண்டரத்தில் மேன்மையான மகத்துவம் இருக்கிறது என்று நன்ருய் உம்மால் போதிக்கப்பட்டுச் சுவாதீனஞ்செய்யப்பட்டார்கள். தஞ்சாவூரில் திரிபுண்டரத்தை விட்டது அநியாயம். உமது வார்த்தைகளால் திரிபுண்டர ஹீனர்களாகச் செய்விக்கப்பட்டார்கள். (கக)

ஆனல், பாரதம்

" 𑌨 𑌪𑌾𑌪𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌪𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌧𑍁𑌰𑍇𑌵
𑌸𑌦𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍। 𑌆𑌤𑍍𑌮𑌨𑍈𑌵 𑌹𑌤𑌃 𑌪𑌾𑌪𑍋 𑌯𑌃 𑌪𑌾𑌪𑌂
𑌕𑌰𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿"

ஒருவன் பாவிக்காகத்தான் பாவியாகான் எப்பொழுதும் சாதுவாகத்தா னிருப்பான் பாவஞ்செய்ய விரும்புகிறவன் தன்னுலே யடிபடுவான்".

என்று பாரதத்திற் சொல்லியபடி இந்த விஷயத்தில் நாம் உபேக்ஷையாயிருக்க வேண்டியதுதான். இவ்வளவு காலம்வரையிலும் உபேக்ஷையாகத் தானிருந்தோம்.

" 𑌨 𑌸𑌾 𑌸𑌭𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌃
𑌨 𑌤𑍇 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌯𑍇 𑌨 𑌵𑌦𑌨𑍍𑌤𑌿 𑌧𑌰𑍍𑌮𑌮𑍍।
𑌨𑌾𑌸𑍌 𑌧𑌰𑍍𑌮𑍋 𑌯𑌤𑍍𑌰 𑌨 𑌸𑌤𑍍𑌯𑌮𑌸𑍍𑌤𑌿
𑌨 𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌯𑌚𑍍𑌛𑌲𑍇𑌨𑌾𑌨𑍁𑌵𑌿𑌦𑍍𑌧𑌮𑍍"

"எந்தச் சபையில் பெரியோர்க ளில்லையோ அது சபையல்ல தருமத்தைச் சொல்லாதவர்கள் பெரியோர்கள் அல்ல

எவ்விடத்தில் சத்திய மில்லையோ அது தருமமல்ல எந்தச் சத்தியம் கபடத்தோடு சேர்ந்ததோ அது சத்தியமல்ல."

என்று சபாபருவத்திற் சொல்லிய வழியாய் உபேக்ஷையா யிருப்பது சரியல்லவென்று அவைகளைப் போதிப்பதற்காக நான் பிரவிருத்தித்தேன். சர்வம் சிவம் (மங்களம்.)

மூலம்.

பார்வதியால் அலங்கரிக்கப்பட்ட திவ்விய மங்கள சரீரத்தை யுடைய மங்களமான தேவனுக்கு நமஸ்காரம். (கஉ)

மூலம்.

விகசித்த நீலோற்பல புஸ்பத்தின் மத்தியபாகம் போன்ற சோபையை யுடையவரும் பூரணமான அதிக கருணையாகிற ஆபரணத்தை யுடைய மனதை யுடையவரும் இடைச்சியர் (கோபிகைகள்) களுடைய நயனங்களுக்குச் சந்திரன்போலவும் இருக்கிற ராஜகோபால சுவாமி யெனக்கு மங்களத்தைக் கொடுக்க வேண்டும். (கங)

ஸ்ரீ சாம்பசிவன் ரக்ஷிக்கத்தக்கது.

ஓம்.

---

ஓம்.

சிவாய நம:

# விபூதிருத்திராக்ஷதாரண நிரூபணம்.

## ருத்திராக்ஷதாரணோபாரணம்

என்ற

இரண்டாவது அத்தியாயம்.

மூலம் - க.

சிவசரணாரவிந்தத்தை நமஸ்காரஞ்செய்து சிவபக்த ஜனங்களின் உபகாரத்துக்காக ஸ்ரீமத் ருத்திராக்ஷ தாரணோபாரணம் என்ற ஓர் பிரபந்தத்தை (நிபந்தத்தை) ச்செய்கிறேன்.

மூலம் - உ.

உபநிஷத்துக்களாற் சொல்லப்பட்டதும் அநாதியாகப் பெரியவர்களால் அநுஷ்டிக்கப்பட்டதும் அநேக சத்புராணங்களாலே பிரகாசஞ் செய்யப்பட்ட மகிமைகளையுடையதும் ஆன ருத்திராக்ஷமாலையின் தாரணமானது வெகுஜன்மங்களிற் செய்யப்பட்ட புண்ணியங்களையுடைய தர்மவிருத்தி யொன்றிலேயே விருப்ப முடையவர்களால் தான் சுலபமாக அடையத்தகுந்தது.

மூலம் - ங.

பெரிதான ஜாபாலோப நிஷத்தானது ருத்திராக்ஷ மாலையின் தாரணத்தைச் சொல்லுகிறது. சைவமானஸ்காந்தபுராண முக்கியவசனங்கள் அந்தத்தாரணத்தை அவசியம் என்று சொல்லுகின்றன. ஸ்ரீமத் சங்கராசாரியர் முதலியவர்கள் தங்களாற் செய்யப்பட்ட ஆசாரவசனங்களால் அந்தத்தாரணத்தை புண்ணியம் சிரத்தை இவைகளால் சுத்தமான மனதுடையவர்களுக்கு இவ்விதம் * போதிக்கிறார்கள்.

---

* இவ்விதம்=பின்னாற் சொல்லப்பட்ட பிரகாரம்.

உரை.

முதலாவது சுலோகத்தால் தன்னால் விரும்பப்பட்ட கிரந்தத்தின் சமாப்திக்கு சத்துருக்களான விக்கினக் கூட்டங்களைச் சமனம்பண்ணுவதற்காக, (விலக்குவதற்காகத்) தமது இஷ்டதேவதையின் நமஸ்கார அடையாளமான மங்களத்தைச் செய்து பிரயோசனத்தை முதலாவது சொல்லிக் கொண்டு, தான் செய்யவேண்டுமென்று விரும்பிய கிரந்தத்தைச் சொல்லுகிறார். கேட்பவர்களுக்கு அதில் (ருத்திராக்ஷ தாரணத்தில்) முயற்சி சித்திப்பதற்காக ருத்திராக்ஷதாரணு பரணம் என்று பெயரிடப்பட்டது. ருத்திராக்ஷதாரணம் விஷயம், அதிகாரி சிவபக்தஜனங்கள், அவர்களுக் குபகாரப்படுவது பிரயோசனம், இது நான்காம் வேற்றுமையாற் கூறியதாற் கிடைத்தது. கிரந்தத்தின் * பிரதிபாத்தியப் பிரதிபாதகம் சம்பந்தம்.

இவ்விதம் விசேஷிக்கப்பட்டவிஷயம், பிரயோசனம், அதிகாரி, சம்பந்தம், இவ்விதமான அநுபந்த சதுஷ்டயம் கிடைத்ததால் பார்ப்பவர்களுக்கு இந்தக் கிரந்தத்தில் முயற்சி தடையின்றியுண்டாம் என்பது கருத்து.

ருத்திராக்ஷதாரணம் செய்யத்தகுந்தது என்பதைப் போதிக்கின்ற ஆதாரத்தை (பிரமாணத்தை) அடையாமையால் ருத்திராக்ஷதாரணம் அநாவசியமோ என்ற சங்கையைச் செய்துக் கொண்டு பிரமாணங்களைக் காண்பிக்கின்றார். †

---

* சொல்லப்படும் விஷயம் = பிரதிபாத்யம். ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும் வாக்கியம்=பிரதிபாதகம்.

† கருத்து. ருத்திராக்ஷதாரணம் செய்யவேண்டும் என்கிற பிரமாண வாக்கியத்தை யறியாமையால் ருத்திராக்ஷ தாரணம் அநுவசியமோ என்று சிலருக்குண்டாகும் சந்தேகத்தைநிவிர்த்திக்கும்பொருட்டு அச்சந்தேகத்தை நிகழ்த்தி ருத்திராக்ஷதாரணத்துக்குரிய பிரமாணங்களைக் காண்பிவிக்கின்றார்.

உபநிஷத்தென்றால் பிரகந்ஜாபாலோபநிஷத் அதில் பகவா
ஞன காலாக்கிநி ருத்திரர் பக்தரான பூசுண்டர் என்பவருக்கு
ருத்திராக்ஷ தாரண மகத்வத்தை உபதேசித்தார்.

அதாவது அந்த உபநிஷத்தில்.

ஆபோவா இதமாஸந் ஸலிலமேவ ஸப்ரஜாபதி
ரேக: புஷ்கரபர்ணே ஸமபவத்॥

“ இந்த ஜகத்து வியாபிக்குந்தன்மையுடைய ஜலரூபமாகவே
இருந்தது பிரசித்தரான பூசுண்டர்என்ற பிரஜாபதி யொருவர்
தாமரை இலையில் உண்டானார்” இதுமுதலிய முதலாவது பிரா
மணத்தில் பகவானான காலாக்கி ருத்திரரை உபாசிக்கிறவரும்
தபசினால் பாவத்தைப் போக்கடித்தவரும் ஏபிதாவே விபூதி
மகத்வத்தைச்சொல்லும் என்று கேட்டவரும் பூசுண்டர் என்ற
வேறு பெயரை யுடையவரும் ஆனபிரஜாபதிக்கு அந்த விபூதி
மகத்வத்தை விஸ்தாரமாகச்சொல்லி, இரண்டாவது பிராமண
த்தில் அவரால் அறியவேண்டுமென்று விருப்பப்பட்ட பஸ்மஸ்
நாந விதியை விதிப்படிவர்ணித்து, ௩ - ௪ - ௫ - ௬, இந்த நான
கு பிராமணங்களில் பஸ்மத்தைச் சேர்ந்ததா யிருக்கிற சகல
த்தையும் விசேடமாக வர்ணித்தார்.

இவ்விதமாக ௬ - பிராமணங்களாலே பஸ்மாவின் மகிமை
யை நிரூபித்தபின்பு எ - அ - ௯. இந்த பிராமணங்களில் ருத்தி
ராக்ஷ மகிமையை வர்ணித்தார் அதில் எ-வது பிராமணத்தில்,

“ அதைநம் பகவந்தம் காலாக்நிருத்ரம் பு
ஸுண்ட: ப்ரப்ரச்ச ருத்ராக்ஷோத்பத்திம், தத்தார
ணாத்கிம்பலமிதி, தம் ஹோவாச பகவாந் காலாக்நிரு
த்ர: த்ரிபுரவதாய நிமீலிதாக்ஷோஹமபவம் தே
ப்யோஜலபிந்தவோ பூமௌ பதிதாஸ்தே, ருத்ரா

[illegible]

"பின்பு, பகவானை காலாக்நி ருத்திரனை ருத்திராக்ஷ உற்பத்தி எப்படி? அதைத் தரிப்பதால் பலம் என்ன? என்று புசுண்டரானவர் கேட்டார்." அதற்கு அவர் கூறியது.

பூர்வத்தில் திரிபுரத்தை சம்ஹரிப்பதற்காக நான் கண்களை மூடினேன், அவைகளிலிருந்து ஜலத்துளிகள் பூமியில் விழுந்தன, சகலருக்கு மநுக்கிரகஞ் செய்வதற்காக அவைகள் ருத்திராக்ஷங்களாகவாயின.

அவைகளின் நாமத்தை உச்சரித்தால் பத்து கோதாநபலம், தரிசித்தால் இருபது, தொட்டால் முப்பது கோதானபலம் சொல்லுகிறார்கள். இதற்குமேல் சொல்ல என்னால் முடியாது. அந்த விஷயத்தைப்பற்றிய சுலோகங்கள்" இது முதலியவைகளால் சுருக்கமாயும், விஸ்தாரமாயும், ருத்திராக்ஷ உற்பத்தி ருத்திராக்ஷதாரண பலவிசேடம் முதலியவைகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன.

அவைவருமாறு. (பிரகத்ஜாபாலோபநிஷத்து.)

க. [illegible]

உ. [illegible]

௩. ததச்ருபிந்தவோ ஜாதா மஹாருத்ராக்ஷ
வ்ருக்ஷகா꞉ । ஸ்தாவரத்வமநுப்ராப்ய பக்தாநுக்ரஹகா
ரணாத்॥ பக்தாநாம் தாரணாத்பாபம் திவாராத்ரிக்ருதம்
ஹரேத்॥

௪. லக்ஷந்து தர்சநாத்புண்யம் கோடிஸ்தத்ஸ்பர்ச
நாத்பவேத் । தத்கோடிசதம் புண்யம் லபதே தா
ரணாந்நர꞉॥

௫. லக்ஷகோடிஸஹஸ்ராணி லக்ஷகோடிசதாநி ச।
தஜ்ஜபால்லபதே புண்யம் நரோ ருத்ராக்ஷ தார
ணாத்॥

௧. "எதிலிருந் துண்டானது? பெயரென்ன? மனிதர்கள் எப்படித் தரிக்கிறார்கள்? இதில் எத்தனை பேதமான முகங்கள்? எந்த மந்திரங்களால் (தரிக்கத்தகுந்தது)? எனக்குச் சொல்க" என்று பூசுண்டர் கேட்குங் காலத்தில்.

௨. "நான் ஆயிரந்திவ்ய வருஷங்கள் கண்களை மூடியிருந்தேன், இரண்டு, அழகான, இமைகளிலிருந்து ஜலத்துளிகள் விழுந்தன.

௩. அந்தக் கண்ணீர்த் துளிகள் பக்தர்களுக்கு அநுக்கிரகம் செய்ய வேண்டுமென்கிற காரணத்தால் ஸ்தாவரமா யிருக்குந் தன்மையை யடைந்து பெரிதான ருத்திராக்ஷ மரங்களாக ஆயின.

பக்தியுடன் (தரித்த ருத்திராக்ஷதாரணமானது) பகல் பாவத்தை ராத்திரியிற் போக்கடிக்கும், ராத்திரியிற் செய்த பாவத்தை பகலிற் போக்கடிக்கும்."

ச. பார்த்தால் லக்ஷம்பங்கு புண்ணியமும், தொட்டால்கோடிபங்கு புண்யமும் தரித்தால் அவ்வளவு நூறுகோடி புண்யமும் மனிதன் அடைகிறான்.

ரு. மனிதன் ருத்திராக்ஷத்தைத் தரித்தால் நூறுலக்ஷகோடிபங்கும் ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்டு ஜபித்தால் ஆயிரம் லக்ஷகோடிபங்கும் புண்யம் அடைகிறான்.

இவ்விதம் ருத்திராக்ஷத்தை, பார்த்தல், தொடுதல், தரித்தல், இவைகளுக்கு மேன்மேலும் அதிகபலத்தைச்சொல்லி ருத்திராக்ஷத்தைத் தரித்துக்கொண்டு மந்திரஜபம் செய்வதற்கு அதைக் காட்டிலும் அதிகமானபலம் வர்ணிக்கப் பட்டிருக்கிறது. அவை.

சு. ருத்³ராக்ஷாணாம் த⁴க்ஷத்ராணாம் யாநி ஹீந ஸர்வாநுக்³ரஹகம் । யாதீத்³ருஶ ப்ரமாணஸ்ய ஶ்ரேஷ்ட²த்வம் உதா³ஹ்ருதம் ॥

எ. ப³த³ரீப²லமாத்ரந்து மத்⁴யமம் ப்ரோச்யதே பு³தை⁴꞉ । சணகமாத்ரம் யஸ்ய ச அத⁴மம் ப்ரோச்யதே ॥

சு. "தாழ்ந்த ருத்திராக்ஷங்களை தரித்தாலும் மகாபலம் நெல்லிக்காய்ப் பிரமாணமுள்ளது சிரேஷ்டமென்று சொல்லப் பட்டிருக்கிறது.

எ. இலந்தைப் பழப்பிரமாண முள்ளதை வித்வான்கள் மத்திமம் என்று சொல்லுகிறார்கள். கடலைப் பிரமாணமுள்ளதை அதமம் என்று சொல்கிறார்கள். இந்தப் பேதமானது என்னுற் சொல்லப்பட்டது."

இவ்விதம் தரிக்கத்தகுந்த ருத்திராக்ஷங்கள் பரிமாண பேதத்தால் உத்தம மத்திம, அதமமாயிருப்பதும் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மகாபலம்=மகாபுண்யம்.

நெல்லிக்காய்ப் பிரமாணமுள்ள ருத்திராக்ஷதாரணம் சகலத்துக்கும் மேலான புண்ணியத்தை உண்டுபண்ணுவதா யிருக்கிறது. இலந்தைப்பழப் பிரமாணமுள்ள ருத்திராக்ஷத்தைத் தரிப்பது கடலைப்பிரமாணமுள்ள ருத்திராக்ஷ தாரணத்தைக் காட்டிலும் அதிகபலமுள்ளது என்று பொருள்.

அ. ப்ராஹ்மணா: க்ஷத்ரியா வைஶ்யா: ஶூத்ராஶ்சேதி ஶிவாஜ்ஞயா । வ்ருக்ஷா ஜாதா: ப்ருதிவ்யாம் து தஜ்ஜாதீயா: ஶுபாக்ஷகா:॥

கூ. ஶ்வேதாஸ்து ப்ராஹ்மணா ஜ்ஞேயா: க்ஷத்ரியா ரக்தவர்ணகா: । பீதா வைஶ்யாஸ்து விஜ்ஞேயா: க்ருஷ்ணா: ஶூத்ரா உதாஹ்ருதா:॥

க0. ப்ராஹ்மணோ பிப்ருயாச்ச்வேதாந் ரக்தாந் ராஜா து தாரயேத் । பீதாந் வைஶ்யஸ்து பிப்ருயாத் க்ருஷ்ணாந் ஶூத்ரஸ்து தாரயேத்॥

கக. ஸமாஸ்ஸ்நிக்தா த்ருடாஸ்ஸ்தூலா: கண்டகைஸ்ஸம்யுதாஶ்ஶுபா: । க்ருமிதுஷ்டம் சிந்நம் பிந்நம் கண்டகைர்ஹீநமேவ ச॥

கஉ. வ்ரணயுக்தமவ்ருத்தம் ச ஷடுத்ராக்ஷாணி வர்ஜயேத் । ஸ்வயமேவ க்ருதத்வாரம் ருத்ராக்ஷம் ஸ்யாதிஹோத்தமம்॥

கரு. யதா² வர்ணவிஶேஷேண க்ஷிதௌ ஜாதா ஸர்வ
வேதே³ஷு । ஸிதாஸ் ரக்தாஸ் பீதாஸ் க்ருஷ்ணாஸ் க்ஷிதௌ ஸம்
ப்ரோக்தா யதா²க்ரமாத் ॥

கசு. ஶ்ரத்³தா⁴ஸ்வரூபமாத்ரேண
ஸம்ஸாரநிவிசக்ஷணை: ॥

அ. பூமியில் பரமசிவாக்ஞையால் நல்ல ருத்திராக்ஷங்கள் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர என்ற ஜாதிபேதத்தை யுடைய விருக்ஷங்களாக ஆயின.

கூ. வெள்ளை வர்னத்தை யுடைய ருத்திராக்ஷங்கள் பிராமண ஜாதி யென்றும் சிவப்பு நிறமுள்ளது க்ஷத்திரிய ஜாதியென்றும் பொன்னிறம் வைசிய ஜாதியென்றும் கருப்புநிறம் சூத்திர ஜாதியென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன.

க0. பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் முறையே, வெண்மை, சிவப்பு, பொன்மை, கருப்பு, இந்த நிறங்களையுடைய ருத்திராக்ஷங்களைத் தரிக்கவேண்டும்.

கக. தாம்பிர நிறமுள்ளதும், அழகுள்ளதும், கெட்டியானதும், பருமனுனதும், முள்ளுகளோடே கூடியதுமான ருத்திராக்ஷங்கள் மேன்மையானவை.

புழுக்கடி யுள்ளதும், வெட்டுப்பட்டதும், உடைந்ததும் முள்ளில்லாததும்.

கஉ. நோய் கொண்டதும், உருண்டையல்லாததும், ஆன ஆறுவித ருத்திராக்ஷங்களைத் தள்ளவேண்டும். தன்படியாய்த் துவாரத்தை யுடைய ருத்திராக்ஷம் உத்தமம்.

கங. மனிதனுற் செய்யப்பட்ட துவாரத்தை யுடையது மத்திமம்.

கச. ஒரே விதமாகவும், அழகாகவும், கெட்டி யாகவும், நன்ருய்ப் பழுத்ததாகவும், பட்டுக்கயிரோடு சேர்ந்ததாகவும் சமமான முகத்தை யுடையதாகவும் (இருக்கிற ருத்திராக்ஷங்களை) விவேகியா யுள்ளவன் சகல சரீரங்களிலும் தரிப்பான்.

கரு. நிகஷெஹெம ரெவாஹா யஸ்ரெவா ஹு ஜ்ஜுலஸ்ரெத । தத்க்ஷ உத்தமம்விசுராச தஸ்ராய பும்ஶிவ வ ஜ்ஜம்மெகோ॥

கரு. உரைகல்லில் தங்கநிறமுள்ளது உத்தமமான ருத்திராக்ஷமென்றறிய வேண்டியது. சிவபூஜை செய்கிறவர்கள் அதைத் தரிக்கவேண்டும்.

“ஶிவாயா ஒகெ ஒகாஸ்ஸ்ம்”

“சிகையில் ஒருமுகத்தை யுடைய ஒரு ருத்திராக்ஷம்.”

இது முதலியவை சொல்லப்படுகின்றன. இவ்விடத்தில் பிராமணன் முதலியவர்ன பேதங்களால் வெளுப்பு சிவப்பு முதலிய வர்னபேதத்துடன் சேர்ந்த ருத்திராக்ஷங்கள் தரிக்கத் தக்கனவென்று விதிக்கப் படுகின்றன. ஆகிலும், அவ்விதமான ருத்திராக்ஷங்கள் கிடைப்பதரிதா யிருப்பதால் கிடைத்தமட்டிலும் ருத்திராக்ஷத்தைத் தரிக்கவேண்டும்.

யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹுயாச
யாவஜ்ஜீவம் தர்ஶபூர்ணமாஸாப்யாம் யஜேத.

ஜீவனுள்ளவரை அக்கினிஹோத்திரத்தைச் செய்யவேண்டும். ஜீவனுள்ளவரை தர்ச இஷ்டி பூர்ணமாச இஷ்டிகளைச் செய்யவேண்டும்.

இது முதலானதினுல் நித்தியமாய் விதிக்கப்பட்ட அக்கினி ஹோத்திரதர்ச பூர்ணமாச இஷ்டிமுதலிய கிரியைகளில்.

"ஐயு௱ாஜ-ஹொதி வயஸாஜ-ஹொதி."

"தயிரால் ஓமம் செய்கிருன், பாலால் ஓமஞ்செய்கிருன்."

இது முதலானதினுல் விதிக்கப்பட்ட பால்கிடையாத பக்ஷத்தில் அரிசியினுல் ஓமமும், நெய் கிடையா விட்டால் அதற்குப் பதிலாகத் தைலத்தால் ஹோமமும், பெரியோர்களால் ஆசரிக்கப்படுகின்றது.

" தயாவீ௱ஹிஹிய-ஜெத யமெவெய-ஜெத"

"அப்படியே நெல்லுகளால் ஹோமம் செய்யவேண்டும், யவங்களால் யஜிக்கவேண்டும்".

என்ற இது முதலியவைகளால் விதிக்கப்பட்ட * புரோடா சத்துக்குக் காரணத் திரவியமாகிய நெல் ஒருகாலத்திற் கிடையாவிட்டால்; சிரௌதம்.

"யதாறெயொஉஷாகவொஜொஉ ஊவாவஸூ௱ யா௱வ வளண-ஊாவஸூ௱வாவூ-தொஹவதி."

இது முதலியதினுல் விதிக்கப்பட்ட அக்கினி தேவதையின் எட்டுக் கபாலங்களில் சமஸ்கிருதமான (அதாவது மந்திரத்தினுல் பரிசுத்தஞ் செய்யப்பட்ட) புரோடாசத் திரவியத்தையுடைய யாகத்தில் அதுபோன்ற மூலத்திரவியமாக ஊரநெல் (தானெ முளைக்கும்நெல்) முதலியவைகள் சமானமாக கிரகிக்கத் தகுந்தன "இல்லாவிடில் நித்தியகர்மத்துக்கு லோபம் வந்துவிடும்" என்று மீமாம்சகர்களால் ௬-வது அத்தியாயத்தில் விவஸ்தை பண்ணப் பட்டிருக்கிறது.

---

* புரோடாசம்=மாவினுற் செய்யப்பட்ட ஹோமத்திரவியம்.

அப்படியே ருத்திராக்ஷ தாரணத்துக்கும் விதித்தபலத்தி ஞலே அவசியம் இருக்கும் பொழுது = (ருத்திராக்ஷங் கட்டா யமாய்த் தரிக்கவேண்டுமென்று விதித்திருப்பதால்).

ஶுணலொபெவஶெஷ்வஸ்ய

"குணங்களுக்குக் குறைவுவந்தபோதிலும் முக் கியத்தைக் கிரகிக்கவேண்டும்".

என்ற நியாயத்தினல் முன்சொல்லப்பட்ட குணங்கள் இல் லாமற் போனலும் முக்கியமாய் ருத்திராக்ஷதாரணஞ் செய்யத் யத்தகுந்ததே.

இதனுல்தான் பூர்வதந்திரத்தில் ச-வது அத்தியாயத்தில்.

வெஷகஷாவ்யெயாஜகம் நய நஸ்யவராய்யுக்வாசு॥

"அடிச்சுவட்டிற் செய்யுங் கர்மமானது பிரயோஜனத்தை யுடையதல்ல நடத்தல் அங்கத்தைச் சார்ந்திருப்பதால்".

என்ற அதிகாரத்தில் சோமக் கொடியை விற்றதற்காகக் கிரையம்பண்ணிய இடத்தில் ஒருவயதுக்கிடாரியை நடத்தி அ தைநடத்தும்பொழுது ("ஷட்பதாநநுநிக்ராமதி") அதன் ஆறுகுளம்படி வைப்பைத் தொடுத்துப்போய் எ-வது அடிச் சுவட்டைக் கத்தியாற் கீறவேண்டும். சுவர்னத்தை அதிற் போ ட்டு ஓமஞ்செய்யவேண்டும். பின்பு எ-வது அடிவைப்பை அத் வரியு இரண்டு கைகளால் கிரகிக்கவேண்டும்.

யஜுர்வேதம்.

"யஹிஹவியாநெவ்யாஷீஷ்யவதெ
யெயஷஹிதெநாக்ஷஷவாஂஜ்யாசு"

என்ற (யஜுர்) சுருதிக்கு ஒருவயதுக்கிடாரியை நடத்துவ தில் கிரையமே பிரயோசனத்தையுடையதாக ஆகிறது. கண் ணைத்துடைத்தல், பதஹோமம், முதலியவைகள் அல்ல.

என்று அருத்தத்தைத் தீர்மானிக்குமிடத்தில் கண்டதேவர் முதலியவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒரு வயதுக்கிடாரியைச் சோமக்கிரையத்துக்காக நடத்துங்கால், தன்படியாய் கல்லில் எ-வது அடிவைப் புண்டானல், கண்டுடைத்தலுக்காக மறுபடியும் அந்த ஒரு வயதுக் கிடாரியை நடத்துவதில்லை; பின்னையோ ஏதேனுஞ் சிலபுழுதிகளைக் கிரஹிக்கவேண்டியது.

“குணலோபே ந முக்யஸ்ய”

“குணத்துக்குலோப முண்டானாலும் முக்கியத்துக்கு லோப முண்டாகக் கூடாது” என்று.

இவ்விதம் சு-வது அத்தியாயத்தில் பிரதானமான யாசமுழுமைக்கும் வேண்டியதான புரோடாசத்துக்குச் சாதனமான நெல்லு முதலிய முக்கியத்திரவியங் கிடையாமையால் (ஸிவிஷ்கருசு,) (ஊாஹக்ஷணம்,) சிவிஷ்டகிருது, இடாபக்ஷணம் இது முதலியவைகளுக்குப் போதுமான குதிரைக்குளம் பளுவுள்ள முக்கியத் திரவியமான நெல்முதலியவைகளால் புரோடாசம்செய்ய இடம் இல்லாமலிருக்கும் பொழுது, ஊரநெல் முதலிய தானியங்களால் புரோடாசஞ் சம்பவித்தபோதிலும், பதிலாயிருப்பதைத் தள்ளாமல் “குணலோபத்திலும்” என்ற நியாயத்தால் முக்கியமானதுக்குத்தான் கிரகணமென்ற தீர்மானமும் இவ்விடத்தில் உதாரணமாக இருக்கிறதென்பதை யறிய வேண்டியது.

அப்படியே திரவியசுத்திக்கு விரோத முண்டாயிருக்கும் பொழுது திரவியமானது அந்தப்பிரயோசனத்தை யுடையதாயிருப்பதால் * என்று சு-வது அத்தியாயத்திலேயே.

---

* கருத்து. திரவியசுத்திசெய்ய விரோதஞ் சம்பவித்தால் அத்திரவியம் சுத்தித்த திரவியமாம் பிரயோசனத்துக் காகும் ஆதலால்.

"வாஜிஸோய-ஷவோஹவதி"

"கருங்காலி யூபஸ்தம்பமாகிறது."*

"ய-ஏவம் தக்ஷதிய-ஏவஷ்டாஸ்ரீ கரோதி"

என்று விதிக்கப்பட்ட யூபத்துக்கும், "யூபத்தைச் செதுக்குகிறான், யூபத்தை எட்டுப்பட்ட முடையதாகச் செய்கிறான்." இது முதலிய வாக்கியத்தால் விதிக்கப்பட்ட சமஸ்காரங்களுக்கும், விரோதமுண்டா யிருந்தபோதிலும் பசுக்கட்டுவதற்கு மட்டும் யோக்கியமான கருங்காலிக்கே யூபம் என்ற கிரகணம் உண்டாகிறது. செதுக்கப்பட்ட முதலிய வைகளிட்டு வேலை செய்யப்பட்ட கருங்காலிக்கு மாத்திரமல்ல. கருங்காலிக்குத் தச்சன் முதலியவர்களாற் செய்யப்பட்ட சமஸ்காரரூபமான குணங்களில்லாவிட்டாலும் முக்கியமான கருங்காலிக்கே (யூபம் என்று) கிரகணம் என்று அவ்விடத்தில் தீர்மானஞ் செய்யப்பட்டிருப்பதால் அந்த நியாயத்தையும் இவிடத்தில் திருஷ்டாந்தமாகச்சேர்த்துக்கொள்ள வேண்டியது. ஆனால் அவிடத்தில் சமஸ்காரமானது தச்சுவேலை முதலியவைகளா யிருக்கின்றன. இவிடத்தில் சமஸ்காரமானது வெளுப்பு முதலிய நிறரூபங்களா யிருக்கின்றன. இவ்வளவே பேதம். இதுவும் ஒத்துக்கொண்ட வழக்கே வாதிக்கப்பட்டது.

உண்மையில்.

ரு-த்ராக்ஷாணாம் த-க்ஷ-த்ராணாம்
யாரணெஸ்யா நுஹாமஶும்॥

"இதுமுதலிய விடங்களில் யோக்கியதைக்குத் தக்கபடி தாரணஞ்செய்யத் தகுந்த ருத்திராக்ஷங்களின் பலவிஷயமாகச் சொன்னபோதிலும்."†

---

* யூபம் = யாகத்தில்பசுவைக்கட்டும் ஸ்தம்பம்.

† கருத்து. இது முதலியவிடங்களில் பிராமணாதி வருணத்தவர் வெண்மையாதிவர்ண ருத்திராக்ஷங்களைத் தாரணஞ்செய்வதால் உண்டாகும் பலவிஷயமாய்ச் சொன்னபோதிலும்.

ததூாஶ்ரூவிஂஶ வொஜா தா ஊஹாரூஜாக்ஷ வருக்ஷ காஃ। ஷ்யாவரக்ஷ ஊநேவூாவ்ரா॥

இது முதலிய மூன்வாக்கியங்களில் ருத்திராக்ஷ பதத்துக்கு விருக்ஷபரமாகப் பிரயோகஞ் செய்திருப்பதால்.

ஜூாஹ்மணாஃ க்ஷத்ரியாவைஶ்யா ஶூத்ராஶ்ரேதி ஶிவாஜ்ஞயா। வுக்ஷாஜாதாஃ வூமிவ்ரா நூ தஜ்ஜாதீயா ஶூஹாக்ஷகாஃ॥

என்று மேலும் விருக்ஷபதத்துக்கு பொருத்தமான வேற்றுமையுடையதாகப் பிரயோகங் காணப்படுவதால் வெளுப்பு சிவப்பு பொன்னிறம் கருப்பு இந்த நிறங்களை உடைத்தாயிருக்குந்தன்மை விருக்ஷங்களுக்கே. தரிக்கத்தகுந்ததாய் அங்கீகாரஞ் செய்யப்பட்ட அந்த மரத்திலிருந்து முண்டான பழங்களுக்கல்ல; ஓரிடத்திலும் அவைகளின் வர்னபேதங்களைக் காணுமையால். அதனுல்தான்,

தாஊாஸ்நிஷ்யாஊாஜாஃ ஷூஷஜாஃ
கண்டகெக்ஷஸ் யூதாஶூஹாஃ॥

என்று மேலே தரிக்கத்தகுந்த ருத்திராக்ஷங்கள் விசேடிக்கப்பட் டிருக்கின்றன.

ஆகத் "தரிக்கத்தகுந்தவை தாம் பிரவர்னமாயிருத்தல், அழகாயிருத்தல், கெட்டியாயிருத்தல், பருமனுயிருத்தல், முட்களோடிருத்தல், இவைகளை யுடையனவாம்"

வெண்மையான மரத்திலிருந் துண்டாயிருக்குந்தன்மையோவென்ருல் தூரதேசஸ்தர்களானு நம்மைப் போன்றவர்களுக்கு கிடைப்ப தருமைதான். வருத்தத்தின்பேரில் கிடைத்தால் அது கிரகிக்கத்தகுந்ததென்பதில் வழக்குமில்லை.

இந்தவுலகத்தில் வலம்புரிச்சங்கத்துக்கு மேன்மை சொல்லப்பட்டிருந்தாலும், அது கிடையாதபக்ஷத்தில் சங்கம் முழுமையும் பகவத் ஆராதனம் முதலிய இடங்களில் அபிஷேகசாதனமாகக் கிரகிப்பதையும், பெரியவர்களாற் செய்யப்படுவதையும், திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ள வேண்டியது. அதனால்தான் சிவபுராணத்தில் ஜாபாலோபநிஷத்துக்கு உபப்பிருமணமாயிருக்கிற வாயுசம்ஹிதையில் உபரிபாகம் கஉ-வது அத்தியாயத்தில்,

க. ருத்ராக்ஷம் தாரயேச்சிகாயாம் கண்டே ஶ்ரோத்ரே கரேऽபி வா। ஸுவர்ணவர்ணம் ஸச்சித்ரம் ஶுபம் நாந்யைர்த்ருதம் ஶுபம்॥

க. பொன்னிறமுள்ளதும், துவாரத்துடன் கூடியதும், அழகானதும், அந்நியர்களால் தரிக்கப்படாததும்ஆன ருத்திராக்ஷத்தை உச்சி கழுத்து காது கரம் இவைகளில் எதிலாவது தரித்தால் சுபம் உண்டாகும்.

உ. விப்ராதீநாம் க்ரமாச்ச்வேதம் ரக்தம் பீதம் ததாஸிதம்। ததலாபே யதாலாபம் தாரணீயமதூஷிதம்॥

உ. பிராமணர் முதலியவர்களுக்கு முறையே வெளுப்பு சிவப்பு பொன்னிறம் கறுப்பு இந்த நிறத்தையுடைய ருத்திராக்ஷம் தரிக்கத்தகுந்தது: அப்படிக் கிடையாதபக்ஷத்தில் கிடைத்தமட்டும் தூஷியாமல் தரிக்கத்தகுந்தது.

ங. தத்ராபி நோத்தரம் நீசைர்தார்யம் நீசம் ததோத்தமை:॥

ங. அதிலும் தணிந்தவர்களால் மேலானது தரிக்கத்தகுந்ததல்ல. மேலானவர்களால் தணிந்தஜாதி தரிக்கத்தகுந்ததல்ல.

ஆனதினாற்றான் புருஷார்த்தப்பிரபோதம் என்கிற கிரந்தத்தில் ௩-வது அம்சத்தில் ஐந்தாவது அத்தியாயத்தில் வாயுசம்ஹிதையிற் சொல்லப்பட்டதையே சுலோகங்களாற் றெளிவாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

௧. புராணே வாயவீயாக்²யே ஶிவயோக³ப்ரகாஶகே । ப⁴ஸ்மநஶ்ச ருத்³ராக்ஷநியம: ப்ரகீர்த்தித: ॥

௨. விப்ராதீ³நாம் க்ரமாச்ச்²வேதம் ரக்தம் பீதம் ததா²ஸிதம் । ததா²ஸாமாந்யயோக்³யாநாம் தா⁴ரணீயமபீ⁴ப்ஸிதம் ॥

௩. தத்ராபி நாத்ரம் நீசை: தா⁴ர்யம் நீசைஸ்ஸ்வயோநிஜை: । ஸ்வதா⁴ரணே தா⁴ரணேந நரகாந்நிஷ்க்ருதா ஸ்ம்ருதம் ॥

௪. ஶ்ரத்³த⁴யா தா⁴ரணம் நித்யம் கார்யம் ருத்³ராக்ஷதா⁴ரணம் । நித்யஶுஶ்ரூஷயா க்ருதக்ருத்ய: ப்ரத்யவாயஸ்து தா⁴ரணாத் ॥

௫. ருத்³ராக்ஷதா⁴ரணவிதி⁴: ஸங்கீர்த்தித்வநவர்ஜித: । நித்யகர்மஸ்வகார்யேணைதே வேதா³ர்த்தா²ஸ்ஸ்யு: ஶிவப்ரியே ॥

௬. கண்டே²(அ)ஸ்ஸ்ய ப்³ருஹ்மஸூத்ரே வா கர்ணயோ: கரயோரபி । ருத்³ராக்ஷதா⁴ரயேந்நித்யம் ஹஸ்தாப⁴ரணயோரபி ॥

௭. கீர்த்திப⁴ஞ்ஜநோ தேந ஸம்ப்ரோக்தநவந்நி வந்நி । ருத்³ராக்ஷதா⁴ரணம் நித்யம் தத்ஸமேவப்ரஶஸ்யதே ॥

க. சிவபுராணத்தில் சிவதர்மத்தைச் சொல்லுகிற வாயுசம் ஹிதையில் வர்ணத்துக்குத் தகுந்த ருத்திராக்ஷ நியமமானது சொல்லப்பட்டிருக்கிறது.

உ. பிராமணர் முதலியவர்களுக்குக் கிரமமாக வெள்ளை சிவப்பு பொன்னிறம் கருப்பு நிறங்கள் (இந்நிறமரத்தின் ருத்திராக்ஷங்கள்) (தரிக்கத்தகுந்தன) அப்படிக் கிடையாத பக்ஷத்தில் கிடைத்த மட்டிலும் தூஷிக்காமற் றரிக்கத்தகுந்தன.

ந. அதிலும் மேலானது தணிந்தவர்களால் தரிக்கத்தகாது, தணிந்தது மேலானவர்களால் தரிக்கத்தகாது. தரியாவிட்டால் நரகமும் தரிந்தால் இஷ்டசித்தியும் உண்டாகிறது.

ச. பஸ்மதாரணம்போல் எப்பொழுதும் ருத்திராக்ஷதாரணம் விரும்பத்தகுந்தது. நித்யசப்தம் கொடுத்ததால் அதைத் தாரணஞ் செய்யாமலிருப்பது கொடிய குற்றம்.

ரு. பலனை இவ்வளவென்று சொல்லமுடியாத ருத்திராக்ஷதாரணத்தைப்பற்றிய இந்த விதிகள் நித்யத்துவத்துக்குக் காரணங்களென்று பரமசிவனுக்குப் பிரியமான ஸ்காந்தபுராணத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

சு. கழுத்து, தலை, பூணூல், காது, இரண்டுகை, இவைகளில் எதிலாவது நித்யம் மிகப்பத்தியுடன் ருத்திராக்ஷந் தரிக்கவேண்டும்.

எ. இந்த விஷயத்தில் வெகுவாக அடிக்கடி வர்ணித்ததாலென்ன? ருத்திராக்ஷதாரணம் நித்யமாயுள்ளது அதனாலேயே புகழப்படுகிறது.

அ. ஸ்நாநே தாநே ஜபே ஹோமே வைஶ்வதேவே ஸுரார்ச்சநே। ப்ராயஶ்சித்தே ததா ஶ்ராத்தே தீக்ஷாகாலே விஶேஷத:॥

கூ. அருத்ராக்ஷதரோ பூத்வா யத்கிஞ்சித்கர்ம வைதிகம்। குர்வந்விப்ரஸ்து மோஹேந நரகே பததி த்ருவம்॥

க0. ருத்ராக்ஷம் தாரயேத்விப்ர: ஸந்த்யாதிஷு ச கர்மஸு। தாநே தபஸி யஜ்ஞே ச ப்ராயஶ்சித்தே ஸுரார்ச்சநே॥

அ. ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம், வைசுவதேவம், தேவபூஜை, பிராயச்சித்தம், சிராத்தம், விசேஷமாக தீக்ஷா காலம்,

கூ. இவைகளில் ருத்திராக்ஷம் தரியாமல் ஏதேனும் வைதிகமான கர்மத்தை மோகத்தினல் செய்கிற பிராமணன் நரகத்தில் விழுகிறன். நிச்சயம்.

க0. ருத்திராக்ஷத்தை பிராமணன் சந்திமுதலிய கர்மங்கள் தானம் தபசு எக்யம் பிராயச்சித்தம் தேவபூஜை இவைகளில் தரிக்கவேண்டும்.

கக. பாஷண்டாநாம் சிஹ்நமேதந் ருத்ராக்ஷாதாரணம் ஸ்ம்ருதம்। ப்ரஹ்மணோக்தம் ஸ்வகீதாயாம் தத்வநித்யத்வஸாதகம்॥

கக. பிரமதேவர் தன்னுடைய கீதையில் ருத்திராக்ஷத்தைத் தரியாமலிருப்பது பாஷண்டர்களின் அடையாளமென்றும், ருத்திராக்ஷதாரணம் நித்யத்வத்துக்குச் சாதகம் என்றும் சொன்னர்.

கஉ. 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌣𑌂 𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌵𑍇𑌦𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌚 𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾 । 𑌨 𑌕𑍁𑌰𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌚 𑌮𑍋𑌹𑍇𑌨 𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑍋𑌪𑌹𑌤𑌾 𑌜𑌨𑌾𑌃 ॥

கஉ. பாசண்டர்களால் வியாபிக்கப்பட்ட ஜனங்கள் வேதத்திற் சொல்லிய வழியாய்ப் பக்தியுடன் ருத்திராக்ஷதாரணத்தை மோகத்தால் செய்யாமலிருக்கிறார்கள்.

கங. 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌧𑌾𑌰𑌣𑌵𑌿𑌧𑌿𑌃 𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌃 𑌨𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 । 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑌾𑌯 𑌵𑌾𑌯𑌵𑍀𑌯𑌸𑌂𑌹𑌿𑌤𑍋𑌦𑌿𑌤𑌃 ॥

கங. இவ்விதமென்று பலனைச்சொல்ல முடியாத ருத்திராக்ஷதாரண விதியானது நித்யமாயிருப்பதற்குச் சாதகமென்று வாயுசம்ஹிதையில் தெளிவாய்க் காணப்படுகிறது.

கச. 𑌸𑌦𑌾𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌕𑌮𑍍 । 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌂 𑌧𑌾𑌰𑌯𑍇𑌨𑍍𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌕𑌣𑍍𑌠𑍇 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 𑌕𑌰𑍇𑌷𑍁 𑌵𑌾 ॥

கச. சதா என்றசொல்லுக்கு நித்யத்துவத்துக்குக் காரணமாயுள்ளது என்ற அருத்தம் அவ்விடத்திலேயே யிருக்கிறது. ருத்திராக்ஷத்தை தலை, கண்டம், எக்ஞசூத்திரம் (பூணூல்) கை, இவைகளி லெதிலாவது தரிக்கவேண்டும்.

கரு. 𑌸𑌰𑍍𑌵𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌨𑌾𑌮𑍈𑌤𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌭𑌵𑍇𑌚𑍍 ॥

திருஞா. * "போதந்தருவது நீறு" † "புண்ணியர் பூசும் வெண்ணீறு" ‡ "புன்மைதவிர்ப்பது நீறு" ¶ "சுத்தமதாவது நீறு" § "மாலொடயனறியாதவண்ணமு முள்ளது நீறு" + "முனிவரணிவது நீறு"

இதை வாமனாசாரியர் காரிகை பிரமோத்தர காண்டம் அரிவம்சம் முதலியவைகளாலும் போதாயனர் நாரதர் வியாசர் சாதாதபர் ஸ்ரீசங்கராசாரியர் மாதவாசாரியர் முதலியராலும் புகழப்படுகின்றது. *

பஸ்மம்.

பஸ் என்ற பகுதியினடியாய்ப் பிறந்தது. அஃது வறுத்தல் பிரகாசம் என்ற பொருள்களையுடையது. அவ் விருபொருள்களில் பாவம் ரோகம் மாயாபாசங்களை வறுத்தலால் † பஸ்மம் என்றும்.

(அவைகளைப்போக்கி) மெய்யறிவை விளக்குவதால் (பிரகாசிக்கச்செய்வதால் பசிதம் என்றும் இருசொற்களுண்டாயின. ‡

மெய்யறிவைப் பிரகாசிக்கச்செய்வதால் பஸ்மம் என்னப்படுமென்பாருமுளர் ‡ அன்றியும்.

ஐச்சுவரியத்தைக் கொடுப்பதால் ¶ பூதியென்றும், விக்கினங்களினின்று இரட்சிப்பதால் § இரட்சையென்றும் பெயர் பெறும்.

பஸ்மம் சகலசுபகருமங்களிலும் இரட்சாபந்தனம் (கௌதுகபந்தம்), செய்யப்படுகின்றது. அஃது மங்களத்தையும் சுத்தத்தையுந்தரும் பக்தசின்னம். +

சுலோகம் - 6.

பஸ்மத்தால் செய்யுமேற் பூச்சுசுத்தியைத்தரும் ஆக்கிநேயஸ்நாநம். (பிராமண குலத்துக்கு அக்கினிதெய்வம் அதிற்பிறப்பது பஸ்மம்) ஆக்கிநேயம் வாருணம் முதலிய ஒன்பது

* "தக்கோர்புகழ்வது நீறு" † "பாவமறுப்பது நீறு"
‡ "மதியைத்தருவதுநீறு" ¶ "பாக்கியமாவது நீறு"
§ "அவலமறுப்பதுநீறு" + "பத்திதருவது நீறு."

ஸ்நாநனங்களில் மிருத்திகா ஸ்நாநமும் ஒன்றாயிருக்கினும் அஃது துளசி வில்வம் முதலியவற்றின் அடிமண்ணாற்புரிவது. கோபீ சந்தனத்தாலன்று. கோபீ சந்தனதாரணம் தூய்மைதரும் ஸ்நாநயோக்ய முடையதன்று.

சுலோகம் - 7.

கோபீகந் தோர்த்தவ புண்டரம் வேதத்திற் கூறப்படவே யில்லை ஆதலாலத்தாரணம் வைதீகமன்று. அதைக்கூறும் வாசுதேவோப நிஷத்தும் கோபீசந்தனத்தின்மேல் பஸ்மதாரணஞ் செய்ய விதிப்பதால் பஸ்மரஹித கோபீசந்தனதாரணம் உபநிஷத்திற் கூறப்பட்டதுமன்று. ஸ்மிருதிசித்தமெனில் வேதத்தைத்தழுவாத ஸ்மிருதி வாக்கியம் பிரமாணமாகாது. அஃது கௌதம தருமசாஸ்திரத்திற் கூறப்பட்டது என்பது கற்பனை: அவர் சிவபக்தராயும் ஆசார சூத்திரத்தில் பிராயச்சித்தப் பிரகரணத்தில் அதர்வசிரசுருதியைக் கிரகித்து பஸ்மதாரண மவசியம் செய்யத்தகுந்ததென்று நிருபித்தவராயுமிருப்பதாலும், கௌதம தரும சாஸ்திரமென்ற நூலுலகத்து வழங்கக் காணாமையாலும், ஆன்றோரொருவருமத் தருமசாஸ்திரத்தை யெங்குமெடுத்தாளக் காணாமையாலும், வேதவிரோதமாயிருப்பதாலும், கோபீசந்தன தாரணஞ்செய்யும் ஆஸ்திக சிரேஷ்டர் தொன்று தொட்டு கோபீசந்தனத்தின்மீது பஸ்மோத்தூளநஞ் செய்தலையும், மாத்தியா நிகஸ்நாநஞ் செய்த பொழுதும் அமாவாசை முதலியவைகளிலும், பஸ்மத் திரிபுண்டரதாரணஞ் செய்தலையும் சதாசாரமாக வநுஷ்டிக்கக் காண்டலாலும் என்க.

அங்ஙனம் கற்பனையான கௌதமதரும சாஸ்திரத்தில் "பற்பம்மயிர் உமிவராட்டி ஓடு அசுத்தம் (கபம்) சனை மேலிராதே" என்றதில்மேல் என்றபதச்சேர்க்கையாலும், மேல் என்ற பதஞ்சேர்ந்தவிடத்து இரண்டாம் வேற்றுமைக்கு ஏழாம் வேற்

றுமைப்பொருள் பாணிநி விதித்திருப்பதாலும், "மடத்தை மேல் இருக்கிறன்" என்பது "மடத்திலிருக்கின்றன்" என்று பொருளாவதுபோல "பற்பம்மயிர் உமிவராட்டி ஓடு அசுத் தங்களின் மேலிருக்காதே" என்றே பொருள்படும். இனி மேலிராதே என்பதற்குத் தொடாதே என்று பொருட்கொ ண்டு அசுத்தமான பற்பம்மயிர் உமிவராட்டி ஓடுகளைத்தொ டாதே என்பது பண்புத்தொகையெனில், பாணிநீய சூத்திரப் படி அமேத்தியம் என்ற விசேடணம் (அடை) விசேடியத்து க்கு முன்னிருக்கவேண்டும், அன்றியும், அமேத்யசப்தம் பஸ் மம் கேசம் முதலியவைகளுக்கு அடையாதலால் மேத்யபஸ் பம் முதலியவை குப்பையிலெறிந்த அடுப்புச்சாம்பல் (பஸ்மம்) கழித்தமயிர் முதலியவைகளைக் காட்டிலும் வேறு என்றுணர் த்துகையால் பஸ்மப்பொதுவுக் கமேத்தியத்துவஞ் சித்தியாது. பஸ்மமுதல் ஓடுவரை அனைத்தும் அமேத்யமாதலால் அவை கட்குப் பேதமின்று "பேதந்தோன்றினல் உம்மைத்தொகை யென்று பாணிநிசொன்னர் என்று கூறியதுபொய் அங்ஙனம் பாணிநிகூருமையால். பாணிநி "உம்மையின் அருத்தத்தில் உம்மைத் தொகைவரும்" என்று சூத்திரஞ் செய்திருக்கிறர்.

இனி பஸ்மம் என்றபதம் கேச சப்தத்தோடு கலந்திருப்ப தால் அசுத்தம் என்னவுமேலாது "புண்யபாவம்" "இராம ராவணர் யுத்தம்" முதலிய விடங்களில் உம்மைத் தொகையா யிருந்தும் சேர்ந்தபதத்தின் குற்றம் குற்றமல்லாத பதத்தைச் சாராமையால். இஃதால் "பஸ்மம் முதலியவைகளின் மேலி ராதே" என்று ஒன்று சேர்த்துக்கூறியதாலும் அவைகள் ஒரு தன்மைத் தனவாகவாகாமை தெளிவு.

இனி நீலகடம் என்பதில் நீலம் என்ற விசேடணம் கடத்தி னின்று பிரிக்கக்கூடாத குணமாதலால் நீலகடம் பண்புத்தொ கை. பஸ்மம் மேத்யம் சுத்திக்குக் காரணமானது என்று வேதம் தைத்திரீய உபநிஷத்து அதர்வ சிரசு காலாக்கினி உரு

த்திரம் ஜாபாலம் முதலிய உபநிஷத்துக்களும் போதாயனரும் ஸ்மிருதிமுக்தாபலம் வாமனபுராணமும் நிரூபிக்கின்றன. இத்தகை பஸ்மத்தில் அமேத்யத்வங் கற்பிப்பது நியாயமற்ற தூர்வாதமே. தேவர்களும் * இருடி சிரேட்டர்களும் † சிங்கேரி கும்பகோண ஆசாரியர் பரம்பரையிலும் ‡ மாதவாசாரியர் அப்பயதீக்ஷிதர் அவர்களும் அன்னவர் மூலப்புருடர்களும் விபூதி உருத்திராக்ஷதாரணத்தை யநுட்டித்து வந்திருக்கின்றனர். அசுவத்த நாராயணசாஸ்திரிகளும் ஸ்ரீமத் சுயம்பிரகாச சரசுவதிசுவாமிகளிடம் "சுருதிக்கு மிருதிக்கும் விரோதமுண்டானால் சுருதிதான் பலமுடையது" என்று "சாயங்காலத்தில் சலம்சேராத விபூதிபாவநாசஞ்செய்யும்" என்ற மிருதிவாக்கியம் "திரிசந்தியிலும் திரிபுண்டரம் தரிப்பவன் உருத்திரன்" என்ற காலாக்கினி ருத்திரோப நிடதவாக்கியத்தின் முன்ஜீவியாதென்ற வுண்மையானு மிருதியின் அபலமோர்க.

இனி பஸ்மம் மேத்யம் (சுத்தமானது) தரிக்கத்தகுந்தது சுத்திக்குக் காரணமானது என்பதுபோல பிர்மஹத்தியின் பிராயச்சித்தாங்கமான கபாலதாரணத்திலும் தரிக்கத்தகுந் தன்மையும், சுத்திக்குக் காரணமாந்தன்மையும் இருப்பதால் அதிலும் மேத்யத்வத்தின் அதிவியாப்தியுண்டாம். தப்தசுராபாநம் சுராபானதோட நிவிர்த்திசெய்து சுத்திக்குக் காரணமாவதால் அதிலும் மேத்யத்வ அதிவியாப்தியுண்டாம் எனில், பிர்மஹத்திசெய்தவனுக்கு 12-வருடம் அசுத்த கபாலதாரணம் சண்டாளன்போல் ஒதுங்கல் ஸ்தானம் ஆசனங்களினீங்குதல் அக்கினியிற் சுடப்படுதல் முதலியனவும்; சுராபானஞ் செய்தவனுக்கு அவன் நேயர்வார்க்குங் காய்ச்சியகள்ளாற் சாதலும்; குருபத்நிகமனஞ் செய்தவனுக்கு ஸ்திரீரூபமான அக்கினியா

---

* திருஞா "மேலுறை தேவர்கடங்கண் மெய்யது வெண்பொடி நீறு." † "முனிவரணிவது நீறு." ‡ "புண்ணியர்பூசும் வெண்ணீறு."

"கக்காச்சிய இருப்புப்பிரதிமையைத் தழுவிச்சாதலும்; அதற்
குரியதண்டனையும், பிராயச்சித்தமுமாகக் கூறப்படினும் அவை
களாலுண்டாம் மரணமே சுத்திக்குக் காரணமாம்.

பிர்மஹத்தி சுராபானம் குருபத்திநிகமனம் ஆதிமகா பாத
கங்களுக்கு பஸ்மத்தை நிறையப்பூசிக்கொண்டுப் பஸ்மப்படுக்
கையிற்படுத்து ஸ்ரீ உருத்திரத்தை ஜபித்தல் பிராயச்சித்தமாக
அதிசுலபமார்க்கங் கூறப்பட்டிருப்பதால் இலேசில் புனிதமாக்
கும் பஸ்மம் தானே சுத்தியாயும் சுத்திக்குக்காரணமாயும், சத்
துக்களாலும் தேவராலும் சகலராலும் அவசியந் தரிக்கத்தக்க
தாயும் உளது. ஆதலால்தானே சுத்தமல்லாததும் சுத்திக்குக்
காரணமல்லாததும் ஆனகபாலதாரணாதிகளில் மேத்யத்வ அதி
வியாப்திகூறுவது அசங்கதம்.

இனி பஸ்மம் பரிசுத்தமானது ஆகாரஞ்செய்யத் தகாததோ
டமுடைய அன்னம் பஸ்மம் சேருவதால் ஆகாரஞ்செய்யத்
தகுந்ததாவதால், இஃது வாமனபுராணம் முதலிய வற்றி
லோர்க.

சுலோகம் - 8. 9. 10. 11.

ஆதலால் பஸ்மம் மேத்யம். அஃது சுத்தியாயும் சுத்திக்குக்
காரணமாயும் சகலராலும் தரிக்கத்தக்கதாயும் உளது என்ப
தற்கு வேதம், வேதத்தைத்தழுவிய மிருதிகள் புராணங்கள்
ஆன்றோர் வசனங்கள் அநுட்டானம் பிரமாணங்க ளாயின.
வேதப் பிரமாணமில்லாத ஊர்த்தவ புண்டரத்தை உயர்ந்த
தென்று சாத்திரஞானமில்லாத சமையற்காரர் ஊழியர் முத
லியவர்களுக்குப்போதித்து வசப்படுத்தியது அநியாயம். அங்
ஙனம் பிரமாணத்தை விரோதித்துப்பேசல் ஆத்திகருக்கழ
கல்ல. தருமத்தைக்கூற லவசியமாதலிற்கூறினும். வேதமே
சகல தருமங்களுக்கு மூலம். வேதத்துக்கு விரோதமான ஸ்மி
ருதி வசநங்கள் பிரமாணமாகா.

விபூதிமகிமை முற்றிற்று.

---

# உருத்திராக்கமகிமை.

(1) *பகவானுன காலாக்கினி உருத்திரர்வாக்கியம் "திரிபுர சங்காரத்துக் காகக்கண்களை மூடியிருந்தான். அவைகளி னின்றும் கண்ணீர்த்துளிகள் விழுந்து பத்தர்களுக்கு அநுக்கி ரகம் செய்யும்பொருட்டு உருத்திராக்க மரங்களாயின. உருத் திராக்கத்தின் நாமோச்சாரணத்தால் பத்துக் கோதானபலம். அதைத் தரிசித்தால் இருபது, தொட்டால் முப்பது கோதா னபலம். தரித்தால் நூறு இலக்ககோடிபங்கும் தரித்துக் கொண்டு ஜபித்தால் ஆயிரம் இலக்ககோடிபங்கும் புண்ணியம். தாழ்ந்த உருத்திராக்கங்களைத் தரித்தாலும் மகாபலம். நெல் லிக்காய் இலந்தைப்பழம் கடலைப்பிரமாண முடையன முறை யே உத்தம மத்திம அதமபலன்களுடையன. வெண்மை செம்மை பொன்மை கருமை நிறமரங்கள்முறையே பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரசாதிகளாம். அவைகள் அவ்வச்சா தியார் தரிக்கத்தக்கன. தாம்பிரநிறமும் அழகும் கெட்டியும் பருமனும் முட்களோடு கூடியதும், ஆன உருத்திராக்கங்கள் தரிக்கத்தக்க மேன்மையானவை. புழுக்கடி வெட்டு உடைவு நோயுள்ளது முள்ளில்லாதது உருண்டையல்லாதது ஆன ஆறு குற்றங்களுள்ளன தள்ளத் தக்கன. பிறப்பிற் றுவாரமுள் ளது உத்தமம். செய்யப்பட்டதுவாரமுள்ளது மத்திமம். ஒரேவிதமும் அழகும் கெட்டியும் பழுத்ததும் சமமுகத்தையு டையதும் ஆனவை மட்டும் கயிற்றோடு சகலசரீரங்களிலும் தரிக்கத்தக்கன. உரைகல்லிற் றங்கநிற முள்ளது உத்தமம்" என்று பிரகத்ஜாபாலோப நிஷத்திற் கூறப்பட்டது.

(2) உருத்திராக்கங்களுக்கே வெண்மை முதலிய நிறங்க ளைக்கூறல் மரங்களின் நிறங்கள் கூறப்பட்டிருத்தலானும், தே

---

* திருஞா, "புன்மைதவிர்ப்பது நீறு."

ண்மை முதலிய வருண உருத்திராக்கங்கள் காணக்கிடையா மையாலும், தரிக்கத்தக்கன தாம்பிரவநுணமும் உரைகல்லிற் பொன்னிறமுள்ளனவும் என்று கூறப்படலாலும், பொருந்தாது. வெண்மையாதி வருண மரங்களின் உருத்திராக்கங்களை பிராமணர் முதலிய வருணத்தவர் தரிப்பது உசிதமெனினும், உருத்திராக்கத்தில் வருணபேத மின்மையால் வேறுபிரித்துக் கிடைப்பதருமை யாகலின் "குணங்களுக்குக் குறைவு வந்தபோதினும் முக்கியத்தைக் கிரகிக்கவேண்டும்" என்ற நியாயத்தால் கிடைத்ததைத் தரிக்கலாம்.

(3) உருத்திராக்ஷம் தரித்தால் இஷ்டசித்தியும் தரியாவிடில் நரகமு முண்டாம். வைதிகமாகிய ஸ்நாநம் தானம் ஜபம் ஹோமம் வைசுவதேவம் தேவபூஜை பிராயச்சித்தம் சிராத்தம் தீக்ஷாகாலம் சந்தி முதலிய கருமங்கள் தவம் எக்கியம்களில் ஏதேனும் ஒன்றை மோகத்தினல் உருத்திராக்ஷம் தரியாமல் செய்கின்றவன் நரகத்தில் விழுவன். உருத்திராக்கந் தரியாமை பாஷண்டர்களின் அடையாளம்.

(4) உருத்திராக்க மரக்காற்றினுற் றூக்கப்பட்ட புற்களும் புண்ணியலோகத்தை யடைகின்றன. உருத்திராக்க தாரணத்தாற் பாவியும் புனிதனுகின்றனன். நாயும் பசுக்களும் உருத்திரசாரூப மடைகின்றன.

(5) மோக்க விருப்பமுடையார் சிகை சிரசு காது கண்டம் மார்பு கைகளில் தாரணஞ்செய்க. பிரமாவிண்டு உருத்திரன் அவர் லோகங்களை யடைந்தவர்கள், மற்றைய தேவர்கள் எல்லவரும் எப்பொழுதும் உருத்திராக்கத்தைப் பத்தியோடுதரிக்கின்றனர். கூடஸ்தர்களான சகல கோத்திர இருடியரும் அவர்வம்சத்தி லுற்பவித்தவர்களும் வைதீகர்களும், சுத்தர்களான சகல முனிவர்களும் உருத்திராக்கதாரிகள். பலஜென்ம புண்ணியத்தால் அதில் விருப்பமுண்டாம். பாவிகளுக் கதில்

பக்தியுண்டாகாது. விரலால் செபித்தால் ஒருகுணம், விரலி றையால் எட்டு, சங்குமணியால் நூற்றெட்டு, புத்திரதீபத் தால் மூன்நூறு, தாமரைமணியால் ஆயிரம், படிகமணியால் முப்பதினாயிரம், தருப்பை முடிச்சால் கோடிகோடி, உருத்தி ராக்கத்தால் செபித்தால் அளவற்ற பலமுண்டாம்.

(6) உருத்திராக்கந் தரிப்பவன் ஒருவனாற் கொல்லப்படான். உலகிற் சுரர் அசுரர் மனிதர்களால் பரமசிவன்போல வணங் கப்படுவேன். எச்சிலுடையவனாயினும் பாதகியாயினும் புனித னாவன். உருத்திராக்கம் போல் மண்ணாற் செய்து தரிக்கினும் சிவலோகமடைவன். உருத்திராக்கதானத்தினு முயர்ந்ததான மின்று. தரிப்பவன் வீட்டில் மங்களமுண்டாம். தரிப்பவ னுக்கு அன்னங்கொடுப்பவன் உருத்திரலோகமடைவன்.

(7) உருத்திராக்க தாரணஞ்செய்யாத பிராமணன் புசிக் கும் அன்னம் நாய் மாமிசம் (ஆம்). மதுமாமிச பக்ஷணம் நீசத் திரி சங்கமஞ்செய்பவனும் உருத்திராக்கதாரணத்தால் புனித னாகிறான். சகலயாகம், தவம், தானம் வேதமோதல் தீர்த்த யாத்திரை புராணசாத்திர படனம், இவைகளாலுண்டாம் பல ன்களை உருத்திராக்கதாரணமொன்றா லடைவன். உருத்திரா க்கதாரணத்தோடு சாகிறவன் துர்க்குணனாயிருந்தாலும் அசு த்தனாயிருந்தாலும் புசிக்கத்தகாததைப் புசிக்கிறவனாயிருந்தா லும், மிலேச்சனாயிருந்தாலும், சண்டாளனாயிருந்தாலும், பாவி யாயிருந்தாலும், இருபத்தொரு தலைமுறையை உத்தாரணஞ் செய்துகொண்டு சிவலோகத்தை யடைகின்றனன்.

(8) உருத்திராக்கம் சிரசு காது கண்டம் உச்சி உபவீதம் புயம் மணிக்கட்டுகளிற் றரித்தால் முறையே கோடி, பத்துக் கோடி, நூறுகோடி, ஆயிரங்கோடி, பதினாயிரங்கோடி, இலக்க கோடி, அளவற்ற புண்ணியம். உருத்திராக்கதாரணஞ் செய் துகொண்டு அற்பபுண்ணிய கருமஞ்செயினும் மகாபுண்ணிய

பலனையடையவன். உருத்திராக்கத்தில் பத்தியுள்ளவன் தரித்த லென்கிறன். அறிவில்லாதவனும் அத்தாரணத்தால் அச் சுமை யாற்கிட்டங்கில் விழுந்திறந்த கழுதையைப்போல் சிவலோகத்தை யடைவன். இதன் மகிமையைப் பத்தியில்லாதவனுக்கும் மூர்க்கனுக்குஞ் சொல்லற்க. மந்திர மின்றித்தரித்தால் உண்டாகின்ற பலன்களே கூறப்பட்டன. மந்திரத்தோடு தரிக்கில தன்மகிமை சொல்லமுடியாது. பிராமணன் எப்பொழுதும் உருத்திராக்கந்தரித்துக் சகல வைதிக கருமங்களுஞ் செய்க.

(9) உருத்திராக்கதாரி உருத்திரனுகவே யாகிறுன். அவன் நிஷித்தமானவற்றைப் பார்த்தாலும் கேட்டாலும் நினைத்தாலும் முகர்ந்தாலும் சாப்பிட்டாலும் பேசினுலும் செய்தாலும் அடைந்தாலும் (அவைகளாலுண்டாம்) சகல பாவங்களினின்றும் விடுபடுகின்றனன். அவன் புசித்தது குடித்தது முகர்ந்தது உருத்திரன் புசித்தது குடித்தது முகர்ந்ததாகின்றன. உருத்திராக்கதாரணத்தில் வெட்கமுடையவனுக்கு சம்சார நீக்கம் கிடையாது. அத் தாரணத்தைப் பரிகசிப்பவன் உற்பத்தி கலப்பானது. உருத்திராக்கதாரியைக் கனப்படுத்தாதவன் நரகடைவன்.

(10) அத்தாரணத்தால் உருத்திரர் இருடிகள் பிரமன் தங்கள் பதவிகளை யடைந்தனர். சிராத்தத்தில் உருத்திராக்கதாரியைச் சந்தோஷிக்கச் செய்பவன் பிதிர்லோக மடைவன். உருத்திராக்கதாரியின் பாததீர்த்தம் பருகுவோன் பாவநீங்கிச் சிவலோகமடைவன். ஜாபாலோபநிஷத்து சிவஞான சித்திக்குச் சாதனம் * ஸ்ரீகாசி, சதருத்தரீயம், உத்தம சந்நியாசம் பஸ்மோத்தூளநம் திரிபுண்டரதாரணம், உருத்திராக்க தாரணம் சிவசப்தசெபம் சிவத்தியாநம் என்று கூறுகின்றது.

---

(1) திருஞா. * "போதந்தருவது நீறு."

(11) சொர்ணத்தாலாவது வெள்ளியினாலாவது கட்டப்பட்ட உருத்திராக்கத்தைச் சிகை காதுகள் பூணூல் கை கண்டம் வயிறு இவைகளில் பஞ்சாக்கரம் பிரணவம் ஆன்மமந்திரங்களி லொன்றால் பத்தியோடு தரிக்கவேண்டும். அஃது சிவஞானத் துக்கடையாளம். சிகையிலிருக்கும் உருத்திராக்கம் பிரமம், காதுகளிலிருப்பன சிவம் சக்தி, பூணூலிலிருப்பன தேவர்கள் கைகளிலிருப்பன திக்குகள். கழுத்திலிருப்பன சரசுவதி அக்கினிதேவன் ஆகப் பாவிக்கவேண்டும். சகலவருணத்தவர்க்கும் சகல ஆச்சிரமங்களிலும் உருத்திராக்கதாரணம் அவசியம். துவஜர் மந்திரத்தோடும் மற்றையர் அஃதின்றியும் தரிக்கத்தக்கது. திரிபுண்டரம் உத்தூளநங்களில் துவேஷம், உருத்திராக்கந் தரியாமை ஞான முண்டாகாமைக்குக் காரணங்கள். * எந்தப் பிராமண சிரேட்டன் திரிபுண்டரத்தையும் உருத்திராக்கத்தையும் தரித்தவனாகவும் சுத்தனாகவும் இருக்கின்றனனோ அவன் சிராத்தத்தில் பந்தியைச் சுத்தம் பண்ணுகின்றனன். தேவர்களாலும் பூஜிக்கத்தக்கவன்.

(12) இவை பிரகத்ஜாபாலோபநிடதம் போலவே வாயுசங்கிதை புருடார்த்தப் பிரபோதம் காருடம் மானவம் பாத்மம் நாரதீயம் பராசரம் காந்தம் வாசிட்டலைங்கம் சூதசங்கிதை முதலியபுராணங்களாலும் வித்தரிக்கப்படுகின்றன. ஆங்கிகதிருதலோகாக்ஷியுங்கூறுகின்றது. புராணம் பதினெண்வித்தைகளி லொன்றுதலாற் பிரமாணமே. வேதஞ் சகல தருமங்களுக்கும் மூலம், தனக்கு வேறு பிரமாணத்தை வேண்டாது தானே பிரமாணமாவது. புருடவசனங்கள் அதன்முன்னில்லா. இதிகாச புராணங்களால் வேதப்பொருள் எடுத்துக் கூறப்படுகின்றது.

---

* திருநா "வெண்ணீறணியாராகில் — பெருநோய் கண்மிக கலியப்பெயர்த்துஞ் செத்துப், பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே"

வேதத்தை விரோதிக்கும் மிருதி ஜீவியாது. இவைகட்கு விரோதமாய் "பிராமணர்க்குத் தாமரைமணி, சூத்திரர்களுக்கு உருத்திராக்கம்" என்று நாரதஸ்மிருதி "ஆதலால் பிராமணர்க்கு உருத்திராக்கமாகாது" என்று கற்பிப்பது ஜீவியாது, ஜாபால சுருதிக்கும் புராணங்களுக்கும் ஏனைய மிருதிகளுக்கும் பெரியர் அநுட்டானத்துக்கும் விரோதமா யிருப்பதால்.

தசோபநிடதம் ஸ்ரீசங்கராசாரியார் பாடிய மியற்றியதாற் பிரமாணமெனில் சுவேதாசவதரோப நிடதத்துக்கும் அவர் பாடிய மியற்றி யிருக்கின்றனர், பதினொன்றைக் கொள்ளில் சகுணோபாசனை கைவல்யோப நிடதத்தை நீக்கி லில்லாமற் போம் (வாசுதேவோப நிடதத்தை நீக்கில் அடியோடு ஊர்த்த வபுண்டரமில்லாமற்போம்) ஆதலால் பிரமத்தை யறிவிக்கும் வேதத்தன்மையுள்ள வேதத்தை யநுசரித்த உபநிடத மனைத்தும் பிரமாணமே. வேதம் அதைத்தழுவிய உபநிடதங்கள் புராணங்கள் மிருதிகள் இதிகாசங்களால் பிரதிபாதிக்கப்பட்ட பஸ்ம உருத்திராக்கம் பிராம்மணராதியராற் றாரணஞ் செய்யத்தக்கன வென்பது சித்தாந்தம்.

---

## பூதிருத்திராக்கதூஷணகண்டநம்.

### நூல்.

இங்ஙனம் ஸ்ரீமான் தீக்ஷிதரவர்கள் பல சுருதிப்பிரமாணங்களானும் நன்னியாயங்களானும் நிரூபித்ததின் மேலும் அவை தீகோபிகந் தோர்த்தவ புண்டரத்துக்குப் போலி நியாயங்களால் மேன்மைகூற வெழுந்தவர்பாற் பயின்றவவர் சீடர் சில போலி யாக்ஷேபங்க ளெழுப்பினர். அவைமதிக்கத்தகாத வெற்றுரைகள் ஆதலிற் றீக்ஷிதரவர்கள் பொருட் படுத்திலர். அறிவின்முதிர்ந்தாருங் கணித்திலர்: ஆயினும் ஆக்ஷேப மென்றபெ

யர் மாத்திரத்தால் அறிவிலார் மயங்காவண்ணம் அவசியமான சில வாக்ஷேபங்களை யெடுத்துப் பரிகரிப்பாம்.

## பூர்வபக்கம் (1.)

"கலிநிஷித்தமான அக்கிநிஹோத்திரம்" "கலியில் 4400-வருடங்களின்மேல் அந்தணர் யாகாதி கன்மங்களையும் சந்நியாசத்தையும் ஆசரிக்கக் கூடாது" என்ற ஒருவசனத்தை ஆதாரமாக ஸ்மிருதிவசனமென நவின்று பிராமணர்க்கு அக்கிநிஹோத்திரம் விலக்கத்தக்கதென்றார்.

## சித்தாந்தம்.

அவற்றில் "கலிநிஷித்தமான அக்கிநி ஹோத்திரம்" என்பதால் அக்கிநி ஹோத்திரம் கலியில் நிஷித்தமென்று நிர்மாணித்து, அஃதின்றாகவே அக்கிநிஹோத்திர பஸ்பமும் அதன் தாரணமும் இன்றாம்: ஆகவே தமக்காதாரமாகக் கூடிய வாசுதேவோபநிஷத்தின் "அக்நிஹோத்ர [illegible]" என்று கோபீசந்தனத்தின்மீது "அக்கிநிஹோத்திர பஸ்மத்தால் உத்தூளநஞ் செய்க" என்ற வசனத்தை நழுவவிட்டு கோபீகந்தோர்த்தவ புண்டரத்தை மாத்திரம் நிலைப்படுத்திக் கொள்ள வெண்ணினார்.

அக்கிநி ஹோத்திரத்தை விடுக்கில் அநாஹிதாக்கி நித்வமென்னும் உபபாதக தோடஞ்சித்திக்கும்; அவ்வுப பாதகிக்கு யஜன யாஜன (யாகஞ் செயல் செய்வித்தல்) மான இரண்டுகருமங்களுமின்றாம். அவைக ளின்றாகவே "அக்நிஹோத்ரபலா வேதா:" "வேதங்கள் அக்கிநிஹோத்திரத்தைப் பிரயோசனமாகவுடையன" என்ற பாரதவசனப்படி பிரயோசன மின்மையால் வேதாத்யயந அத்யாபககருமங்களு (வேதம்ஓதல் ஓதுவித்தல்) நிட்பலமாம். ஆகவே வேதங்கற்பாரும் கற்பிப்பாரு மின்றாம் "வேதோகிலோ தர்மமூலம்" "தருமத்துக்கு மூலம்வேதம்" என்ற வசனத்துக்கு மறுதலையாய்த் தருமப்பிர விருத்தியின்றாய் ஆற

கருமங்களுமற்று அப்பிராமணராவர். அவைதீக வேறுநூல்க ளால் தானப் பிரதிக்கிரக கருமங்கள் உண்டாமென்று வாதிக் கினும் ஏனைநான்கு கருமங்களு மின்றாய் விப்பிரத்வஞ் சித்தி யாமற் போம். "தருமத்துக்கு மூலம்வேதம்" வேதமுழுதுங் கூறுவதும் அதன்பயனும் அக்கினிஹோத்தரம். புராணங்க ளும் இதிகாசங்களும், வியாசர் கௌதமர் ஆரீதர் மாதவர்கா ருஷ்ணுஜினி பிரஜாபதி வசிஷ்டர் யாக்கியவல்கியர் ஸ்மிருதி களும், ஆபஸ்தம்ப சூத்திரமும் பலவிடங்களில் துவிஜனுக்கு அக்கினிஹோத்திர மவசியமென்று கூறுகின்றன. பூர்வபட்சிக் குப் பிரமாணமாகிய வாசுதேவோப நிடதமும் "ஸஸவெ யஜ்ஞெ யஜ்ஞராஜிதொ ஹவதி"என்று எக்கியங்களைப் புகழ்கின்றது.

(1) "யாவஜ்ஜீவமக்நிஹொத்ரம் ஜுஹுயாத், யாவஜ்ஜீவம் தர்ஶபூர்ணமாஸாப்யாம் யஜேத"

வாஜசநேயசாகை.

(2) "யாவஜ்ஜீவமக்நிஹொத்ரம் ஜுஹோதி"

(3) வீரஹா வா ஏஷ தேவாநாம் யோऽக்நிமுத்வாஸயதே"

(யஜுஸ்-சம்ஹிதை-காண்டம்-1. பிரச்நம்-5.)

(4) யஸ்யாஹிதாக்நேரக்நிஹோத்ரம் ஹவிர்வைஶ்வாநரம் ...

(1) "ஆயுள்காறு மக்கினிகோத்திரஞ் செய்வாயாக. ஆயுள்கா றும், அமைபூரணைமாச இட்டிகளை யஜிப்பாயாக".

(2) "ஆயுள்காறும் அக்கினிகோத்திரஞ் செய்கிறான்".

(3) "யாதொருவன் தேவர்களுக்கு(ப் பிரயோசனமான) அக் கினியை விட்டு விடுகிறானோ அவன் வீரஹத்தி செய்தவனல் லவா"?

(4) "எவன் பிதா அல்லது பிதாமகனாவது சோமபானஞ் செய்யவில்லையோ அவன் விராத்தியன்".

இவைமுதலிய பிரத்தியக்ஷ சுருதிகளும் கிரதுக்கள் செய்ய வேண்டிய அவசியத்தையும் விட்டவர்க் குண்டாம் தோடத்தையும் வற்புறுத்திக் கூறுகின்றன. *

வைதிகோத்தமர் அநுட்டானமு மிதுகாறு மங்ஙனமேயுளது. இவை யனைத்துக்கும் விரோதமாக "கலிநிஷித்தமான அக்கினிஹோத்தரம்" என்ற ஒரு ஸ்மிருதியின் கலிவிஷய அருத்தவாத வாக்கிய மொன்று பலம் பெறுமா? அநந்த பிரபலசுருதி வசனங்களையும் ஸ்மிருதிகளையும் புராண இதிகாசங்களையும் தழுவாமலும் சிஷ்டாசார விரோதமாயு மிருப்பதால் அஃது நிஷ்பலம். இவையன்றிப் பகவத்கீதையில் "அக்நிர்தேவோ த்விஜாதீநாம்" விப்பிரர்களுக்கு அக்கினியில் (தெய்வம்) இருக்கின்றது" என்றும் எக்கியம் அவசியஞ் செய்யத்தக்கது செய்யாவிடிற் றோடமுண்டாம் என்றுங் கிருஷ்ணபிரா னருளிச் செய்திருக்கின்றனர். பாரதம் அசுவமேத பருவத்தில் "யஜ்ஞார்த்தம் த்விஜா: ஸ்ருஷ்டா:" முதலிய சுலோகங்களால் "பிராமணர் பசுக்கள் பொன் வெள்ளி ஓட்டி முதலியவைகள் எக்கியத்திற்காகவே சிருட்டிக்கப் பட்டன ஆகையால் அந்த எக்கியத்தைச் செய்யாவிட்டால் பாவஞ் சம்பவிக்கும்" என்று கூறப்படுகின்றது.

பாரதம் ஆநுசாசனபருவம்.

நாஸ்தி யஜ்ஞஸமம் தானம், நாஸ்தி யஜ்ஞஸமோ விதி:।
ஸர்வகர்மஸமுத்தேசோ, தேவி யஜ்ஞஸமாஹித:।

எக்கியத்துக் கொப்பானதானமில்லை எக்கியத்துக் கொப்பான கருமமில்லை. சகல கருமங்களின் முழுக்குறிப்பும் எக்கிய மென்று முடிவுசெய்யப்பட்டிருக்கின்றது. என்று கூறுகின்றது.

---

* திரு - ஞா - "கற்றுங்கெரியோம்பிக் கலியைவாராமே செற்றார்வாழ்".

அன்றியும் பூர்வபக்ஷிக் கங்கீகாரமானதும் "கலௌபாராஶரா ஸ்ம்ருதா:" என்று கலியுகத்துக்கேன்று விசேடமாய்க் கூறப்பட்ட பராசரஸ் மிருதியே ஆசாரகாண்டத்தில் எக்கியத்தை விதிப்பதோடு பிராயச்சித்த காண்டத்தில்.

"அக்நிகார்ய ப்ரப்ரஷ்டா: ஸந்த்யோபாஸந வர்ஜிதா:।
வேதம் சைவாநதீயாநா: ஸர்வே தே வ்ருஷலா: ஸ்ம்ருதா:।

"அக்கினிகாரியத்தினின்று ஒழிந்தவர்களும் சந்தியாவந்தனம் விட்டவர்களும் வேத மோதாதவர்களுமான சகலரும் சூத்திரர் ஆகின்றனர்" என்று அக்கினிகாரியஞ் செய்யாத துவிஜர் சூத்திர ராகின்றனர் என்று கூறுவதால் கலியுகத்திற் கூடாதென்பது மொவ்வாது.

இனி இவ்வசனங்களை யுகாந்தரவிஷயமென்று போக்குக் கூறவுமேலாது: அங்ஙனஞ் சுருதிகூறுமையானும், சுருதிக்கு விரோதமாகிய மானுடவசனம் சுருதிவசனங்களுக்கு முன்னிலை பெறுதாகையானும், அக்கினி ஹோத்தராதி கருமங்களை பிராமணர்க் கின்றியமையாக் கருமமாக அநந்த சுருதிவாக்கியங்களுந் கோஷிப்பதாலும், சகலவேதோபப்ருஹ்மித ஸ்மிருதி புராணங்களை யோதி யுணர்ந்த வைதீக சிரேஷ்டர் இதுகாறும் அக்கினிஹோத்தர முதலிய சத்கருமங்கள் புரிதலும், சந்நியாசம் பெறுதலும் அநுட்டானத் தன்மையானும், கலியுக ஸ்மிருதியாகிய பராசரஸ்மிருதியே அக்கினிஹோத்தரஞ் செய்யாதவரைச் சூத்திரர் எனக் கூறுவதாலும், பிராமணர்க்குரிய ஷட்கருமா என்ற பெயர்க்கே விரோதமாவதாலும்.

இனி அவ்வாக்கியத்துக்குக் கதியாதெனில் முன்யுகங்கள் புண்ணியயுகங்கள், அவைகளில் எத்தகையரிய புண்ணியங்களுஞ் செய்தல் சுலபமாம். கலியுகம் பாவயுகமாதலால் அத்தகையுத்தம புண்ணியகருமங்கள் செய்தலருமையென் றுணர்த்

துவான் கூறியதாம். அன்றேல் சுருதிவிரோத மாவதால் கற்பனையாம். இவையனைத்துக்கும் விரோதமாய்ப் பிராமணர்க்கு இன்றியமையாத முக்கிய கருமமாகிய அக்கினி ஹோத்திராதி கருமங்களைத் தூஷித்து பிராமணத்துவத்துக்கும் ஆசைப்படுவது தன்நாயகனைக் கொன்றுவிட்டு மாங்கல்யாதியா பரணாலங்காரத்தோடு சுமங்கலியாகவு மிருக்க விச்சித்தலையொக்கின்றது.

## பூர்வபக்கம் (2.)

"கௌதமசூத்திரம் எல்லாவைதிக ஜநங்களாலும், அநுட்டிக்கப் படாவிட்டாலும் உத்தரதேசத்தார் அநுட்டிக்க எமது ஆசாரியர் உத்தரதேச யாத்திரைசெய்த காலத்துக்கண்டனர்". என்றனர்.

## சித்தாந்தம்.

அந்நூல் வேதவிரோதமாயும்அநந்த ஸ்மிருதிகளுக்குச் சம்மதமல்லாததாயும், வைதீக சிரேஷ்டரால் அபரிக்கிரகமாயும் வழங்காத நூதனமாயும் இருப்பதாலும்; கௌதமர் சிவபக்தாக்ரேசரும், டஸ்மத்திரி புண்டரதாரியும் பிரசித்தமாய் வழங்கிவருமவர் சூத்திரம் 8-வது அத்தியாயத்தில் பஸ்மோத்திருஷ்டம் கூறும் அதர்வ சிரசுருதியைப் பாவநிவர்த்திக்காகஜ் ஜபிக்கும் மந்திரமாகக் கணக்கிட்டவரு மாதலால் அவர் செய்தாரென்பது கற்பனை. அப்பிரசித்தமான அவைதீக கற்பனநூலொன்றின் பலத்தைக்கொண்டு அநாசார மொன்றை நிலைப் படுத்துவதைக் காட்டிலும் பிரசித்தமும் உள்ளதும் சுருதி ஸ்மிருதியாதி அநந்த சாஸ்திர சம்மதமும்வைதீக சிஷ்டாசாரமுமான பஸ்மதாரணத்தை நிலைப்படுத்துவதில் எவ்வளவு நியாயபலமும் பிரமாண சகாயமு மிருக்குமென்பதைச் சிந்தித்துக் குணப்படுக.

## பூர்வபக்கம் (3.)

"இராமதாரக மந்திரத்தைக் காசியிற் சங்கரன் ஜபிக்கிறார்" என்ற ராமதாபினி யுபநிடதம் "விண்டுவுக்குச் சங்கரனுமோர்

வத்தன்" என்ற ஸ்ரீபாகவதம் ஆதிகிரந்தங்களைப் பரியாலோசிக்கில் சிவன் விஷ்ணுபக்தர்களுக்குச் சிறந்தவர் என்பது திண்ணம். ஹரிபக்த சிகாமணியான சிவனுடைய பக்தர் கௌதமராகில் அவர் ஊர்த்தவபுண்டர தாரணத்தைப் புகழ்வது அவர்கருத்திற் கிசைந்ததே" என்று வரைந்தனர்.

சித்தாந்தம்.

இவர் கூறுகிறபடி சிவன் விஷ்ணுபக்தரானால் சிவன்விண்டு பக்தர் புண்டரத்தைத் தரிக்கவேண்டும், அங்ஙனம் சிவபிரான் ஊர்த்தவ புண்டரத்தைத் தரித்திருப்பதாய் ஒரு நூலாலுங் கேட்கப்படவில்லை. விண்டு சிவபிரானது பக்தர் என்பதற்கும், விண்டு பஸ்மத்திரி புண்டரந் தரித்திருப்பதற்கும், உமக்குப் பிரமாணமாகிய.

இராமரகசியோபநிடதம்.

"ராமம்-ஹஸ்மோத்தூலிதஸர்வாங்கம்" "பஸ்மம் பூசப்பெற்ற சகல அங்கங்களையுடைய இராமனை".

திருவாய்மொழி.

"கரியமேனிமிசைவெளியநீறுசிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன்"

நான்காம்பத்து ஐந்தாந் திருவாய்மொழி-பாட்டு-6.

"உடையார்ந்தவாடையன்கண்டிகையனுடைநாணினன்
புடையார்பொன்னூலினன்பொன்முடியன்மற்றும்பலகலன்"

பத்து-3. திரு-7. பாட்டு-4.

என்று விண்டுவுக்கே விபூதிஉருத்திராக்கதாரணத்தையும்.

திருவாய்மொழி.

"நீறுசெவ்வேயிடக்காணினெடுமாலடியாரென்றோடும்"

பத்து-4. திருவாய்-4. பா-7.

"தவளப்பொடிக்கொண்டுநீரிட்டிடுமின்தணியுமே"
"தணியும்பொழுதில்லைநீரணங்காடுதிரன்னைமீர்

பிணியுமொழிகின்றதில்லைப்பெருகுமிதுவல்லான்
மணியிலணிநிறமாயன்றமரணிநீறுகொண்டு
அணியமுயலின்மற்றில்லைகண்டீரிவ்வணக்குக்கே”

பத்து-4. திருவா-6. பா-7.

என்று விண்டுபக்தர்களுக்கு விபூதி தாரணத்தையும், அத்தாரணம்பிணி யொழித்தலையும் கூறுதலை ஊகிக்கில் விண்டுசிவபிரானது பக்தர்என்று தெளிவாம்.

இராமாயணம்.

“த்⁴யாத்வா ரகு⁴பதிம் க்ருத்³த⁴ம் காலாநலஸமப்ரப⁴ம் ।
பீதக்ருஷ்ணாஜிநத⁴ரம் ப⁴ஸ்மோத்³தூ⁴லநவிக்³ரஹம்”

“காலாக்கினிபோன்ற கோபத்தையுடையவரும், பொன்மயமான கிருஷ்ணாசனத்தைத் தரித்தவரும் பஸ்மோத்தூளனஞ் செய்யப்பெற்ற வடிவத்தை யுடையவரும் ஆகிய இரகுபதி (இராமனை)யைத் தியானித்து”.

அத்தியாத்மராமாயணம்.

“ஸ்வர்ணவர்ணஜடாபா⁴ரம் ஸாக்ஷாத்³ருத்³ரமிவாபரம்”
“ப⁴ஸ்மோத்³தூ⁴லிதஸர்வாங்க³ம் த்³ருஷ்ட்வா காமவஶம் க³தா”

“பொன்மயமான சடையை யுடையவரும், சாக்ஷாத் உருத்திரனைப் போன்றவரும் பஸ்மோத்தூளனஞ் செய்யப்பெற்ற சகல அங்கங்களை யுடையவரும் (ஆனஇராமனை) பார்த்துக் காமமடைந்தனள்”.

பஸ்மஜாபாலோபநிஷத்து.

ஸவ்யே ஹஸ்தே ப்³ரஹ்மமந்த்ரை ருத்³ராக்ஷாப⁴ரணம் க்ருத்வா
ஶிவோ நித்யமேவ ஶ்ரீயாதி । தத்³ — த³க்ஷிணபா³ஹௌ
ஶிவலிங்க³ம்।

சகலரும் பஸ்மோத்தூளனஞ் செய்யப்பட்ட அங்கங்களை யுடையவரும், உருத்திராக்காபரண முடையவர்களும், அஞ்சலி கூப்பியவர்களும் ஆய்எப்பொழுதும் தியானிக்கின்றனர், அப்படித் தியானிக்கின்றவர்களில்,—தென்றிசையில் விஷ்ணு (தியானித்துக்கொண் டிருக்கின்றனர்.)

## கூர்மபுராணம்.

"கண்ணன்வெண் பூதிபூசிக்கண்டிகைமாலைசாத்திப்
புண்ணியத்திங்கள்வேணியானிருபாதம்போற்றி"

இவற்றால் மூலவிண்டுவும் இராமன் கிருஷ்ணபிரான் என்னும் விண்டு அவதாரங்களும் பூதிருத்திராக்ஷதாரண முடையரென்று விளங்கு கின்றது.

## மகாபாரதம் - சாந்திபருவம்.

ஆயுஷ்காமோயவா ராஜந் ஐஶ்வர்யகாமோயவா நரஃ।
நித்யம் வை தாரயேத் பஸ்ம மோக்ஷகாமீ ச வை த்விஜஃ।

"தருமராஜனே? ஆயுள்விருத்தியை விரும்பு கின்றவனும், செல்வத்தை இச்சிக்கின்றவனும், மோக்கத்தை யடைய அவாவு கின்றவனும் ஆகியதுவிஜன் நாடோறும் நீற்றையே தரித்தல் வேண்டும்".

## சூதசம்ஹிதை.

ஶிவேந விஷ்ணுநா சைவ ப்ரஹ்மணா வஜ்ரிணா ததா।
தேவதாபிஃ ஸமஸ்தாபிஃ த்ருதம் பஸ்ம த்ரிபுண்ட்ரகம்।

## முதலியசுலோகங்களுக்குத்தமிழ்க்கவி.

மாலயனிந்திரன் மற்றையமரர் மலர்மகளிர்சசி மற்றைவாணிக், கோலமடை வாரியக்சர் சுந்திருவரரக்கர்குல வசுரர்வேதச், சீலமுனி வரர்மற் றேரிவரு ளருந்தவ முடையீர் திருவெண்ணீறு, சாலவுமுத் தூளனமுப் புண்டர நாடொறும் போற்றித் தரியார் யாரோ.

இவைபஸ்மஜாபாலோபநிஷத்துக்த பப்பிரமணமாயின.

பஸ் (வறு-எரி)=நீற்று (எரி=நெருப்பாற்சுடு).

என்பதுபொரு ளாதலால் வடமொழி தென்மொழி இரண்டினும் ஒருபொருட் பகுதிகளினின்றே பஸ்மம் (பசிதம்) நீறு என்ற சொற்களுண்டாயின.

தல்விகுதி புணர்ந்துகெட்டமுதனிலைத் தொழிற்பெயராகிய பூண், பேறு, சூடு, முதலிபனபோல நீற்றப்படுபொருளை நீறு என்பாரும், வீடுஎன்பதுபோல நீறுதற் றன்மையால் நீறு என்பாரும், தேறு. ஈறு, என்பனபோல பாசமுதலியவற்றை நீறுபடுத்தும் வினைமுதற்பொருளை நீறு என்பாரும் உளர். முக்கண்ணன் என்பது காரணங் கருதியபொழுது கணபதிமுதலியர்க்காயினும் காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய்ச் சிவபிரானுக்கு ஆதல்போல நீறுஎன்பது காரணங் கருதியபொழுது சாம்பல் முதலியதுக்காயினும் காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் விபூதிக்கே ஆதலால் காரண இடுகுறிப்பெயராம். இதுபற்றியே பிங்கலந்தையார் சாம்பலை "அடலைவெண்பலி சாம்பலாகும்" என்றுவேறு பிரித்துக்கூறினர். பிங்கலந்தையார் ஒருசொற்பல் பொருள்வகையில் நீறுஎன்றசொல்லைப் படித்திலர். (நீற்றப்படுகாரணம்பற்றி) சுண்ணத்துக்கும் நீறு எனப் பெயருரைத்தனர்; அன்றிப்பராகம் (பூந்தாதின்றூள்) புழுதி, பூழ்தி, துகள், இவைகளுக்கு நீறுஎன்ற பதத்தைப் பெயராகவும் படித்திலர். நீறணிந்தனன் எனில் விபூதியணிந்தனன் என்று பொருள்கோடல் வழக்கு, நீறுமத சம்பந்தமாகத் தரிக்கத்தக்க பொருளாதலின். தேவாரம், திருநா. மெய்ப்பால் வெண்ணீறணிந்த மேனியானை "நீறுமெய் பூசவல்லானும்" திருமொழி=6-பத்து. 7-திரு. "உடலம்நீறும் பூசியேறூரு மிறையோன்" திருமொழி=10-பத்து. திரு-1, "சுடலையில் சுடுநீறணமர்ந்ததோர்" திருமழிசை, திருச்சந்தம்-7. "முண்டநீறன்"

திருமொழி-1. பத்து. திரு-5. "சுடுநீறுமெய்யிற்பூசி" முதலிய வற்றுற் காண்க. சூடாமணி நிகண்டினும் நீறுஎன்ற சொல்பல் பொருட் பெயர்த்தொகுதியில் படிக்கப்பட்டின்று.

ஆயினுஞ் சிலவாசிரியர் தூள்போல் நுண்பொடிகளாயுள்ள பூந்தாதின் பொடிக்கும் தூள்என்று பெயர்வழங்கல்போல நீறு போன்ற நுண்பொடிகளாகிய பராகம் புழுதிகளையும் நீறுஎன்ற பெயரால் வழங்கினர். அவற்றுட் பராகம் = பூந்தாதுப் பொடி. புழுதி=தெரு வீடுமுதலிய விடங்களில் படிந்துகிடக் கும் இலைசெத்தை முதலியவற்றின்துகள் அல்லது தூசி. இவை அலகிட்டுக் கூட்டிவாரிக் குப்பைக்கிடங்கிற் போடப்படும் அசுத் தப்பொருள்கள். இஃது.

கூர்மபுராணம் "விளக்கிபதூளிவந்து மேலடையநிற்றல்— தீதாம்" ஆசாரக் கோவை.

துடைப்பம் துகட்காடு புல்லிதழ்ச்செத்தற்
கருங்கலம் கட்டில் கிழந்ததனோ டைந்தும்
பரப்பற்க பந்த ரகத்து.

மதுரைக்காஞ்சி அடி-148. "பலபுரவி நீறுகைப்ப" நச்சினர்க் கினியருரை. ஓடுகின்ற விசையால் துகள்களை யெழுப்ப.

சிறுபாணாற்றுப்படை. அடி-200. "அண்ணல்யானை அருவிது களவிப்ப நீறடங்கு தெருவினவன் சாறயர்மூதூர்".

(ந-உரை.) தலைமையை யுடையவாகிய யானைகளின்மத அரு வி எழுந்ததுகளை அவிக்கையினுலே புழுதியடங்கின தெருவினை யுடையவூர்.

இனிச்செம்மண் புழுதி கரம்பைப்புழுதி என்பனவும் அந் நிலங்களிற் காற்றுப்பற்றி யெழுப்ப வெழும்பும் தூசிகள், அல் லது அவற்றின் நுண்டுகள்கள் ஆம். அங்ஙனமன்றி மண்ணுக்குப் பெயராகாது. புகையிலைத்தூள் சுக்குத்தூள் மஞ்சட்பொடி

கற்பொடி யென்பன புகையிலை சுக்கு மஞ்சள்கல்களுக்குப் பெயராகாமைபோல. மண்ணின்பெயர்களுட் படிக்கப்படு மின்று. துகளென்பது உலகிலுள்ள வெல்லாக்கட்டிப் பொருள் களின் தூசிக்குப் பெயராதலின்.

உண்மையிங்ஙனமிருக்க திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி பன்னீராயிரப்படி யென்ற வியாக்கானங்கள்செய்த ஸ்ரீவைஷ்ண வாசிரியர்கள் தங்கள் வியாக்கானங்களில் "வெளியநீறுசிறி தேயிடும்" "நீறுசெவ்வேயிடக்காணின்" "தமரணிநீறுகொண்டு" என்ற இவைகளில் "வெளியநீறு" என்பதற்கு "அஞ்சனசூரணம்" என்றும் "கற்பூரசூரணம்" என்றும் உரைவரைந்திருக் கின்றனர். வெள்ளைஎன்றசொற்கு பிங்கலசூ. "பலதேவனும் வெண்பாவும் வெளிறும், வெள்ளை வெள்ளாட்டு மறியுமதுவுஞ் சங்கும் வெள்ளையென்று சாற்றும்" என்று பொருள் கூறலால், அஞ்சனம் கற்பூரம்என்ற பொருள்களின்று. அஞ்சனமென்பதற்கு (பிங்க—சூ.) "காளநிறனுமையுந்திசைகளின்—யானையிலொன்று மஞ்சனமாகும்" எனப்பொருள் கூறுகின்றது. ஆதலால் வெளியஎன்பதற்கு கருப்புஎன்று பொரு ளுரைத்ததுமுற்று மொவ்வாது. அஞ்சனமென்பதற் குமைஎன்று பொருட் கொள்ளினும் கண்ணுக்கு மையிடலன்றி மேனியின்மையிடல் வழக்கின்கண் ணின்மையிற் பொருந்தாது. ஆகலின் விபூதி யென்று பொருட்கோடலே நியாயம் அஃது (திருவாசகம். அச்சப்பத்து) "வெளியநீறுடுமேனி வேதியன்" என்று சிவபிரானைக்கூறிய சுருதியானு மோர்க.

"நீறுசெவ்வேயிடக்காணின்" என்பதிலுள்ள நீறுஎன்பதற்கு பஸ்மம் எனப்பொருளுரைத்து விரகப்பித்தேறி பஸ்மந் தரித்தவர்களைக் காணினெடுமாலடியா ரென்றேடும் என்று போகிக்குக்காட்டினர். உண்மையங்ஙனமன்று.

(பெருமாள்) "அவதாரங்காட்டி மறைந்தபடியாலே ஆழ்வார்நாயகி தன்மையை யடைந்து மோஹித்து ஸம்பந்தி ஸத்ரு

ஸவஸ்துக்களைப்பார்த்துக் கதறுகிறளென்று தாய் சொல்லுவ தாக வருளிச்செய்கின்றார்" என்ற அவதாரிகையின்கீழ்.

கோமளவான் கன்றைப்புல்கிக் கோவிந்தன் மேய்த்தன வெ ன்னும், போமிள நாகத்தின் பின்போ யவன்கிடக்கை யீதென் னும், ஆமளவொன்று மறியே னருவினை யாட்டியேன் பெற்ற, கோமளவல்லியை மாயோன் மால்செய்து செய்கின்ற கூத்தே.

கூத்தர் குடமெடுத்தாடில் கோவிந்தனு மெனுவோடும், வா ய்த்த குழலோசைகேட்கில் மாயவனென் றுமையாக்கும், ஆய்ச் சியர் வெண்ணெய்கள் காணிலவ னுண்டவெண்ணெ யீதென் னும், பேய்ச்சிமுலை சுவைத்தார்க் கென்பெண்கொடி யேறிய பித்தே.

ஏறியபித்தினேடெல்லாவுலகுகண்ணன்படைப்பென்னும்
நீறுசெவ்வேயிடக்காணில்நெடுமாடியாரென்றேடும்
நாறுதுழாய்மலர்காணில்நாரணன்கண்ணியீதென்னும்
தேறியுந்தேறுதுமாயோன்திறத்தினளேயித்திருவே.

மேற்கவிகளிற் கூறினவனைத்தும் அவதாரிகைக்கிணங்கப்பெ ருமாள் சம்பந்தமான பொருள்களுக்குச் சமமானபொருள் களைக் கண்டழுங்கியதாக விளக்க அவைகளின் நாப்பண்ணுள்ள நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியா ரென்றேடும்" என்ற ஒன்றைமாத்திரம் விரோதப் பொருளைக் கண்டழுங்கியதாகக் கொள்ளவேலாது.

இனித் "தமரணிநீறு" என்பதைப்பற்றிச் சற்று விசாரிப் பாம். இஃது 4-ம் பத்து, 6-ந்திரு இ லுரைக்கப்பட்டுளது. 4-ந் திருஇல் நம்மாழ்வார் "நாயகி தன்மையை யடைந்து ஸம்பந்தி ஸத்ருஸவஸ்துக்களைப் பார்த்துக் கதறுகிறளென்று தாய்சொல் வதாக" "நீறுசெவ்வே இடக்காணில் நெடுமாலடியா ரென்றேடும்" என்று பெருமாளடியவர் தாரணநீறு என விளக்கினர். பெருமாளைத் தரிசித்ததாய்க்கூறும் 5-ம் திருஇல் "கரியமேனி

மிசைவெளியநீறு சிறிதேயிடும்" என்று பெருமாள் தாரணமுந் திருநீறென்றனர். வெறிவிலக்காகக்கூறிய 6-ந் திருஇல், ஆடுபலியிடல் முதலிய வற்றால் அணங்குக்கு வெறிவிலகாது, பெருமாள் திருநாமங்கூறி வெண்பொடி (தவளப்பொடி) யென்னுந் திருவெண்ணீற்றைத் தரிக்கில் விலகும் என்றுணர்த்தும் கூற்றாக.

"கவளக்கடாக்களிறட்டபிரான்திருநாமத்தால்
தவளப்பொடிக்கொண்டுநீரிட்டிடுமின்தணியுமே"
"மணியிலணிநிறமாயன்றமரணிநீறுகொண்டு
அணியமுயலில்மற்றில்லைகண்டீரிவ்வணங்குக்கே"

என்றுரைத்தனர். இப் பாசுரங்கள் முற்கூறின வற்றுக்கநுகுணமாகத் தமக்குடன்பாடல்லாத விபூதியையே குறித்தலிற் பெரிய வாச்சரன்பிள்ளை முதலிய ஸ்ரீவைஷ்ணவ உரையாசிரியர் அதை மறுக்கக்கருதி "ஆழ்வார் மோகிக்க இதரதேவதாவேசமென்று க்ஷுத்ரதேவதாராதனம் பண்ணுவதைப் பரிகரித்து பகவந்நாம சங்கீர்த்தனமும் ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூள்களும் இதற்குப் பரிகாரமென்று ஆப்தசகிசொல்ல அப்படியே பரிகாரம்பண்ண மோகந்தீர்ந்ததை யருளிச்செய்கிறார்" என்ற அவதாரிகையில் "ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாததூள்கள்" என்ற வொவ்வாத விடயத்தைக் கற்பித்துச்சேர்த்து அதற் கிணங்க "தமரணிநீறு" என்பதைத் "தமரடிநீறு" என்று திருத்தியு மிருக்கின்றனர். உண்மையில் "தமரடிநீறு" என்றே ஆழ்வார் சொல்லியிருக்கும் பக்ஷத்தில் முற்கவியிலும் "தமரடிநீறு" என்றாவது அப்பொருள் பயக்கும் வேறுசொற்களாவது கூறியிருப்பர். பழைய வேட்டுப் பிரதிகளிலும் "தமரணிநீறு" என்றே காணப்படுகின்றது.

"தமரணிநீறு" எனில் "நீறுசெவ்வே யிடக்காணில் நெடுமாலடியா ரென்றோடும்" "தவளப்பொடிக் கொண்டுநீரிட்டிடு

மின்" என்ற வாக்கியங்களுக் கிணங்குகின்றது. "தமரடி நீறு" எனில் தவளப்பொடியென்ற முற்கவிக்கு விரோதப்படு கின்றது. எங்ஙனமெனில் அடியர் பாததூள் வெள்ளை யென் றெங்ஙனங் கூறுவது. அடியவர் கரம்பை செம்மண் மஞ்சள் மண் வெள்ளைமண் நிலங்களில் நடக்கில் அவர் பாததூளும் அவ்வம் மண்ணிறத்துகள்களேயாம், சேற்றில் நடக்கிற் சேது தான் படிந்திருக்கும், அவர் மிதித்த செம்மண் வெள்ளைமண் ணுகாது ஆதலால் அடியவர் அடித்தூளனைத்துந் தவளப்பொடி யாகவே இருக்குமென்ற கூற்றுப்பயனற்றதாம். தவளப்பொ டியை வெண்ணீறு என்றும் "தமரடிநீறு" என்பதை அடியர் பாததூள் என்றுங்கூறில் இருவேறு பொருளாவதால் ஸ்ரீவை ஷ்ணவ ஸ்ரீபாததூள் என்ற அவதாரிகைக்கு விரோதப்படு கின்றது. இனித் "தமரடிநீறு" என்பதற்கு "தவளப்பொடி" யென்று ஸ்ரீவைஷ்ணவ உரையாசிரியர் எழுதிய வியாக்கான மும் அவதாரிகைக்கு ஒவ்வாததாகின்றது. ஆதலால் "தமரடி நீறு" என்று திருத்தியும் அவர்கருத்துப்பயன் பெறுமற்போ யிற்று. இது காறும் பேய்பிடித் தவர்களுக்குத் தெய்வத் தைத் தியானித்து விபூதியைத் தரித்தலன்றி ஸ்ரீவைஷ்ணவர் கால்மண்ணை அஷ்டாக்கர ஜெபஞ்செய்து தரித்தல் ஸ்ரீவைஷ் ணவர்களுக் குள்ளாவது வழக்கமுளதா, மனச் சான்றுக்குவி ரோதமின்றிக் கூறுமின். அங்ஙோ பிடிவாத மெற்றுக்கு பேய் முதலிய பிணியனைத்துக்கும் அபிமந்திரித்திடுவது விபூதியல் லவா அதனலன்றோ காப்பு (இரக்ஷை) யென்றபெயர் அதற் கிடப்பட் டிருக்கின்றது.

"தவளப்பொடி" யென்பதற்கு ஆழ்வார் முன் "வெளிய நீறு" என்றுரைத்த விபூதியென்றேபொருள். இவ்வுண்மை யை. பிங்கலந்தை "பூதியோமப்பொடி விபூதிகாப்புப், புண் ணிய சாந்தம் வெண்டாது திருநீறே" (வெண்டாது=வெண் பொடி) எனலாலும், திருக்கோவையார் "தவளத்த நீறணியுங்

தடந்தோளண்ணல்" திருவாசகம் "விடையாய் பொடியாடி" "வெண்ணீறணிகலாதவர்" தேவாரம் திரு. ஞா. "சுடலைப்பொடிப்பூசி" "பொடியணிமார்பினர்" திரு. நா. "பொடியேறுதிருமேனி" "பொடிக்கொண்மேனி" முதலிய அநந்தபிரயோகங்களாலு மோர்க.

மேற்போந்த நியாயங்களால் விஷ்ணுதாரணம் பஸ்மமென்றும் இவ்வாழ்வார் காலம்வரை வைஷ்ணவர் விபூதிதாரணஞ் செய்துவந்ததோடு தம்பெருமாளுக்கும் பஸ்மதாரணமே புரிந்துவந்தனர் என்று நன்குவிளங்கும்.

இவை இங்ஙனமிருப்பச் சித்திரோர்த்தவ புண்டரிகளிற் பலர் தங்கள் உரையாசிரியர் கூறியபொருட் பொருந்தாமையோர்ந்து தாபிக்கவெண்ணித் திருவாய்மொழியிற் கூறப்படும் நீறு என்றசொற்கு வெள்ளைமண்ணென்றே பொருளென்றுரைத்து மகிழ்கின்றனர். சகல பொருட்களின் தூளுக்குப் பொதுப் பெயராகிய நீறு (புழுதி) என்றசொற்கு வெள்ளை மண் (நாமக்கட்டி) அல்லது மஞ்சள்மண் (கோபீ) என்றபொருட்கள் எங்ஙனம் பொருந்தும். நீறு=பஸ்மம், நாமக்கட்டி= மண். பஸ்மத்தை மண்ணெனிலொப்பு வதியார். இங்ஙனமிருக்க நீறு என்ற பதம் வெள்ளைமண் மஞ்சட்பொடி (திருச்சூரணம்) என்ற இரண்டு பொருள்களையுமுடையதாக வெங்ஙனமாம்.

தூளாயிருந்தமண்ணே கட்டியாயிருக்கின்றது, ஆதலால் நீறு (புழுதி) என்ற பதம் வெள்ளைமண் (நாமக்கட்டி) என்றே கொள்வதெங்கள் சம்மதமெனில்; இரும்பு கல் மலை கரம்பைட் மண்கட்டி முதலியனவும் பலவணுக்கள் கட்டியாய்ச் சேர்ந்தனவே யாதலால் அவைகளை நீறு என்பாரைத் தடுப்பவர்யார். அன்றியும் பிரபஞ்சமனைத்தும் பஞ்சபூதவடிவம். அவைகட்கு நித்தியவடிவம் பரமாணுரூபமாதலால் உலகத்துள்ள சகலபொ

ருட்களும் நீறெனப்பட்டு வரம் பின்றிப்போம். ஆதலால் வெள்ளை மண்ணை (நாமக்கட்டியை) ஆதாரமின்றி நீறெனல் சால்பன்று.

அன்றியும் தெய்வத்தையும் தேவகட்டளையாகிய வேதத்தையும் உபநிடதத்தையும் அவைகளின் கருத்தை யொத்துக்கூறும் ஆன்றோர் மொழியையும் நம்பிநடத்தலே ஆத்திகர்க் கழகு. வேதப் பிரமாணத்தைத் தழுவாது இடைப் பட்டோர் கூறும் வார்த்தையை நியாயமின்றி நம்பி அதில்தாம் வைத்தவபிமானத்தைச் செலுத்தமுயலில் ஜீவர்களின் புண்ணியபாவகன்மங்களுக்குப் பயனளிப்பவன் சருவலோக நாயகனே யன்றி இடைப் பட்டாரும் ஜீவனது நியாயமற்ற வபிமானமு மன்று. ஆகையால் அபிமானத்தைவிடுத்து உண்மையைப் பின்பற்றலே அழகு. வேதோபநிடதங்களை யநுசரித்து ஸ்ரீ வைஷ்ணவமார்க்க பூர்வாசாரியராகிய ஆழ்வார் விபூதிதாரணத்தைப்பற்றிக் கூறிய மொழிகளுக்கு மனதாரத்தூருத்தம் பண்ணுதலும் அங்ஙனம் பேதப்பொருள் விரிப்பவர்மொழியை யேற்றலும் நியாயமன்று. அங்ஙனஞ்செய்தல் தெய்வகட்டளையை மீறுங் குற்றமேயாம்.

இனி ஸ்ரீவைஷ்ணவர் திருநீற்றைத் தவிர்த்து இடைப்பட்ட ஆசிரியர் கற்பித்தபடி பாதவடிவமாக வெள்ளைமண்ணால் தங்கள் நெற்றியிலணிவது பெருமாள் பாதமென்றும், பெருமாள் நெற்றியிலணிவது அடியார்பாதமென்றுங் கூறுகின்றனர். எது எப்படியானாலும் அடிமைபாதத்தை ஆண்டவன் நெற்றியிலணிவது முறையா? நூதனகற்பனை செய்யப்போய்ப் பலவிடுக்கணடைகின்றனர். அந்தோ!

இனி சிவம் நான்காவதாகிய துரியப்பொருள்: அஃது பிரமம், விண்டு மும்மூர்த்திகளி லொருவர். சிவன் காரணன் விண்டு அகாரணர். சிவன் தியேயன் (தொழப்படுபொருள்) விண்டுதியாதா

(தொழுபவன்) சிவன் பிரகிருதிக்கதிபதி விண்டு பிரகிருதி, சிவன் பரமான்மா, விண்டு சீவான்மா, முத்தியளிக்க வல்லுநன் சிவன் என்று அநந்த பிரத்தியக்ஷ சுருதிகள் கோஷிக்கின்றன. அவற்றுனும் சிவபிரானுக்கு விண்டு பூத்தன் என்பது விளங்கும். அவற்றுட் சிலகூறுதும்.

## சிவன்துரீயன் - பிரமம்.

(1) ருதம்ஸத்யம்பரம்ப்ரஹ்மபுருஷம் க்ருஷ்ணபிங்கலம்| ஊர்த்வரேதம்விரூபாக்ஷம் விஶ்வரூபாயவை நமோ நம:॥

உண்மையாயும் வாய்மையாயும் பரமாயும் பிரமமாயும் புருடனாயும் கருமை பொன்மைகலந்த வடிவமாயும் (அர்த்தநாரீசுர வடிவமாயும்) பெண்போக மற்றதாயும், முக்கண்ணுடையதாயும் இருக்கின்ற உலகெல்லாந் தன் வடிவாயுடைய பொருளின் பொருட்டு வந்தனம்.

(2) யஏகோருத்ர உச்யதே அஸங்க்யாதா ஸஹஸ்ராணி ஸ்மர்யதே நசத்ருஶ்யதே। (யஜுர்-ஆருணம் பிர-1.)

ஒருவனு யிருக்கின்ற யாதொரு உருத்திரன் சொல்லப்படுகின்றுனே (அவனையன்றி) எண்ணமற்ற அநேகர்கள் தியானிக்கப்படவு மில்லை காணப்படவு மில்லை.

(3) துரீயம்ப்ரஹ்மஸம்ஜ்ஞம் தம்ப்ரஹ்மவிஷ்ண்வாதிபிஸ்ஸேவ்யம்॥

பஞ்சப்பிர்மோபநிடதம்.

துரியம் பிரமமென்ற பெயரையுடையது பிரம விஷ்ணுவாதி தேவர்களால் சேவிக்கத் தக்கது.

(4) ஏகஏவருத்ரோ நத்விதீயாயதஸ்தே

(யஜுஸ்-காண்டம்-1. பிரச்-.8)

உருத்திரனொருவனே இரண்டாவதாவதற்கு (வேறொருவன்) இல்லை.

(5) ஸர்வவ்யாபகத்வாத் அத்விதீயம் சதுர்த்தம் ப்ரஹ்மவிஷ்ணுருத்ராதீதம் ஏகமுகம் பகவந்தம் சிவம் ப்ரணம்ய

(வியாபகத்தால்) இரண்டற்றதும் நான்காவதும் பிர்ம விஷ்ணு ருத்திரர்களுக் கப்பாற்பட்டதும் ஒருமுகத்தை யுடையதும் பகவானும் ஆகிய சிவனைத் தொழுது.

(6) யதா தமஸ் தந்ந திவா ந ராத்ரிர் ந ஸந்ந சாஸச் சிவ ஏவ கேவல:।

எப்பொழுது இருட்டில்லை பகல் இல்லை இரா இல்லை சத்து இல்லை அசத்து இல்லையோ அப்பொழுது சிவனொருவனே இருந்தான்.

(7) தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்

ஈசுரர்களுக்குப் பரமான மகேசுரனே.

(8) விஶ்வாதிகோ ருத்ரோ மஹர்ஷி:. யஜுர். பிரபஞ்சத்துக்கு அதிகன் உருத்திரன் (சம்சாரநோயைப் போக்குபவன்.)

(9) பரமாத்மா தேவதா பஶுபதி:॥

பர்மாத்மாவாயும் தெய்வமாயும் இருக்கின்றபசுபதி.

(10) துரீயமிதம் ஸர்வஸம்ஹாரஸ்ருஷ்டி ஶக்திபி:।

யஜுர். உபநிடதம். நான்காவதாகியபொருள் இவ் வுலகத்தை அடத்துவனவும் தோற்றுவிப்பனவுமாகிய சக்திகளால் ஆள்கின்றது.

(11) ய: பரஸ்ஸ மஹேஶ்வர:. யாவன்பரனோ அவன்மகேசுரன்.

(12) [illegible]. இரண்டாவ தற்றதும் சாந்தமும் நான்காவதும் ஆயதுசிவம்.

(13) [illegible] நாம். சகலவித்தைகளையும் ஏவுபவன், சகல சீவர்களுக்கும் கருத்தா.

(14) [illegible]. சகலருக்கும் பிரபுவான ஈசானனே.

சிவன் காரணன்.

(1) [illegible]

இந்திரியங்கள் பூதங்களோடு பிரமாவிஷ்ணு உருத்திரர்கள் சகலமான இவ்வுலகம் பிறப்பிக்கப் படுகின்றது, அவர்கள் காரணரல்லர்; காரணரும் சருவைசுவரிய சம்பன்னரும் சருவேச்சுரரும் ஆனசம்புவானவர் சிதாகாயமத்தியில் தியானிக்கத் தக்கவர்.

(2) [illegible]

பரத்துக்குப் பரமானவர் பிரமா அவரிலும் பரத்துக்குப் பரமானவர் விண்டு, அவரிலும் பரத்துக்குப் பரமானவன் ஈசுரன் அவனில் அதிகமானவரும் சமமானவரும் இன்று.

## சிவன்தியேயன்—விண்டுதியாதா.

(1) ஶிவ ஏகோ த்யேய: ஶிவங்கர: ஸர்வமந்யத் பரித்யஜ்ய. மற்றனைவரையும் விடுத்து மங்களத்தைச் செய்கின்ற சிவனொருவனே தியானிக்கத் தக்கவன்.

(2) ஸ ஏகோ ருத்ரோ த்யேய: । அந்த உருத்திரனொருவனே தியானிக்கத் தக்கவன்.

(3) த்யாயீதேஶாநம். ஈசானனைத் தியானிப்பானாக.

(4) ப்ரஹ்மவிஷ்ண்வாதிபிஸ்ஸேவ்யம். பிர்மவிஷ்ணு ஆதியராற் சேவிக்கத்தக்கது.

(5) நாராயணபரோ த்யாதா. நாராயணர் சிறந்த உபாசகர். நாராயணோபநிஷதம்.

(6) "ஸ யதி வா ஶ்வபாக: ஶிவ இதி வாசம் வதேத் தேந ஸஹ ஸம்வதேத் தேந ஸஹ ஸம்வஸேத் தேந ஸஹ ஸம்புஞ்ஜீத" (முண்டகோபநிஷதம்) "அன்றியும், எந்தச்சண்டாளன் (பறையன்) சிவ என்ற வசனத்தை சொல்கின்றானோ அவனோடு நன்றாய்ப் பேசுவானாக, அவனோடு நன்றாய் வசிப்பா அவனோடு புசிப்பானாக"

## சிவன்பிரகிருதிக்கதிபதி விண்டு பிராகிருதி.

(1) வாஸுதேவ: பரா ப்ரக்ருதி:. வாசுதேவன் பரமான பிரகிருதி. (புராணம். ப்ரக்ருதி: பரமோ விஷ்ணு: பரமான் விஷ்ணு பிரகிருதியா யிருக்கின்றார்.)

(2) மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாந் மாயினந்து மஹேஶ்வரம். மாயையைப் பிரகிருதியென்றும் மாயைக்கதிபனை மகேசுரனென்றும் அறிக.

### சிவன், பரமான்மா, விண்டு ஜீவான்மா.

(1) பரோத்தாத்மா மஹேஶ்வர:, மகேசுரன் பரமான்மா.

(2) பரோத்தாத்மா ஸ்வயம் ஸ்தித:, நாராயணோபநிடதம் பத்ம கோஶப்ரதீகாஶம் முதலிய வாக்கியங்களால் விஷ்ணுவின் இதய கமலத்தை வருணித்து அதில் "பரமான்மா இருக்கின்றனன்" என்று நாராயணர் பரமான்மாவை இதயத்தில் வைத்துத் தியானிப்பதை விளக்குகின்றது.

(3) அஜ்ஞாநவஶாஜ்ஜீவ: (விஷ்ணு) அத்தியாசவசத்தால் ஜீவன்.

(4) ஹேயாநுவிஷ்ணுஶிகாநுஸம்ஸாரா- தள்ளத்தக்கவர்களாகிய விஷ்ணுமுதலிய தேவர்களே.

### சிவன் முத்திக்கதிபதி.

(1) யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: | ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி. மனிதர் எப்பொழுது தோலைப்போல ஆகாயத்தைச் சுருட்டுவார்களோ அப்பொழுது சிவத்தையறியாமல் துக்கநிவிர்த்தியடைவர்.

(2) ஈஶம் ஜ்ஞாத்வா அம்ருதா பவந்தி. ஈசனையறிந்து மோக்கத்தை யடைகின்றனர்.

(3) "ஜ்ஞாத்வா ஶிவம் ஶாந்திமத்யந்தமேதி" சிவத்தையறிந்து பரமசாந்தத்தை அடைகின்றனர்.

(4) உமாஸஹாயம் பரமேஶ்வரம் ப்ரபும் த்ரிலோசநம் நீலகண்டம் ப்ரஶாந்தம் த்யாத்வா முநிர்கச்சதி பூதயோநிம் ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத் (தைத்திரீயம்) பிரபுவும் முக்கண்ணனும் நீலகண்டனும் மிக்க சாந்தமுடைய

வனும், பூதங்களுக்குற் பத்தித்தானமும் சருவசாக்ஷியும், உமா சகாயனும், ஆனபரமேசுரனை மௌனிகள் தியானித்து தமப் பிரகிருதிக்கப்பாற்பட்ட (முத்தித்)தானத்தை யடைகின்றனர்.

(5) ஜாகூவதெவம் ஸதாஸிவம் "தெய்வமாகிய சதாசிவத்தை யறிந்து."

விண்டு உபாசகர்.

(1) தக்ஷிணஸ்யாம் திஸி விஷ்ணு: க்ருதெனைவ ஸேவ்யதா ரூமிம் ஸேவதெ. பஸ்மஜாபா லோபநிஷத். (காசியில்) தென்றிசையில் அஞ்சலிகூப்பியவராய் விஷ்ணு நம்மை யுபாசிக்கின்றார்.

(2) தவஸ்ரீ யெ ஸெ தா ஜேயத நரூயதெ ஜநி ஷோ ஸவித்ரூம் । வஷம் யவிஷ்ணோ ஸவ நயயதமெத நவாஸிநஷ்ஹ்யம் நா மொநாம், என்ற ருக்சம்ஹிதாவசனத்தால் சமஸ்ததேவர்களும் சிவலிங்காராதனத்தால் தங்களைசுவரியங்களை யடைந்தனர் என்றும் இலக்குமி சமேதராகிய விஷ்ணு சிவலிங்கபூஜைசெய்து பரமபதத்தை யடைந்தனர் என்றும் வெளியாகின்றது.

சிவனேநமஸ்கரிக்கத்தக்கவன்.

கைவல்யோபநிடதம் பிரமத்தை முதலைவடிவமாகத் தியானித்து.

(1) யஸ்மை நமஸ்ஸிரோ யஸ்ய தமுக்ஷம், ப்ருஹ்மா தூஷ்ர நவ பூஜோ உயாவிஷ்ணுஹ்ருதயம் ஸம் வத்ஸரோப்ஜநநம் । (யஜுர். தைத்திரீய உபநிடதம்.) "எதன்பொருட்டு நமஸ்காரமோ அது சிரசு, தருமம் உச்சி, பிரமன் மேலலகு, யக்ஞபுருடன் கீழலகு, விஷ்ணு இருதயம், வருடம் குய்யம், என்றாரம்பித்து,

"ஸ்வம் ஹி பூதாநாமதிபதிரஸி ஸ்வம் பூதாநாம் ச்ரேஷ்டோஸி" நீ பூதங்களுக் கதிபதியாயிருக்கின்றாய், உலகங்களுக்கு சிரேட்டனாயிருக்கின்றாய். (என்று பூதநாதனாகிய சிவபிரானைச்சுட்டி.)

"நமஸ்தே நமோ நமஸ்ஸர்வஸ்மை நம:" உனக்கு நமஸ்காரம் நமஸ்காரம் நமஸ்காரம் எல்லாநமஸ்காரம் உனக்கு. என்று நமஸ்காரத்துக்குரியவர் பிரமவிஷ்ணுக்களன்று சிவபரம்பொருளொன்றே யென்று வற்புறுத்தினமைகாண்க.

(2) நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதய உமாபதயே பசுபதயே நமோ நம: ॥ (தைத்திரியம்)
இதினும் முன்னும் பின்னும் நமஸ்காரங் கூறினமை காண்க.

(3) தஸ்மாத்ஸர்வஸம்ஹர்த்ரே ஸம்ஹாரகாய வை நம: । ஆதலால் சங்கார காரணனாகிய பேருண்டியனுக்கு நமஸ்காரம்.

இவ்வணமநந்த சுருதி வசனங்களிருக்கின்றன. இனி உபப்பிருமணமாக.

பாரதம்.

(1) ஜந்மகர்மதபோயோகா ஸ்தயோஸ்தவ ச புஷ்கலா: । தாப்யாம் லிங்கேர்ச்சிதோ தேவ: ஸ்வயார்ச்சாயாம் விசேஷத: ।

(வியாசர் அசுவத்தாமரை நோக்கி) அவர்களுக்கும் (கிருஷ்ணார்ச்சுனர்களுக்கும்) உமக்கும் ஜனனம் கன்மம் தவம் யோகங்கள் பூரணமாயிருக்கின்றன, (ஆனால்) அவ்விருவர் சம்புவை

லிங்கத்தி லாராதித்தனர் நீர் விக்கிரகத்தில் ஆராதித்தீர் (இதி சேஷம்.)

(2) வாஸுதே³வஸ்து தம் த்³ருஷ்ட்வா ஜகா³ம ஶிரஸா க்ஷிதிம்।
பார்தே²ந ஸஹ த⁴ர்மாத்மா க்³ருணந் ப்³ரஹ்ம ஸநாதநம்।
லோகாதி³ம் விஶ்வகர்மாணம் அஜமீஶாநமவ்யயம்।

தருமாத்மாவாகிய வாசுதேவர், உலகத்துக்கு முதல்வரும் உலகத்தைப் படைப்பவரும் பிறப்பற்றவரும் நாசமற்றவரும், ஆகிய அந்தப் பரமேசுரனைத் தரிசித்து, அநாதியான பிரமமாகத் தியானித்து அருச்சுனனோடு சிரசால் பூமியில் விழுந்து வணங்கினர்.

(3) ததோ ப⁴வஸ்ய ஸமீபஸ்ய ஸவ்யவாமே ஸ்வாத்மாந
வ்ருத்³த⁴ம் நஜோரூபம். ஸ்துவந்தமீஶம் ப³ஹுபி⁴ர்வசோபி⁴
ஶங்கா²ஸிசக்ராங்கிதவக்ரஹஸ்தம்।

(கிருஷ்ணபிரானது தவத்துக்குச் சந்தோஷித்துப் பரமேசுரன் வெளிப்பட்ட அவசரத்தில்) "பின்பு பரமசிவனுக்கு இடது பக்கத்தில் சூக்குமரூபியும் அநந்தவடிவுடையவரும் ஆகிய ஈசுரனை அநேக வசனங்களால் தோத்திரஞ் செய்வதும் சங்கம் கத்தி சக்கரங்களை வைத்துக்கொண்டிருக்கிற விஷ்ணுவாயதும் ஆகிய தன்வடிவத்தை உடனே பார்த்தார்.

பகவத்கீதை.

(4) ஈஶ்வர: ஸர்வபூ⁴தாநாம் ஹ்ருத்³தே³ஶே(அ)ர்ஜுந
திஷ்ட²தி ப்⁴ராமயந்ஸர்வபூ⁴தாநி யந்த்ராரூடா⁴நி
மாயயா। தமேவ ஶரணம் க³ச்ச² ஸர்வபா⁴வேந பா⁴ரத

தத்ப்ரஸாதாத்பராம்ஶாந்திம் ஸ்தாநம்ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம்।

(கிருஷ்ணமூர்த்தி யுபதேசம்) "அருச்சுனு ? (மாயையாகிற) இயந்திரமென்னும் சக்கரத்தை யடைந்திருக்கின்ற சகல பிராணிகளையுந் தனது மாயையாற் சுழற்றிக்கொண் டிருப்பவீராய் சகல பிராணிகளுடைய இருதயத்தில் எந்தஈசுரன் இருக்கின்றனனே அவனையே சகலமான தன்மையாலும் சரணமடையக் கடவாய். அந்த (ஈசுரனுடைய) அநுக்கிரகத்தால் சருவோத்தமமான சாந்தியையும் சாசுவதமான தானத்தையும் (முத்தியையும்) அடைவாயாக".

இதுவுள்ள தமேவ - அவனையே என்றபதத்துக்கு என்னையே என்று இராமாநுஜாசாரியர் முதலிய வைஷ்ணவாசாரியர் உரைவரைந் திருக்கின்றனர். அந்தோ, படர்க்கையிடப்பொருளாகிய அவனை யென்றதற்கு தன்மைஇடமாகிய என்னை யென்றெங்ஙனம் பொருள் கூறுவது.

(5) "தமேவசாத்யம் புருஷம் ப்ரபத்யே" ஆதி புருடனுகிய அவனையே நானும் சரணமடைகின்றேன்.

இராமாயணம்.

(6) வரதாநஞ்ச மஹேந்த்ராத் ப்ரஹ்மணோ வருணாதபி மஹாதேவப்ரஸாதாச்ச பித்ரா மம ஸமாகமம்।

(அநுமானைத் தன்வரவை முன்னறிவிக்கும்படி பரதனிடத்தனுப்பும்பொழுது இராமபிரான்) நான் இந்திரனல் பிரமனல் வருணனல் வரம்பெற்றதையும் மகாதேவருடைய் பிரசாதத்தால் என்பிதாவைக் கண் டதையும் "பரதஸ்ய நிவேதய". பரதனுக்குத் தெரிவிப்பாயாக" என்று கூறினர்.

(7) "ஸ தஸ்மை ப்ரபுர் மஹாதேவ: ப்ரஸாதமகரோத் ப்ரபு:" இவன் முன்னர்ப்பிரபுவாகிய மகாதேவர் பிரசாதத்தைப் புரிந்தனர்.

முன் வாக்கியத்தால் வருணனுக்கு வேறாகிய (பரமேசுரனாகிய) மகாதேவன் அருள் செய்தனன் என்பது தெளிவாம்.

## பொது - உண்மை.

சகல வேதாகமங்களிலும் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருளொன்றேயன்றிப் பலவன்று. ஜீவர்களின் பரிபாக தாரதம்மியம்பலவாதலின் அன்னவர்க்காமுபாசனா மூர்த்திகளும் பலவாம். பிரமாவிஷ்ணு உருத்திரன் இந்திரன் முதலியமூர்த்திகளை அன்னவர் தன்மையி லுபாசிப்பவர் அன்னவர் ஐச்சுவரியம் லோகப்பிராப்திகளை யடைவர். அப்பலன்களையும் மூர்த்தித்திரயாதீதரான பரப்பொருளொன்றே ஜீவர் கன்மங்களுக்கெற்பத்தரும் வன்மைத்து. அதனைச் சாக்ஷாத்தா யுபாசிப்பவர் உடனே பரமுத்தி யெய்துவர்: மூர்த்திகளைப் பிர்மபாவனையா லுபாசிப்பவர் அம்மூர்த்திகளோடு காலவிளம்பத்தில் பரமுத்தி யெய்துவர். பிரமஞானோபாசனையின் முதிர்ந்து ஜீவபாவமிழந்து பிரமபாவமேலிடலாற் றம்மைப் பிர்மமாயுபாசிக்க இந்திரன் வாமதேவர் ரிபுமுனிவர் முதலிய ருபதேசித்தது போலவே "தமேவ சரணம் கச்ச" (அவனை (ஈசரனை) யேசரணடை) "தமேவ சாத்யம் புருஷம் ப்ரபத்யே" "அந்த ஆதிபுருடனையே நான் சரணடைகின்றேன்" என்று சிவோபாசனையை அருச்சுனனுக்குபதேசித்த கிருஷ்ணமூர்த்தியே தம்மைச் சிவமாய்ப் பூசிக்கவும் உபாசிக்கவும் உபதேசித்தனர். உலகனைத்தும் அட்டமூர்த்தனும் பரமேசுரன் வடிவமாதலானும், சீடன் குருவைப் பரம்பொருளாய்ப் பாவிக்கவேண்டிய தவசியமாதலானும், சராசரப் பொருளெல்லாவற்றிலும் பிரமபாவனை செய்யுமுபாசகனுக்குக் குருவினிடத் தங்ஙனஞ் செய்வது முக்கிய மாதலானும், கீழ்ப்

பட்ட பொருள்களிடத்தும் பிரமபாவனை செய்யலாமென்பது "ப்ரஹ்மத்ருஷ்டிருத்கர்ஷாத்" என்ற பிரமசூத்திர முதலிய சகலசாத்திர சம்மதமாதலானும், அவையனைத்து முறையே வேதமே கண்கூடாக "ஶ்வப்⁴ய: ஶ்வபதிப்⁴யஶ்ச வோ நமோ நம:" என்று நாயையும் நாய்க்கதிபனையும் பிரமமாகப்பாவித்து வந்தனங் கூறியதும் இதுபோன்ற வநந்தசுருதிகளும் சான்றும்; தாழ்ந்தவரிடத்துயர்ந்த பாவனைசெய்யலாம் உயர்ந்தவ ரிடத்துத் தாழ்ந்த பாவனைசெய்தல் கூடாது. உதாரணமாக ஊழியனிடத்து இராஜபாவனைசெய்து புகழில் தன்னுலியன்ற வுதவி புரிவன். இராஜாவை ஊழியனுகப்பாவித்து நடக்கில் தண்டனையுந் துன்பமுமே பலனுகக் கிடைக்கும்.

இக்கருத்துக்களை யுட்கொண்டே வேதோபநிஷத்துக்கள் உத்தம பரிபாகிகளுக்குப் பிரமோபாசனையும் மற்றைய பரிபாகிகளுக்கு அவ்வவர்க்குத்தக்க மூர்த்தி யுபாசனைகளும் விதிக்கின்றன. அங்ஙனமே இராமதாபினி யுபநிஷத்தும் இராமனிடத்துப் பிர்மபாவனைசெய்ய வுணர்த்துகின்றது. அஃதையும் விளக்கிக் காட்டுதும்.

### இராமதாபிநி உபநிஷத்விசாரம்.

இராமதாபினி.

"ரமந்தே யோகினோ(அ)நந்தே நித்யானந்தே சிதாத்மநி"

"நாசமற்றதாயும் நித்யாநந்தமாயும் சிதாத்மாவாயு மிருக்கின்ற பிரமத்தில் யோகிகள் ரமிக்கின்றார்கள்" (அதனுல் பிரமம் இராமவென்று சொல்லப்படுகின்றது.)

"சிந்மயஸ்யாத்³விதீயஸ்ய நிஷ்கலஸ்யாஶரீரிண: । உபாஸகானாம் கார்யார்த²ம் ப்³ரஹ்மணோ ரூபகல்பனா ।"

"சின்மயமாயும் அத்விதீயமாயும் நிஷ்களமாயும் சரீரமற்ற தாயும் இருக்கின்ற பிரமத்துக்கு உபாசகர்களின் உபாசனையின் பொருட்டு வடிவகற்பனை செய்யப்படுகின்றது".

இவைகளால் இராமன் என்றபதம் நிஷ்களமான பிரமத் தைக் குறிக்கிற தென்றும் நிஷ்களோபாசனை செய்யும் வன்மை யற்றவர்க்கு உபாசனநிமித்தம் உருவகற்பனை செய்யப்படுகின் றது என்றும் கூறப்பட்டது.

பிரமத்தை இராமசப்தத்தாற்குறிக்கும் விஷயத்தில் இராம ரகசியோப நிடதம் "ரமந்தே யோகினோ யஸ்மின்" "எவன் யோகிகள் ரமிக்கின்றார்களோ அவன் இராமன்" "ஸச்சிதாநந்த ரூபோஸ்ய பரமாத்மார்த உச்யதே" "இதற்கு சச்சிதாநந்த ரூபமாகிய பரமாத்மா அருத்தமாகச் சொல்லப் படுகின்றது" என்று விளக்குகின்றது.

இராமதாபினி. "ஸ்வபூர்ஜ்யோதிர்மயஃ" முதலியவாக்கியங்க ளால் ஆநந்தவடிவான அப்பிரமம் சிற்சக்தியோடு கூடியதும் சருவகாரண மானதுமென்று கூறி.

இராமதாபினி. "ஸீதாராமௌ தந்மயாவத்ர பூஜ்யௌ" இவி டத்தில் சீதாராமர்கள் அவர்கள் (சிவம்சத்தி) வடிவமாகப் பூஜி க்கத்தக்கவர்கள் என்று கூறுகின்றது.

இதனை இராமரகசியோபநிடதம் "சிவோமாராமசந்த்ராத்ர தேவதா பரிகீர்திதஃ" சிவன் உமைரூபமாகிய இராமச்சந்திரன் இவண் தேவதையாகச் சொல்லப்படுகிறான்" என்றது.

இவைகளால் சச்சிதாநந்த ரூபமும் சிற்சக்தியோடு கூடியது மான பரப்பிரமம் உமாசகித சிவமென்றும் அச்சிவசக்தி ரூப மாகச் சீதா இராமர்களை யுபாசிக்கவேண்டு மென்றும் உறுதிப் படுகின்றது.

இராமதாபிநி—அகார உகாரமகார அர்த்தமாத்திரை பிந்துநாதம் என்ற ஆறின் சேர்க்கையே பிரணவமாகிய ஓங்காரம். அது, "கர்ப்பஜந்மஜராமரண ஸம்ஸாரமஹத்பயாத் ஸந்தாரயதி தஸ்மாதுச்யதே ஷடக்ஷரம் தாரகமிதி" கருப்பம் ஜநநம் ஜரை மரணம் ஆகிய சம்சார மகாபயத்தினின்றும் கடத்திவைப்பதால் சடக்கரம் (ஆறக்கரம்) ஆகிய தாரகமென்று சொல்லப்படுகின்றது.

இராமதாபிநி. இந்தத் தாரகப் பிரமரூபமாக இராமனைப் பாவிக்கத்தக்கது, அப்பொழுது. "இலக்குமணன் சத்துருக்கன் பரதன் இராமன் சீதை இவர்களை அகார உகார மகார அர்த்தமாத்திரை பிந்து நாதம் ஆகப்பாவிக்கத்தக்கது, என்று கூறிப்பின்னர் சொரூபத்தியானஞ் சொல்லும் தருணத்தில் பிரம இலக்கணங்களை வருணித்து. "ஸாந்தம்ஸிவமத்வைதம்சதுர்த்தம்மந்யந்தே" "சாந்தமும் ஆகிய சிவத்தை அத்வைதமாயும் நான் காவதாயும் எண்ணுகின்றார்கள்" என விளக்குகின்றது. இதற்குச் சாந்தமாயும் சிவமாயும் அத்வைதமாயும் நான்காவதாகியுமுள்ள பொருளைத் தியானிக்கின்றனர் என்று பொருட்கொள்ளினும் விஷ்ணு அல்லது தசரத ராமனைக் குறியாது.

இராமரகசியோபநிடதம் சொரூபத் தியானம்..

சொல்லுஞ் சமயத்தில்.

(1)ராமம்த்ரிநேத்ரம் ஸோமார்த்ததாரிணம் ஸூலிநம்வரம். பஸ்மோத்தூளிதஸர்வாங்கம் கபர்திநமுபாஸ்மஹே. (2) ராமாபிராமம் நயநாபிராமம் வாசாபிராமம் வசநாபிராமம். ஸதாபிராமம் ஸததம் ஸ்மராமி.

"முக்கண்ணரும் பாதிமதியணிந்தவரும் சூலத்தையுடையவரும் மேலானவரும் பஸ்மோத்தூளநஞ் செய்யப்பட்ட சகல அங்கங்களை யுடையவரும் சடையையுடையவரும் ஆன இராமனை உபாசிக்கிறோம்."

"இராமனுலழகியவளும் அழகுக்கெல்லை யானவளும் சந்திரனைச் சிரோபூஷணமாயுடையவளும் பாசம் அங்குசம் வில் பாணங்களைத் தரித்தவளும், மூன்று கண்களையுடையவளும் ஆன தேவியைத் தியானிக்கவேண்டும்."

என்று மூர்த்தித்திர யாதீதரான சிவசக்தி ரூபமாகச் சீதா இராமர்களைத் தியானித்தது. இஃது இராமத்தியானத்தின் இரகசியம் கூறவந்த வுபநிஷத்தாதலின் ராமதாபிநியில் "ஶிவாத்வைதம்" என்றதை விளக்கிக் கூறிற்று.

இவைகளால் சருவஜகத்காரணராகிய பரப்பிரமமே தாரக மந்திரமாகிய பிரணவத்துக்கு வாச்சியப் பொருளென்றும் அஃது மூர்த்தித்திரயாதீதரான சக்தியோடு கூடிய சிவபரப்பிர்மமென்றும் குருலிங்க சங்கமங்களைச் சிவமாகப் பாவிப்பது போல பிரமோபாசனை செய்யத் தகுதியற்றவர்களாகிய சிலபரிபாகிகள் சீதா ராமர்களைச் சிவசக்திகளாகப் பாவித்துத் தியானிக்க வேண்டுமென்றும், இராமசப்தம் பிரமவாசக மாதலானும், அப்பெயர் விண்டு அவதாரமாகிய தசரத புத்திரனுக்கிடப்பட்டதாலும் அவ்விராமனிடத்தும் சிவபரப்பிர்மபாவனை செய்தல் சாஸ்திர விரோத மன்றாதலானும் அவ்விராம சப்தமுந்தாரகமென்றுபசரிக்கப்பட்டது என்றும் வியக்தமாகியது.

"ப்ரஹ்மத்ருஷ்டிருத்கர்ஷாத்" என்ற பிரம சூத்திரப்படி உயர்ந்தவராகத் தாழ்ந்தவரைப் பாவித்தல் முறையாதலின் சிவபரப்பிரமபாவனையால் இராமனைப் புகழ்ந்தது.

உண்மை யிங்ஙன மிருக்க சிவபரப்பிரமம் தசரத இராமன் நாமத்தைக் காசியிற்ஜபிக்கிறது என்று பொருள் கொள்ளக்

கூடுமோ? ஜனனமரணாதி சம்சாரபயத்தினின்று கடத்திவைக்கும் ராமசப்தத்துக்கு வாச்சியப் பொருளாகிய தாரகப்பிரம்மத்தியானத்தை அப்பெயர் தரித்த ஜனனமரணங்களிற்பட்ட தசரத ராமருக்குரித்தாக்கலாமா? சிவசிவவென்றொருவன் செய்யுந் தியானம் சிவன் என்ற பெயர் தரித்தவொருமனிதனைக் குறித்ததாமா? ஆகா. "ஸீதாராமௌ தந்மயாவத்ர பூஜ்யௌ" "அவர்கள் வடிவமாகச் சீதாராமர்கள் பூசிக்கத்தக்கவர்கள் என்றவசனம் சீதாராமர்கள் தாமேதியானிக்கத் தக்கவர்கள் அன்றென்றும், சாணம், கல், மண், செம்பு முதலிய விக்கிரகங்களில் ஈசுரனைப் பாவித்துப் பூசித்தல் போல சீதாராமர்களிடத்தில் சிவசக்திகள் பாவித்து வணங்கத்தக்கவர்களென்று விளக்கவில்லையா? இங்ஙனம் பொருள் கொள்ளாவிடில் இவ்வுபநிஷத்துக்கள் பூர்வோத்தர விரோதங்களால் அடியோடு பொய்த்துப்போம். ஆதலால் பிரம சப்தத்துக்குவாச்சியப் பொருளும் நான் காவதுமாகிய சிவபரப்பிரமப்பொருளை "நகாரணம்" என்றுவிலக்கப்பட்ட மும்மூர்த்திகளிலொருவராகிய குணருத்திரர் தியானிக்கின்றனர் என்று பொருட்கோடலேசால்பாம்.

இங்ஙனம் உய்த்துணராது இராமதாபினியிற் சொன்னபொருள் விண்டு என்றும், வைஷ்ணவ மதத்தை இவ்வுடநிடத்தங்கள் போதிக்கின்றன வென்றும் உய்த்துணராது நம்பல் அவலமே. இன்னுஞ் சற்றதனை விளக்குதும்.

இராமோத்தரதாபிநி "யஃ தாரகம் ப்ரஹ்ம ஸ ஏவ ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரஸ் ஸர்வதேவா: — யே வா அஷ்டௌ லோகபாலா:, யே வா அஷ்டௌ வஸவ: — யே வை ஏகாதச ருத்ரா: ஸமாவர்த்த ... ததிதம் ..." "எது தாரகப்பிரமம், எதுபிரமா விஷ்ணு ருத்திரன், எது சகலதேவாத்மா — எது எட்டு லோகபாலகரும் எது அட்டவசுக்களும்

எது ஸ்ரீராமச்சந்திரன் (ஆகியதோ) அது பகவானும் இரண்டற்றவனும் ஆநந்த வடிவனுமாகிய பரமாத்மா."

இவண் சகல சித்தசித்துப் பிரபஞ்ச வடிவனாகிய பரப்பிரமம் கூறப்பட்டது. இனிப்பலன் கூறுமிடத்து வைஷ்ணவாதிசமயாதீதமாகிய பிரமோபசன மந்திர மென்றுங் குறிக்கின்றது.

இராமோத்தரதாபினி. வைஷ்ணவேஷு ச மந்த்ரேஷு ராமமந்த்ர: பலாதிக: । காணபத்யாதிமந்த்ரேஷு கோடிகோடிகுணாதிக: ॥ "இராம மந்திரமானது வைஷ்ணவ மதத்தினுள்ள சகல மந்திரங்களிலும் அதிக பலனுடையது, காணபத்தியம் முதலிய மந்திரங்களிலும் கோடி கோடி குணமுள்ளது.

இதனால் இராம மந்திரம் வைஷ்ணவ மதசம்பந்த மன்றென்பது தெளிவு.

இஃதன்றி வைஷ்ணவ மதத்தினர்க்கு விரோதமானதும் சமயாதீத சுத்தாத்வைதிகளாகிய சிவபரப் பிரமோபாசகராற் பாவனை செய்யப்படும் "பிரமோஹம்" "சிவோஹம்" என்றவுபாசனைபோலவே "ராமோஹமஸ்மி" "நான் இராமனாயிருக்கின்றேன்" என்று எப்பொழுதும் பாவிக்க இராமதாபினி இராமரகசியோபநிடதங்கள் விதிக்கின்றன. இவ்வுபாசனை மாத்துவ பாஞ்சராத்திர வைகானச வைஷ்ணவர்களுக்குச் சம்மதமாமா. அங்ஙனந் தங்களுக் கொவ்வாத விஷயத்தைத் தங்களுக்குச் சொந்தமாக்க முயல்வது முடவன் கொம்புத் தேனுக்கிச்சித்தல் போலும், அன்றியும் இவரது இராம ரகசியோபநிடதம் விபூதிருத்திராக்ஷத்தையும் அக்கினி காரியத்தையும் அங்கீகரித்திருந்தும் ஓராமல் அதற்கு விரோதமாய் அவைகளைத் தூஷிக்கப் புகுந்தது வியப்பினும் வியப்பே. அவையாவன. இரா

மரகஸியோபநிஷதம் "ஹஸ்தாத்ஷயித ஸவராமம்" "ராம த்ரி
க்ஷாவ்யதராமயா" "ஜாஹ்ராயாசு" "ஹாநேசு" "ஸ்ரீசக்
வர்ணதத்வா:" "ஸ்ரீ ஷவசைத்ர:" இவையன்றி வில்வமர
த்தடியிலிருந்து ஜபிக்கவிதித்தலையுமோர்க.

இராம சப்தத்தைப் பிரமவாசகமாகக் கொள்ளும்பொ
ழுது பிரம விஷ்ணு ருத்திராராகிய மும்மூர்த்திகளும் அதைத்
தியானித்தலும் உபதேசித்தலு முறையே. மேற்போந்த நியா
யங்களால் ஷெ உபநிடதங்கள் சிலபக்குவிகளுக்குச் சிவ பரப்
பிரமத்தைச் சீதாராமராகப் பாவித்து உபாசிக்க விதிக்கின்
றன வென்பது நன்கு விளங்கும்.

பூர்வபக்கம்-௩—சித்தாந்தம்.

இனி இவர் ஆதாரவாகத் தேடிய பொப்பதேவ கிருதமாகிய
கிருஷ்ணபாகவதம் புராணமன்று, தேவீபாகவதமே புராண
மாகச் சகல சிஷ்ட ஜனங்களால் கிரகிக்கப்பட்டிருக்கின்றது.
இனிக்கிருஷ்ண பிரானது பெருமை கூறவந்தவதுவும் சமுத்
திர மதனகாலத்தில் விஷவேகத்தாலிரிந் தோடியதேவர்களும்
பிரம விஷ்ணுக்களும் ஸ்ரீபரமேசுரனைச் சரணடைந்தார்கள்
என்று "சாக்ஷ்யாணாஸ்ரூணஸ்ஹாஸிவம்" என்பது முதலிய
வாக்கியங்களால் வெளிப்படுத்தியது. இன்னும் பல்விடங்க
ளிற் சிவோத்கிருஷ்டங் கூறுகின்றது. அஃது தூஷிக்கினும்
சாக்ஷாத் சுருதிகளின் முன்னிற்கும் வன்மைத் தாகாதென்பது
தெளிவு. முற்கூறிய சுருதிகளைக் கவனித்துய்க,

பூர்வபக்கம் : ௪.

கௌதமஸ்மிருதியில் பிராயச்சித்தப் பிரகரணத்தில் கூறிய
அதர்வசிரோபநிஷத்திற் பாசுபதவிரத மென்னும் பஸ்மதார
ணம் அவசியம் செய்துகொள்ள வேண்டுமென்று கூறியத்து
கொண்டேயாவரும் பஸ்மமணிய வேண்டியது கடமையோ?

அதர்விசிகோபநிஷத்துப் பிரக்ஷிப்தம்: அதனால் அது விதித்த பஸ்மதாரணம் பூஜ்யமாகாது என்றனர்.

### சித்தாந்தம்.

அதர்வசிகோபநிஷத்துப் பிரக்ஷிப்தமென்பதற் கொருகாரணமு மூரைத்தாரில்லை. நிரேதுவாய்ப்பிரக்ஷிப்தமெனில் அத்தோடுஜபிக்கத்தக்கதாய்க் கூறப்பட்ட சகலவேத சம்ஹிதைகளும், மதுக்கள் அகமருஷணம் உருத்திரங்கள்புருடசூக்தம் ராஜநஸிரௌஹிண பிரஹத்ரதந்தரம் முதலிய சாம முதலியனவும் பிரக்ஷிப்தமாம்: அவையங்ஙனமாகவே பாவகன்ம நிவிர்த்தியின் பொருட்டு அவைகள் ஜபிக்கத்தக்கன வென்று கூறிய கௌதம தருமசூத்திரமும் பிரக்ஷிப்தமாய் அவற்றையறியா துரைத்த அறியாமை கௌதமருக்கேறும்: ஏறவே அன்னவர் நூலைப் பிரமாணமாகப்பற்றிப் பஸ்மத்துக்கீனங் கூறுமறியாமை இவருக்கே வருமென்றிவ ரோர்ந்திலர்போலும், ஆகலின் அதர்வசிகையிற் கூறிய பூதிதாரணம் கொள்ளத்தக்கதே.

### பூர்வபக்கம் - ரு.

"கௌதமர் உபநிடதங்களை ஜபிப்பதே ஜபரூபமான பிராயச்சித்தமென்று கூறினாரன்றி அவ்வுபநிடதங்களிற் கூறியபடி அநுட்டித்தே தீரவேண்டுமென்று அருத்த நிர்ணயஞ் செய்யப் பிரமாணமில்லை" என்றனர்.

### சித்தாந்தம்.

இவர் யுத்திகேட்டு நகையாத புத்திமான்களுண்டா? ஒரு நூலைப் படித்தாலும் பாவம்போமென்பது அந்நூலிற் சொல்லப்பட்ட உயர்பொருள் பற்றியேயாம். செய்யத்தகாத பாவத்தைச் செய்யச்சொல்லும் நூலைப்படித்தால் பாவம்போமென்று கூறுவாருளரா? அதர்வசிகையோடு ஜபிக்கத் தக்கதாய்ச் சொல்லிய புருட சூக்தத்திற் கூறிய பொருள்களை மறுக்க இவர் சம்மதிப்பரா? இவ்விவகாரத்தாலும் அவர் கக்ஷிக்கேகேடு

தேடிக்கொண்டன ரென்றோர்க. தமக்குச் சம்மதமல்லாத பஞ்ச பதாரணங் கூறிய காரணமொன்றினாலேயே அதர்வசிகைப்ர க்ஷிப்தமென முர்துவராயின்.

பாரதம் - சாந்திபருவம்.

[illegible]

இராமாயணம்.

[illegible]

தைத்தரீயசுருதி=“[illegible]”

சாதாதபஸ்மிருதி=[illegible]

வாசுதேவோபநிடதம்=[illegible]

இராமரகசியோபநிடதம்=“[illegible]”

அதர்வசிரசுருதி-“[illegible]”

“[illegible]”

காலாக்கினிருத்திரம் =“[illegible]”

பஸ்மஜாபாலம்=“[illegible]”

பிரஹஜ்ஜாபலசுருதி—“விப்ஸ்மாஹிதம்ஸாரம்”

யஜுர்வேதம்—“சுப்ரஸ்நாஸி” “ஸ்நாஹிவாஸயதி”

“ஸ்நாவதேவிவதீஸாஜ்ஞ்யே”

திருவாய்மொழி—“கரியமேனி மிசைவெளியநீறு சிறிதே யிடும்”

“நீறுசெவ்வே யிடுவாரைக் காணின்”

“தவளப்பொடிக்கொண்டு” “தமரணிநீறுகொண்டு”
என்று பஸ்மதாரணங் கூறுவதால் அவைகளும் பிரக்ஷிப்தமாம். இவைபோலவே புராணங்களும் கூறுவதாலவைகளும் பிரக்ஷிப்தமாம். எல்லாநூல்களும் சுருதிகளும் பிரக்ஷிப்தமென்பாராஞல் ஆஸ்திகத்துவ மிவருக் கெவ்வணஞ் சித்திக்கும்.

“அபிஜாதீநாம் ப்ருவாணவியிம் வ்யாவ்யாஸ்யாமோ ஸர்வேஷாம் வ்யதிவிஜ்ஞாயதே” என்ற போதாயனசூத்திர வாக்கியத்தை வாசித்த பின்னரும் பூதியென்றபதத்துக்குப் பொருள் பஸ்மமா ஐச்சுவரியமா என்ற அருத்தமயக்கத்தைப் பிரஸ்தாபிப்பது இவருக்குள்ள மயக்கத்தாலன்றி வேறோராற் றுலன்று “ப்ருவாணவியிம்” என்றதைக் கவனித்துய்க.

## பூர்வபக்கம்-சூ. சித்தாந்தம்.

பஸ்மம் மயிர் உமிவராட்டி கபாலம், அமேத்தியங்களை மிதியாதே என்று எறியப்பட்ட சாம்பல் முதலியவற்றைக் குறிக்கின்றன வென்றும், உம்மைத் தொகையென்றும், முன்னரே பல பிரபலப் பிரமாணங்களோடு ஸ்ரீமான் மஹா மஹோபாத்தியாயரவர்களால் தீர்மானிக்கப்பட் டிருக்கின்றது, ஆதலால் மறுபடி யிவர்கூறுவது வீண். களையப்பட்ட மயிரன்றித் தன்றலையிலிருக்குமயிர் அசுத்தமாமா? தீட்டிக்களைந் தெறியப்பட்ட உமியன்றி அஃது நெல்லி லிருக்கும்பொழுது அசுத்தமாமா?

சகலஅசுத்தங்களேயுஞ் சுத்திக்கும் கோமயத்தாலாகிய வராட்டி யசுத்தமாக்கி யெறியப்பட்டாலன்றி சமையல் அக்கினிஹோத்திரம் பஸ்மம் முதலியதுக் குபயோக மாகின்ற அது அசுத்தமாமா! பிணஞ்சுட்டபின்னர்க் கிடக்கும் கபாலவோடன்றித் தன் சிரம் அல்லது கபாலவோடு தொடக்கத்தகாத அசுத்தத் தன்மை யுடையதாமா? தன்றலேமயிரையும் கபாலத்தையும் தான் மிதிக்கமுடியுமா? பிறர்தலேயை மிதிப்ப திவ்விதியிற் சாருமா? மிதித்தாற் பதின்மிதி பலனுகாதா? அல்லது கபாலம் மண்சட்டியைக் குறிக்கில் உபயோகித்துக் கழிக்காத புதிய மண்பாத்திரத்துக்கு அசுத்தத்தன்மை யுண்டா? கபமுதலிய வசுத்தங்களும் சரீரத்தினின்று வெளிப்பட்டுக் கழிந்தபின்னரன்றிச் சரீரத்திலுள்ள பொழுதே அசுத்தமாகக் கிரகிக்கப்படுமோ? அவை சரீரத்தினுள் ளுள்ளபொழுது மிதிப்ப தெப்படி? அவை போலக் குப்பையி லெடுத்தெறிந்த அடுப்புச்சாம்பல் சவுச்சாம்பல்களுக்கு அசுத்தத்தன்மை யுண்டு. அக்கினிஹோத்தர பஸ்மம் கற்பம் அநுகற்பம் விகற்பங்களாகிய பஸ்மங்கள் அசுத்தத்தன்மை யுடையன வாமா? பண்புத்தொகையென்று பூர்வபக்ஷியும் அவர் ஆசிரியரும் கூரியபடி யொப்புக்கொண்டால் அசுத்த பஸ்பம் மயிர் உமிவராட்டி கபால ஓடுகளே மிதியாதே யென்று பொருள்பட்டுச் சுத்தமான பஸ்மாதிகளுக் குயர்வுதானே கிடைப்பதோர்க. அன்றியும் பராசரஸ்மிருதி, பிராயச்சித்த காண்டம் 7-வது அத்தியாயத்தில் மாதவாசாரியர் வியாக்கியானத்தில் மேத்யமான பதார்த்தங்களேச் சொல்லும் சமயத்தில், தேவலசர்.

ஸர்வம் புஷ்பிதா மேத்யா ப்ராஹ்மணாஸ்ச ஸதைவ ஹி
பா। ஸ்ம க்ஷௌத்ரம் ஸுவர்ணம் ச குதபே ஸகுசாஸ்திலா:

“புஷ்பித்தமரங்கள் பிராமணர்கள் பஸ்மம் தேன் பொன் குதபகாலத்தில் தருப்பையோடு கூடிய எள் இவைகள் நித்திய

பிரிசுத்தங்கள்'' என்பதால் பஸ்மம் நித்தியபரிசுத்தப் பொருளென் றறிந்துய்க.

## பூர்வபக்கம் - எ.

''சங்கராசாரியர் பூதிசப்தத்துக்கு விபூதியென்று பொருள் கூறாமையால் விபூதி வைதீகமன்று'' என்றனர்.

## சித்தாந்தம்.

சங்கரா சாரியரும் அவர் பரம்பரையினரும் பஸ்மதாரணஞ் செய்து வருவதையும் அதைப்புகழ்ந்து வருவதையும் இவரேன் கவனிக்கவில்லை. அவர்தாமே நடந்துகாட்டும்பொழுது சொல்லவும் வேண்டுமோ? அவரை இவர் ஆசாரியராய்க் கொள்ளில் அவ ரநுட்டானத்தையு மநுசரித்த லவசியம். பூர்வோத்தர விரோதமா யாசாரியர் அநுட்டானத்தை வேறோரிடத்து நிந்தித்தார்.

## பூர்வபக்கம் - அ.

''தாமதபுராணங்களில் தாமத முனிவர்களால் திரிபுண்டர தாரணம் அசுரர்களை மோகிக்கச் செய்வதற்காகவே கூறப்பட்டது'' என்று தமதாசிரியர் கூறியிருப்பதாய்ச் சொல்கின்றார்.

## சித்தாந்தம்.

இவராசிரியர் மொழியொரு பிரமாணமாமா? விபூதியைக் கூறுவன தாமதபுராணங்கள் அவற்றைச் செய்தவரும் தாமத முனிவரெனில் பதினெண் புராணங்களையுஞ் செய்த விஷ்ணு அவதாரமாகிய வியாசபகவானே தாமதமுனிவர் ஆகின்றார். அவர்கூறிய மற்ற புராணங்கள்போல வைஷ்ணவ புராணங்களும் தாமதபுராணங்கள் ஆம். அவையன்றி விபூதிதாரணங் கூறிய இராமாயணமும் அதைச் செய்தவான்மீகியும் இராமரகசியோபநிடத முதலிய உபநிடதங்களும் வேதமும் தாமதகுணத்தவைகளாய் அவைகளின் வக்தாக்களாகிய இருடிகளும் ஈசுரனும் தாமத குணத்தினராம். அங்ஙனமாகில் தாமதகுணத்தில்

விடுபட்ட நூல்யாது. அந்தோ இவரன்றி இங்ஙனங் கூறுவாருலகிலுளரா?

## பூர்வபக்கம் - கூ.

"சிறந்ததிற்கூறியது சிறந்தது தாழ்ந்ததிற்கூறியது தாழ்ந்தது என்று மீமாம்சா சாஸ்திரங் கூறுவதால் அநேக உபநிடதங்களால் டஸ்மம் பூசிக்கப்படினும் (வேதங்களில்) உத்தமமாகிய சாமவேதத்திற் றோன்றிய வாசுதேவோபநிடதத்தில் விதிக்கப்பட்ட கோபீசந்தன ஊர்த்தவ புண்டரமேசிறேட்டம்" என்றனர்.

## சித்தாந்தம்.

அங்ஙனமாகில் கோபீசந்தனத்தின்மீது பஸ்மதாரணஞ் செய்ய அவ்வாசுதேவோபநிடதமே கூறுவதால் பஸ்மதாரணமெத்தகை மேன்மைத்ததென்று சற்று மிவருகியாமற் போனதே பரிதாபம். அன்றியும் அவர்பூஜித்த சாமவேதத்திற் பிறந்த ஜாபால் யுபநிடதமும்.

"[illegible]" முதலிய வசனங்களால் விபூதிதாரணம் ஞானோற்பத்திக்குக் காரணமென்று கூறுகின்றது.

சாமவேதத்திற் பிறந்த ருத்திராக்ஷஜாபாலோபநிடதமும் "தத் ருத்ராக்ஷே வாக்விஷயே க்ருதே தசகோப்ரதாநேந யத் பலம் அவாப்நோதி தத் பலம் அஶ்நுதே ஸ ஏஷ பஸ்மஜ்யோதீ ருத்ராக்ஷ இதி" என்றவாக்கியம் புகழ்தலையுமோர்க.

இவைகட் கிவரென்ன சமாதானங்கூறுவர்? முன்னர்ச் சங்கராசாரிய சுவாமிகளை பூதிசப்தத்துக் கோரிடத்தில் பஸ்மமென்னுதி ஐச்சுவரிய மென்று பொருளுரைத்தற்காகப் புகழ்ந்து பூதிதாரண வநுட்டானமுடைமைக்காக விகழ்ந்ததுபோல்;

காமவேதத்தைக் கோபீசந்தன தாரணங்கூறிய வாசுதேவோ பநிஷத முற்பவித்தற் கிடமாதல் பற்றிப் புகழ்ந்து ஜாபால் பநிடதம் உருத்திராக்ஷ ஜாபாலோப நிடதங்க ளுற்பத்திக்கிட மாதல்பற்றி யிகழ்வார் போலும். அன்றியும் கோபீசந்தனங் கூறியதுபற்றிப் புகழ்ந்த வாசு தேவோப நிஷத்தை பஸ்ம தாரணங் கூறியதுபற்றி யிகழ்வர் வேறென்செய்வர். அந்தோ இவரும் இவராசாரியரும் தாங் கூறிய வொரு பிழைக்குத் தப்பிப் பிழைக்கப் பலபிழைகள்கூறி அப்பிழைகளைப்பற்றி வினவெழும்பொழுது மற்றொன்று விரிக்கின்றனர். அந்தோ இவரெற்றுக் கிவ்வண்ணம் வருந்துகின்றனர்.

### பூர்வபக்கம் - கo.

"சங்கராசாரியர் குருபரம்பரை நாராயணரி லிருந்துதொடங்குகின்றது, (அஃது) நாராயணர், பத்மபவர் (பிரமன்) வசிட்டர், சக்தி, பராசரர், வியாசர், சுகர், கௌடபாதர், கோவிந்த யோகி, சங்கரா சாரியர், ஒருவர் பின்னொருவராய் வந்தனர். முதற்குருவாகிய நாராயணருக்கு ஊர்த்தவ புண்டரங்கேட்கப்படுகையால் அவர் வழிவந்தசீடரும் ஊர்த்தவ புண்டரமே தரித்தார்க ளென்பது சித்தம். பிரமதேவரும் வசிட்டரும் ஊர்த்தவ புண்டரமே தரித்தார்களென்று வாசுதேவோப நிடதங் கூறுகின்றது. ஊர்த்த புண்டரந்தரித்த பிரமதேவராற் படைக்கப்பட்ட சகலரும் ஊர்த்தவ புண்டரமேதரிக்கக் கடமைப்பட் டிருக்கின்றார்கள்" என்றனர்.

### சித்தாந்தம்.

பிரமதேவர் படைத்த ஜீவர்களனைவரும் அவரைப்போலவே ஊர்த்தவ புண்டரந்தரிக்கக் கடமைப்படில் அவரைப்போல பூணூல் தரிக்கவும் அன்னவாகன மேறவும், மனைவியை நாவில் வைத்துக்கொள்ளவும், தலை கிள்ளுண்ணவும் கடமைப்பட லாவசியம் போலும், இஃதொரு காரணமாய்க் கூறிய தா லிங்ஙனம் கூறினும்.

இனி குருநாதராகக்கூறிய நாராயணர் பஸ்மதாரணமுடைய ரென்று "भस्मोद्धूलितसर्वाङ्गः" என்று இராமரகசி யோபநிடதமும் "श्रीरामो भस्मोद्धूलितसर्वाङ्गः" என்று சாண்டில் யோபநிஷத்தும் "கரியமேனிமிசை வெளியநீறு சிறிதேயிடும் பெரியகோலத் தடங்கண்ணன்" என்று திருவாய் மொழியும் "ब्रह्मा देवश्च विष्णुश्च ब्रह्मादेशांविहस्तयः । देवाश्चान्ये सदा भक्त्या भस्मरुद्राक्षधारिणः । मौनत्रयेषु सर्वेषां कोटिशः सप्तर्षयः स्मृताः । वेदशास्त्रार्थनित्यं भस्मरुद्राक्षधारिणः । என்று நாராயணர் சீடவர்க்கத்துள்ள பராசரர் பராசர புராணத்துக் கூறுமொழியும், கிருஷ்ணன் பரசிராமர், பலபத்திரராமர் இராமர் வாமனர் ஆதி விஷ்ணு அவதார புருடர்கள் சிவபூஜைசெய்து விபூதிருத்திராக்ஷ தாரணஞ் செய்தனர் என்ற பல புராண வசனங்களும், நாராயணருக்குப் பஸ்ம புண்டரத்தை நிரூபிக்கின்றன. அவை விரிக்கிற் பெருகும். அவர் சீடர் தாரணமும் பஸ்மமென்பது தெளிவு. அவர்குருவாதலால் அவரும் அவர் சீடருந் தொழும் பரம்பொருள் சிவம் என்று "तुरीयं ब्रह्मसंज्ञितं, ब्रह्मविष्णुशिवैस्सेव्यं" "नारायणपरोध्याता" முதலிய சுருதிகள் தெளிவிக்கின்றன.

குருவாகிய நாராயணரது அநுட்டானத்தைப் பின்பற்றியே சங்கராசாரியரும் அவரது பரம்பரையினரும் சிவார்ச்சனை, விபூதிருத்திராக்ஷ தாரணஞ் செய்துவருவது அனைவருக்குந் தெரிந்தவிஷயம்.

இனி நாராயணர் ஊர்த்தவ புண்டரதாரி யென்றோராதரவெடுத்துக் காட்டினரின்று. வாசுதேவோபநிடம் "ऊर्ध्वरेखां सहदेवं ब्रह्मादिभिरर्चितं विष्णुं चानन्तम्" "எனக்

கு்ப் பிரியமான விஷ்ணுசந்தனம் பிரமா முதலியராற்றரிக்கப்பட்டிருக்கின்றது.” என்று கூறுகின்றது. வைகுண்டத்திலுள்ளது விஷ்ணு சந்தனம். விஷ்ணுவின் பத்தர் களாகிய பிரமா முதலியர் அச்சந்தனத்தை விஷ்ணு பிரானது திருமேனியிற் சாத்தப்பட்ட பெருமையால் பிரசாதமாகக் கிரகித்துத் தரித்துக் கொண்டார்களென்றே தோற்றுகின்றது. அதனால் விஷ்ணு பிரானது நெற்றியிலூர்த்தவ புண்டரதாரண முண்டெனக் குறிக்கவேலாது. கிருஷ்ணபிரான் அங்கத்தில் நாடோறும் கோபிகைகள் (இடைச்சியர்) பூசிய சந்தனமே கோபீ சந்தனம். அவர் அங்கத்திற் பூசப்பட்டதால் புண்ணிய கரமானது என்று [illegible]” என்ற வாசுதேவோபநிஷத்வாக்கியத்தால் வெளியாகின்றது. லீலாகாலத்தில் கிருஷ்ண பிரான் அங்கங்களில் இடைப்பெண்கள் பூசியதால் கோபீசந்தனமெனப் பெயரிடப்பட்டது: அதனால் கிருஷ்ண பிரான் நெற்றியில் கோபீசந்தனதாரணஞ் செய்ததாக ஆகவில்லை. அதனால் கிருஷ்ணவதாரத்துக்கு முன்னர்க் கோபீசந்தன மின்றென்பது தெளிவு. வேதத்து விஷ்ணு சிவபூஜை செய்ததும் பாரதத்துக் கிருஷ்ணன் சிவபூஜை செய்ததும் கூறியதுபோலக் கண்ணன் உபமன்யு பகவானிடம் சிவதீக்கை பெற்றதைப் பற்றி வாயுசம்ஹிதை கூறியதும், தான் பெற்ற தீக்கை சிவபூஜைகளைத் தனது மாணுக்கனுகிய அருச்சுனனுக் குபதேசித்ததும், சிவோகம் பாவனையால் சீடன் குருவினிடத்துச் செய்யவேண்டிய முறைப்படி தன்னிடஞ் சிவபாவனை செய்து பூசிக்கச் செய்ததும், “அவனையே சரணடை” “அவனையே நானுஞ் சரணடைகின்றேன்” என்றுபதேசித்ததும், தன் அங்கத்தணிந்த கோபீசந்தனத்தை ஊர்த்தவ புண்டரமாக வணியும் பத்தரும் தான் நெற்றி முதலிய அங்கங்களிற் றரிப்பதும் உயர்

வொப்பற்றதும் ஆகிய விபூதியைக் கோபீசந்தனத்தின் மீது தரிக்க வாசுதேவோ பநிஷத்தில் விதித்ததும், விஷ்ணுபிரான்த் தாரணம் பஸ்மத்திரி புண்டரமென்று நன்கு விளக்குகின்றது.

இவையன்றி விஷ்ணு விஷ்ணுவினவதாரங்கள் பிரமா இருடிகள் பஸ்மத்திரி புண்டரதாரிகள் என வநந்த புராண வசனங்களிருக்கின்றன. இவ்விஷயமாய் ஸ்ரீ வெங்கட்டரமணதாசரவர்களும் சைவசண்டமாருதமாகிய சோமசுந்தர நாயகரவர்களும் எழுதிய நூல்களையும் பார்த்துண்மை யறிந்துய்வீராக.

விபூதிருத்திராக்க விஷயத்தி லோ ராக்ஷேபமுமின்றி ஸ்ரீமான் மஹாமஹோபாத்தியாயரவர்கள் எழுதிய நூலின் மேலும்பூர்வபட்சிதமது வன்மையின்மை கருதித்தாமே முன்வராணித்தமது மாணுக்கர் பெயரால் வீணுக்ஷேபங்களெழுதி விடுத்தனர். அவைகணிக்கத் தக்கனவன்றேனும் உண்மையறியார் மயங்காவண்ணம் உண்மையையெடுத்துக்காட்டினுமென்றறிக.

---

## இனியுக்தி யநுபவங்கள் சிறிது கூறுதும்.

### சித்திரோர்த்தவபுண்டரம்.

டஸ்பம், டசிதம் பூதி ரக்ஷை திரிபுண்டரம் என்றபெயர்களைப் போல சித்திரோர்த்தவ புண்டரம் என்றபெயர் ஆவது அதன் தாரணமாவது, வேதத்திலாவது உபநிஷத்துக்களிலாவது புராணங்களிலாவது வடமொழி தமிழ்நிகண்டுகளிலாவது படிக்கப் படவில்லை. நிகண்டிற்படிக்கப்படாததாலேயே ஷ பதம் அநுனகற்பிதமெனல் தெளிவாம். ஆசாரியராலேற் படுத்தப்பட்டதெனில் வேதத்தைத்தழுவாத ஆசாரியர்கற்பனைகள் அவைதிகமென்பது தடையற்றமுடிபு. இனித் தமிழ்ப்பாடையிலாவது நாமம் இராமம் திருமண் என்றபெயர்கள் சித்திரோர்த்தவபுண்டரத்துக்குப் பெயராய் ஒரு நிகண்டினும்படிக்கப் பட

வில்லே. திருமண்ணென்றிவர்கற் பித்துக் கூறும் பெயரும் வெள்ளைமண் மாத்திர மன்றி மஞ்சட்பொடியாகிய திருச்சூ ர்ணரேகை வேறிருப்பதால் பொருந்தாது.

ஆதலால் நாமம் என்பது அவைதிக நூதனகற் பனுபுண்டர மென்பது நிர்விவாத சித்தாந்தம். உண்மை யிங்ஙனமிருக்கக் கற்பித்தவதை நிலைப்படுத்திக் கொள்ள ஆறுவருடங்களுக்கு முன்ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் காத்தியாய னுேபநிடதமென்ெரு ன்றைக் கற்பித்து வெளிப்படுத்தினர். அஃது வேதத்தைத் தழுவாததாலும், உபநிடதக் கோருவை கூறும் முக்திகோப நிடதத்துக் கூறப்படாமையாலும், சர்வோப நிஷத்சார சங்கி ரகத்திற் கூறப்படாமையாலும், இதுவரை வழங்கிவருவதும் அச்சாய்வருவது மாகிய அஷ்டோத்தரசதோப நிஷத்துக்கோர் வையிற்காணப்படாமையாலும், புராணங்களில் உபப்பிரமணஞ் செய்யப்பட்டிராததாலும் கற்பனை யென்பது தெளிவு. காத் தியாயனுேப நிடதத்தை நூதனமாய்க் கற்பித்ததுபோல வேத த்தும் முக்தி கோபநிடதத்தினும் புராணங்களிலும் ஆங்காங்கு நாமம் கூறப்பட்டதாக இனிமேல் திருத்தி யமைத்தாலுளதாம். இந்தக் காத்தியாயன உபநிடதத்தைக் கற்பித்தது போலவே புதிய வரா கோபநிடதம் ஒன்று சுதரிசனுேபநிடதம் மகாசுதரி சனுேபநிடதம் முதலிய சில வுபநிடதங்களைக் கற்பித்திருக்கின் றனர். அவைகளும் அஷ்டோத்தர தசோப நிடதக்கோவையிலி ன்று ஆதலால் அவை முகம் மதியர் ஆளுகைக்காலத்தில் இஸ் லாமதப்பிரவேசஞ் செய்த மௌலாப் பிராமணர் கற்பித்த அல் லாவுபநிடதம்போல் மதிக்கத்தக்கன. ஆனல் அல்லா உபநிடத மிவற்றினு முன்னையது. இனிக் கிறிஸ்து உபநிடதமென்றபெ யராலு மொன்று வெளிவரும்போலும்.

## அங்காரக புண்டரம்.

அங்காரக புண்டரமென்னப்படும் கரிக்கோடும் அவைதிகம் வேதோப நிடதப் பிரமாண மின்மையால்.

## போது நோக்த வைஷ்ணவம்.

"ஹஷோஜ ஸிதஸவஷாஂமஂ" என்ற இராமரகசியோபநிஷ தமுதலிய பிரமாணங்களாலும், "வெளியநீறு" "நீறுசெவ்வே" முதலிய திருவாய் மொழிவசனங்களாலும், "ஜுஹொத ஸ ஸநா" என்றவாசுதேவோபநிடத முதலிய வசனங்களாலும், விஷ்ணுபிரானுக்கும் வைஷ்ணவர்களுக்கும் பஸ்மத்திரிபுண்டரமே சிறந்ததாரணம். வைதீக வைஷ்ணவர்களுக்கும் அக்கினிகாரியங்களுண்மையால், அன்னகாரியத் துண்டாம் பஸ்மம் அன்னவர் தரிக்கத்தக்கதாம்.

சாக்தம், கௌமாரம், காணுபத்தியம், சௌரம் இம்மதத்தினராலும் பஸ்பத்திரிபுண்டரந்தரிக்கப் படுகின்றது.

## ஸ்மார்த்தம்.

சோமயாகம் அக்கினி ஹோத்தர முதலிய அக்கினியிற் பிறந்த பஸ்மங்களும் தாரணத்துக் குபயோகமாக விதிக்கப்படுகின்றன.

## கிறிஸ்துசமயம்.

பழைய ஏற்பாடு. எண்ணாகமம். அதி 19. வாக்கியம். 5. "அதின் (கடாரியின்) தோலும் அதின்மாமிசமும் அதின் இரத்தமும் அதின் சாணியும் சுட்டெரிக்கப் படவேண்டும்" வாக். 9. "சுத்தமாயிருக்கிற ஒருவன் அந்தக் கிடாரியின் சாம்பலை வாரிக்கொண்டு பாளையத்துக்குப் புறம்பே சுத்தமான ஒரு இடத்திலே கொட்டிவைக்கக் கடவன்" வாக் 17. பாவத்தைப் பரிகரிக்கும் கிடாரியின் சாம்பலிலே கொஞ்சம் எடுத்து ஒரு பாத்திரத்திற்போட்டு அதின்மேல் ஊற்றுச் சலம்வார்க்க வேண்டும்" வாக். 18 "சுத்தமான ஒருவன் ஈசோப்பை யெடுத்து அந்த ஜலத்திலே தோய்த்து கூடாரத்தின் மேலும் அதிலுள்ள பணிமுட்டுகள் மேலும், அங்கே இருக்கிற ஜனங்களின் மேலும் தெளிக்கிறது மல்லாமல்"

புதிய ஏற்பாடு. எபிரேயர் அதி. 9. வாக். 13. "காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும் தீட்டுப்பட்டவர்கள் மேல்தெளிக்கப் பட்டசாம்பலும் சரீர சுத்தியுண்டாகும்படி பரிசுத்தப்படுத்தும்"

வெளி. அதி. 9. வாக். 4. தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மநுஷரை மாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்திரவு கொடுக்கப்பட்டது"

இவ்வனஞ் சொல்லப்படுகின்ற இந்தச் சாம்பல் பரிசுத்தஞ் செய்யாது, பூசக்கூடாது என்று குறித்து விலக்கும் வாக்கியம் பைபிளில் இன்று. குறித்துரையாத வேறுவாக்கியங்களைச் சாக்குக் கூறித் தங்கள் சமயநூலில் விளங்கக் கூறியதையுஞ் செய்யாது விடுக்கின்றனர். இவ்வாக்கியங்களால் கடாரிசாணி வெள்ளாட்டுக் கடாக்களின் சாம்பல் சரீரத்திற் பூசிக்கொண்டால் பாவம் போக்கும் பரிசுத்தஞ்செய்யும் அசுத்த சாமான்களைச் சுத்திக்கும் என்று கூறுவதால் முந்தியகாலத்தில் கிறிஸ்தவரனைவரும் பஸ்மதாரணஞ் செய்துவந்ததாகத் தெரிய வருகிறது.

## கத்தோலிக் கிறிஸ்தவர்.

அவர் சமயநூல் கூறுதலோடு அச்சமயத்தவர் மாசி மாதங்கடோறும் சாம்பரடிப் பெருநாளில் (Ash Wednesday) திருநீறுதரிப்பது பிரசித்தம்.

## யூதமதம்.

இந்த மதநூல்கடாரிசாணி ஆட்டுக்கடாசுட்ட சாம்பல் பாவம்போக்கும் சுந்தந்தருமென்று கூறு கின்றது. அதுதல்மூத் முதலிய கிரந்தங்கள். இந்த யூதமதம் பரிசேயமதம் சதுசேயமதம் என்றிருபகுப்புடையது. அவைகளினுட்பிரிவினராகிய ஏசேனர் ஏரோதியர் கலிலேயர் தோராபியுதேயர் முதலிய பலருட் பெரும்பாலார் ஷ விதியைக் கைக்கொள் கின்றனர்.

## முகம்மதியமதம்.

மொகரம்பண்டிகையில் பீர்களின் பிரசாதமாக பஸ்மந்தரு இன்றனர், நாகூர்முகமதிய ஆலயத்தும் பூதிப்பிரசாதம்வழங்கிவருகின்றனர்.

## மத்துவமதம்

ஊர்த்தவ புண்டரமும் அதன் மேற்கரிக்கோடும் தரிக்கும் மாத்துவர் ஜயஸம்மத்வசித்தாந் தோன்ஞகிநி சபாசரித்திரத்தில் பிராமணன் ஔபாசன முதலிய ஹோமஞ்செய்யவேண்டியதவசியமாதலால் அவைகளிலுண்டாம் ஹோமபஸ்மத்தைத்தாங்கள் வைஷ்ணவராயிருக்கினும் நெற்றியின் மாத்திரந்தரித்துக் கொள்ள வேண்டியதவசியந் தானென்று பிரமாணத்தோடு பிரசித்தப் படுத்தியிருக்கின்றனர்.

ஷை சபையின் மன்மதஸம்வத்திய சரித்திரத்தில்.

"4-வது பிரச்னே. ஷோமபஸ்மம் நெற்றியில் மாத்திரந் தரித்துக் கொள்வதற்குப் பிரமாணம் ஜயவத் ஸா ஸபாசரித்திரத்தில்எழுதப்பட்டது. பிரமோத்தர கண்டத்திலும் ஸ்மார்த்தானுக்கிரகமணிகையிலும் 'ஶிரோஞொடுவக்ஷஸம்யெஷுகி ஞகாநிகுர்யாசு" என்றிருக்கிறதல்லவா எந்தப்பிரமாணத்தாலிது குறைந்து போய்விட்டது.

ஸமாதானம் "திஞகாநிகுர்யாசு"என்னும் வாக்கியம் ஊர்த்தவ புண்டரத்தை ரூடியாகக்கிரக்கிறதே யல்லாமல் திர்யக்புண்டரத்தை யல்ல "யாரயெவைஷ்ணவீஂவாதீக்ஷாஂஶிவதீக்ஷாஂந வைஷ்ணவஃ" என்று பிரமாண மிருக்கிற தாகையால் வைஷ்ணவர்கள் ஸர்வாங்கபஸ்மதாரணஞ்செய்யக் கூடாது.

"5. ஹோமங்களை விடலாமா? சமாதானம் வைச்வதேவம்ஹோமந்தான் அதையெல்லோரும் ஆசரிக்கிறார்கள். ஔபாஸநம்சிலர் ஆசரிக்கிறதில்லை. ஆசரிக்கவேண்டியதுதான்

விதி. கூடாதென்பதற்குப் பிரமாணம் இதுவரையிலும் ஸபி கர்களுக்குத் தெரியவில்லை" என்று மெழுதியிருக்கிறார்கள்.

இவைகளால் ஔபாசனநதி அக்கிநிகாரியங்கள் அவசியஞ் செய்யத்தக்கன வென்பதோடு வைஷ்ணவர்களும் நெற்றி யின் மாத்திரம் பஸ்மதாரணஞ் செய்யவேண்டுமென்று மாத் துவரனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

வைதீகஹிந்துமதம்.

## BRIEF HISTORY OF ANCIENT AND MODERN INDIA.

By *RomeshChunderDutt c. i. e.* "These numerous ceremonies have been classified by Goutama under forty heads, twenty-one of which are sacrifices, and the remaining ninteen are mearly Domestic cerimonies. Young men after completing their education returned to their homes and lighted the sacrificial fire." "From this period they kept up the sacrificial fire in their houses, and performed daily sacrifices, offering libations of milk, morning evening, to the fire. Sacrifices were also performed at the new and full moon." "This was the form of Hindu religion in ancient times."

' இந்தியாவின் புராதன நூதன சரித்திரச்சுருக்கம். ரோமே ஷ்சந்திரடட் சி. ஐ. இ, "இந்தப்பல சடங்குகளும் கௌதமரி ஷியால் 40 பிரிவிற் பகுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 21-எக்கியங்கள் மீத 19-இல்வாழ்க்கைக்குரிய சடங்குகள். பாலி யர் கல்விகற்று முடிந்தபின் தங்கள் இல்லத்துக்குத் திரும்பி வந்து அக்கிநி ஆதாநஞ் செய்துக்கொள்வர்" அக்கால முதல்

அன்னவர் தங்கள் இல்லங்களில் யஜனுக்கிநியை ஆராதித்து நாடோறும் காலை மாலையில் அக்கினிக்குப்பால் ஆகுதிதந்து ஏக்கியஞ் செய்வர், அமைபௌரணைகளில் இட்டிகள் செய்வர். இது பூர்வத்தில் ஹிந்துக்களின் ஆசாரமுறை”

துவிஜர்க்குரிய 40 சமஸ்காரங்களில் இல்லச் சடங்குகள் போக 21 எக்கியகன்மங்களா யிருக்கின்றன. அவைகளை யநுட்டிப்பவர் அவற்றிலுண்டாம் பஸ்மதாரணஞ் செய்யவேண்டி வருகின்றன. அவைகளை விட்டுவிட்டால் பிராமணர்க் குரிய விசேட கன்மங்களே யில்லாமற் போகின்றன. இவ் வநுட்டானம் இற்றைக்கு 3300 - வருடங்களுக்கு முன்றொடங்கி நிகழ்ந்து வருவதாய் ஹிந்துதேச சரித்திரக்காரர்களாகிய அங்கிலேயரிற் பலரும் மேற்குறித்த சரித்திரக் காரரும் தீர்மானிக்கின்றனர். வேதத்திற் பெரும்பாகம் எக்கியங்களைப்பற்றியே கூறப்பட் டிருக்கின்றன. அவை யியற்றத் தகாதவெனில் அதன் வக்தாவுக்கும் அறியாமையேறும், இத்தகை அக்கினிஹோத்திராதி கன்மங்களை மறுக்கமுயல்பவர் கொள்கை எவ்வளவு வேதவிரோதமான தென்றறிஞர் அறியாமற்போகார். இராமாநுஜாசாரியர் பிறந்தது கலியுகம் 4118 - ல். அஃது இற்றைக்கு 884 - வருடங்க ளாகின்றன. அவர் தாந் திருமண்ணென்ற சித்திரோர்த்தவ புண்டரத்தைக் கற்பித்தவர். மத்துவாசாரியர் அவர்க்குப் பலவருடங்களுக்குப் பின்னவதரித்தவர். அவர் அங்காரக புண்டரத்தை (கரிக்கோட்டைக்) கற்பித்தனர்.) இச் சரித்திரங்களால் இந்துக்களின் பூர்வீக வைதீக புண்டரம் விபூதி யென்றும், பெரும்பாலும் சமையமனைத்திலுமுள்ள புண்டரம் நீறொன்றே யென்றும் இக் கருத்தனைத்தையும் திருவுள்ளத்தடக்கியே சூத்திரமாக “சமயத்திலுள்ளது நீறு” என்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமிழ் மறையிற் றிருவாய் மலர்ந்தருளினர் என்றுந் தெளிவாம்.

மந்திரம்—இரக்ஷை.

சைவம் பாஞ்சராத்திரம் வைகானசம்மாத்துவம் சாக்தம் காணுபத்தியம் கௌமாரம் சௌரம் ஆக்நேய மதத்தவரும், காளாமுகம் காபாலம் பாசுபதம் பைரவம் முகம்மதியம் முதலிய வெல்லாமதத்திற் சம்பந்தித்தவரும் பீடாபரிகாரம் முதலிய *வைதக்குறித்து மந்திரிப்பது பெரும்பாலும் விபூதியைக் கொண்டே † அன்றி கரி, மண், மஞ்சட்பொடிகளைக் கொண்டன்று. மந்திரங்கற்ற றிதித்துவரு மவ்வணமே புரிகின்றனர். அங்ஙனம் துன்பத்தினின்று இரக்ஷிப்பதாலேயே பூதிக்கு இரக்ஷையென்று பெயராயிற்று.

வைத்தியம்—(ஆயுள்வேதம்.)

சுத்தமான சாம்பற் சம்மந்தப்படும் விஷாணுக் கிருமிகள் தொற்றுரோகச் சிற்றுயிர்கள் தந்திரவமுறிஞ்சப்பட்டு மரணத்தையடையும், அசுத்த வணுக்களோடுள்ள காற்றுகள் அதிலுள்ள வணுக்களின் தீயசத்துகள் வறண்டுகெடச் சுத்தியாம்; திரவச்சத்தொழிய நசுக்கப்பட்ட, காயவைக்கப்பட்ட அல்லது சுட்டெரிக்கப்பட்ட பதார்த்தங்கள் அணுகும் திரவச்சத்தைத் தம்மிடங் கவர்ந்துகொள்ளுந் திறலுடைமையின். அத்தகைச் சாம்பல்களில் முள்ளுத்தண்டு கள்ளிமரம் போன்றவற்றின் சாம்பல்கள் சரீரத்திற் பூசிற் பட்டவிடத்தை சுட்டுப்புண்படுத்தும்; உட்கொள்ளிற் பலதீங்கு களியற்றும். அத்தகைத் தீங்குகளியற்றாததும், மற்றெல்லாச் சாம்பல்களைக் காட்டிலும் சத்துள்ளதும், திரவங்களைக் கவர்ந்து சீக்கிரஞ் சுவரவைக்கக்கூடியதும், விஷச்சத்துக்களைக் கெடுப்பதும், மெழுகப்பட்ட பூமியில் உண்டாம் கிருமிகளை நாசப்படுத்துவதும், தாதுக்களைக் கவர்ந்து கொள்வதும் உட்கொள்ளினும் பலரோகங்களைக்கெடுப்பதும், சோப்பு சீயக்காய் அரைப்புகளைக் காட்டிலும் சீக்கிரம் எண்ணெய்ச்சத்து அழுக்குகளைப் போக்குவதும், ஊனுப்

---

திருஞா. * "வருத்தந்தணிப்பதுநீறு" † "மந்திரமதாவதுநீறு"

புச் சத்துள்ளதுமாகிய சாணம் கோமயங்களின் சாம்பலாகிய விபூதிமிக்க பயனுள்ளது. பசுவின் நெய்விட் டெரிக்கப்பட்ட அரசங்கட்டைச் சாம்பலும் மிக்க பயனுள்ளது. அரசங்கட்டைச் சாம்பலும் கோமயச் சாம்பலுங்கலந்த விபூதி அதிகசற்குணமுள்ளது. பஸ்மம் புழுக்கள் பற்றமற் காத்தற்குச் சாம்பல் கலந்துவைத்த வித்துக்கள் அவைகளிற் புழுவுண்டாகியரித்து உழுத்துப்போகா திருத்தலும், பற்றிய புழுக்கள்சாதற்கும் அவரை முதலிய செடிகளில் புழு அசுகணி உண்டாம்பொழுது சாம்பலை மேற்றெளிக்கில் அவைநசித்துச் சுத்தமாதலும், சான்றும்.

## பஸ்மதாரணபேதங்களாலுண்டாம்பயன்.

உத்தூளநம் பஸ்மத்தைச் சரீரமுழுமையும் பூசிக்கொள்ளல், சரீரத்தின் மேற்படும் விஷாணுக் கிருமிகள், தொற்றுரோகச் சிற்றுயிர்கள், துர்வாயுக்கள் இவைகளின் விஷச்சத்துக்களை யுறிஞ்சிச்சரீரத்தி லக்குற்றங்களேறுமற் செய்யும். சிரசில் நீர்க்கொள்ளாது. நீரையுறிஞ்சிக்கொள்ளும், விஷக்காற்றுகள் சரீரத்துட் செல்லாமல் அணுத்துளைகளை யடைத்துக்கொள்ளும். அவதண்டநம் சரீரத்தில் பஸ்மம் அதிகமாய்ப் பற்றிக் கொண்டிருக்கும் பொருட்டு நீரிற்குழைத்துச் சரீரமுழுதும் பூசிக்கொள்வது. இஃது சரீரத்திலுள்ள மின்சாரச்சத்து (Animal Magnetism) வெளியேறிப் போகாமற் காக்கும். விஷக்கிருமிகள் பற்றலால்வரும் சருமரோகங்கள் வாராமற் றடுக்கும். சரீரத்துக்குக் காந்தியும் அழகுந்தரும். திரிபுண்டரம், உத்தூளநம் அவகுண்டநத்தின்மீது 16 - இடங்களில் மூவிரலால் கனமாய்த்தரிப்பது. (நேத்திரரோகம் பாதம் சிரசுகளிலிடும் பற்றுக்களாலும், இடுப்புவலி நெஞ்சுவலி முதுகிற் காற்றுப் பிடித்தலாலும், உட்பகுதியிலுள்ளநோய் மேற்பகுதியில் அக்கினி பளாஸ்திரி லேபன தைலங்களிடுவதாலும், தலைமுழுவது முள்ள வலி உச்சியில்வைக்கப்படுந் தைலேவை

டாலும், நரம்பு முதலியவற்றின் வழியாய் மருந்துச் சத்துப் பற்றி சௌக்கியப் படுதல்போல) உச்சியில் நெற்றியில் செய்யும் திரிபுண்டர தாரணத்தால் (கனமாய்த்த ரித்தலாகிய பஸ்மப்பற்றுல்) கண்டத்துக்கு மேற்பட்டதும், கண்டத்திற் றரித்தலால் துராகாரங்களால் வாய்தொண்டை அன்னுசயத்திலுண்டாவதும், மார்பிற் றரிப்பதால் நெஞ்சிலுண்டாவதும், நாபியிற் றரிப்பதால் இலிங்கத்திலும் நாபிக்குக் கீழ்ப்பகுதியிலும் உண்டாவதும், பிரட்ட பாகத்திற்றரிப்பதால் அபான முதலியவற்றி லுண்டாவதும், முழங்காலிற் றரிப்பதால் பாதங்களிலுண்டாவதும், விலாப்புறங்களிற் றரித்தலால் வயிற்றினுட் பகுதிகளிலுண்டாவதும், ஆகிய சிற்சில நோய்கள் நீர்த்தோடம் விஷாணுச்சம்மந்த தோடங்கள் சருமம்பற்றிய ரோகங்களை நிவிர்த்திக்கும் வாராமற்காக்கும்.* மேற்குறித்த இடங்களிலுண்டாம் பாவங்களைப் போக்குமென்று காந்தப்புராணங் கூறுகின்றது.

இத்தகைப் பஸ்மகவசம் உரோமாம்பர (Flannel) முதலியதாற் செய்த தடித்தசட்டைக் கவசங்களை யெப்பொழுதுந் தரிக்கமுடியாத வெப்பமுடைய ஹிந்துதேயத்துக்கு மிக்க வவசியமும் தேகசம்ரக்ஷணைக்குரிய சாதனமுமாம். மிகக் குளிர்ச்சியுடைய நாடுகளில் சட்டைக்கவச மெப்பொழுதுந் தரித்திருத்தலாவசியமாதலின் அன்னவர்க்கு மாத்துவ ரொப்புக் கொள்ளுகின்றபடி நெற்றியின்மாத்திரந் தரித்தல் போதுமானதாகலாம். குளிர்நாட்டிலுள்ளார் வைகறையிற் குளித்தலைக் கைக்கொள்ள வேலாமைநோக்கியே சாத்திரங்கள் நீர்க்குளிப்பினும் நூறுபங் கதிக பலனுடையது பஸ்மோத் தூளநமாகிய ஆக்கிநேயஸ் நாநம் என்று அன்னவர்க்குக் கதிகூறிற்று. இவைகளை "க்ஷயாக்ஷாஃ" என்ற பாரதமும் "ரக்ஷாயம்" என்ற

---

* திருஞா. "ஏலவுடம்பிடர் தீர்க்கும் இன்பந்தருவது நீறு."

இராமாயணமும் "ஸ்ரீராஜ்யஷிஷ்யதேஹ்ராமஸ்மீவவப்ரஸேஹ" முதலிய சிவபுஜங்கமும், "ஹஸிதசுவவிதாநாழ" என்ற ஆசாரியர் வசனமும் விளக்கும்.

இனி இந்தப்பூதியானது நீராடிய காலத்தும் வெளியிற் புறப் படுங் காலத்தும் அசுசியுடையாரைத் தீண்டிய காலத்தும் போகஞ் செய்தகாலத்தும் வேர்த்தகாலத்தும் சந்தியாகாலத் தும் தூங்குமுன்னரும் விழித்தபின்னரும் ஆகாரஞ்செய்தற்கு முன்னரும் பின்னரும் சரீரத்திற் பற்பமில்லா தழிந்தகாலத் தும் நாய் பூனை எலிகளைத் தீண்டியகாலத்தும் நோயுடையனாய் பரிசித்த காலத்தும், மறுபடி தரிக்கத்தக்கதென்று பூதிதார ணம் விதிக்கும் நூல்கள் கூறுவதால் அவற்றை யூகிக்கில் நீரோ ற்றம் விஷக்காற்று விஷாணுக்கள் பற்றல் நோய்பற்றல்களை நீக்கற்காகவும் பற்றுமற் காத்தற்காகவும் ஷை பூதிதாரணம் கூறப்பட்டதென்று வெளியாம். இவைகளைப்பற்றிக் கூறிய ஆயுள்வேத நூலாதரவுகளை விரிக்கிற் பெருகுமாதலிற் கருத்து மாத்திரங் கூறினும். இவையனைத்து மொருங்கூகிக்கில் சுரு தியுத்தி அநுபவ மூன்றாலும் பஸ்மதாரணஞ் சிறந்ததென்பது தடையற்ற முடிபாம்.

## (உருத்திராக்கம்) ஆயுள்வேதியர் கருத்து.

உருத்திராக்கம் சூக்கும மின்சாரமுள்ளது. அதைத் தரிக்கில் மின்சாரம் சரீரத்திற் பரவி இரத்தத்தைச் சுத்திகரித்து நாடிக ளுக்குச் சுத்தியும் பலமுந்தரும், மூளையைத் தெளிவுபடுத்தும். மனத்துக்கு உற்சாகமும் நிலையுந்தரும்- தொற்று ரோகங்கள் பற்றுமற்றடுக்கும். எத்துணையதிகந்தரிக்கின்றனரோ அத்து ணை மின்சாரம் அதிகரித்து இரத்த சுத்தியையும் தேகபலத்தை யும் மனோபலத்தையும் விருத்தி செய்யும். இதனாலேயே 1, 3, 6, 12, 16, 32, 51, 108, 300, 1008, எண்ணில் தரிக்கில் ஒன்றுக் கொன்றதிக பலமுடையது என்று நூல்கள் கூறுகின்

நன. இடையிற்சேர்க்கும் லோகபில்லையும் கோர்க்கும் கம்பி யும் பலருத்திராக்க மின்சாரத்தை யொன்று சேர்த்தற்கும், ரைமேயாட்டுப்பில்லை, பட்டுக்கயிறு தனித்தனி மின்சாரத் தைப் பிரித்துச் சரீரத்தேற்றுதற்கும் உபயோகமாம். நாவறண்டுபேச எழாமலிருக்கும் ஜன்னிதோட முதலிய ரோகங்களுக்கு உருத்திராக்க முதலியவற்றை உரைத்து நாவிற்பூசில் நாவிலுள்ளவறட்சி முதலியது நீங்கி நாநரம்புகளிற் பலமேறி நாவுக்குயிருண்டாய்ப் பேசச் சக்தியுண்டாவது அனைவருமறிந்த வுண்மை. அஃதிதற்குச்சான்றும். இதற்குக் கண்டாவிழ்தமென்று பெயர். கண்டம்=மணி (=உருத்திராக்கமணி). அக்குமணி, கண்மணி, கண்டி, கண்டிகையென்றும் உருத்திராக்கத்துக்குப் பெயர்கள். உச்சி காது கண்டம் கழுத்து ஸ்கந்தம் புயம் மணிக்கட்டு இடை இவ்விடங்களில் உருத்திராக்கந் தரிக்கவிதித்தது அவ்வவ்விடங்களில் மின்சாரத்தை யேற்றிச் ஜீவமின்சாரத்தைப்பெருக்கிச் சரீரத்துக்குநன்மைபுரிதற்பொருட்டாம். கண்டத்தில் 3 - இடங்களில் அதிகமாய்த்தரிக்க விதித்தது ஆகாரஞ்செல்லும் வழியாதலால் ஆகாரசம்மந்தப் படுந்தோடங்களை ஒன்றின் பின்னொன்றாய்ச் சுத்திகரித்தற் பொருட்டு. உருத்திராக்கதாரிகளுக்குத் தொற்றுரோகம் பற்றாது. சிலர்க்குப் பற்றுவது விதிப்படிதாரண மின்மைமுதலிய விசேடகாரணங்களால். தாம்பிரவர்ணமும் கெட்டியுங் கனமுமானவை மிக்க சத்துள்ளன.

மின்சாரமேற்றப்பட்ட லோக மோதிரம் பதக்கம் (Locket) முதலியன அங்கிலேயர் ஜர்மானியர் முதலியராற் செய்யப்பட்டும் பெரும்பாலாராற் றரிக்கப்பட்டும் வருகின்றன. அவைகளிலுள்ளசத்து செயற்கையாதலாற் சிறிது காலத்தில் நீங்கிப்போம். உருத்திராக்கம் இயற்கையில் சூக்கும மின்சாரமுடைய தாகையால் சத்து நீங்காது நிலைத்திருக்கும். ஆதலால் பலவிடங்களில் தொற்று ரோகங்கள் பிள்ளைப்பிணிகள் பற்றாது பலமதத்தினரும் குழந்தைகளுக்கு ஏகருத்திராக்க தாரணம் புரிகின்றனர். இஃது தேரை, கக்குவான், காமாலை என்ற நோய்களுக்குத் தரை, புங்கங்காய், அமுக்கராக்கிழங்குகளை, கழுத்து அல்லது புயங்களில், தனியாயும் குளிசமாடியும் தரிப்பதும் அதனால் அந்நோய்கள் நிவிர்த்தியாவதும் போன்றது. ஆதலால்

## ௲௮ உருத்திராக்கம் ஆயுள்வேதியர் கருத்து.

உருத்திராக்கம் நோய்வாராமற் காத்து இரத்தத்தைச் சுத்தி கரித்துப் பலந்தருதற்பொருட்டு எல்லா மதத்தினருந் தரித்துக் கொள்ளத்தக்க திவ்யாவிழ்தங்களி லொன்று. இதுபற்றியே தேரையர், “நீளுமதிதாகத்தை நீங்காமுத்தோடத்தை யாளும் விக்கல் பித்தத்தை யாற்றுங்கா—ஞளுமிருத்திராமற்கபத்ல்த வீட்டுமேதல்ல வுருத்திராக்கத்தின் வலியுன். என்றனர்.

புருஷார்த்தப் பிரபோதம்.

“ருத்ராக்ஷதாரணாத்ஸத்யோ ஹிம்ஸாஹீநவஜிதஃ ।
நிதர்ஸுவலாயகொவாயவியெஷூஷஸ்ருஊஸநிதெ”
ருத்திராக்ஷஜாபாலோபநிஷத். “ரகெஷாவஸ்ரீதராகம்”

உருத்திராக்கம் நோய்வாராமற் காத்தல் தீர்த்தலோ பத்தி யோகம் ஞானங்களுக் குபயோகமாகிய மன நிலை மைத் தன்மையும் உறுதியுந் தருகின்றது. ஆவைகள் பக்தி ஞானங்களடைதற்கும் புண்ணியம் புரிதற்கும் இன்றியமையா தசாதனங்கள் ஆதலாலும், தரிப்பாரைக் காணுந்தோறும் தெய்வத்தை நினைப்பூட்டுதலாலும், ஸ்ரீ உருத்திரன் நேத்தி ரத்தினின்று தோன்றியதாதலாலும், உபநிடதங்களே ஞான சாதனம், பேய் முதலியதாலுண்டாந் தோடங்களைப் போக்கு வது என்று கூறுதலாலும், பிர்மா விண்டு முதலிய மூர்த்திக ளாலும் தேவர் இருடியர் ஆன்றோர்களாலும் தரிக்கப்பட்ட ஆசரணையைப் புராணங்காடோறும் விளங்கக் காண்டலாலும், பக்த சின்னமென்று உபநிடதங்களும் புராணங்களு முத்கோ ஷிப்பதாலும்; (உருத்திராக்கம்) சுகவிருப்பமுடைய நல்லோ ரனைவரும் அணியத்தக்க அளவற்றபல நன்மைதரும் தாரண மென்பது தடையற்றசித்தாந்தம்.

சருவம் சிவம்.

## ஸ்ரீருத்திராக்க தூஷணகண்டந